

ALKI
-7-85
-1-50
கல்கி

புதியது

# பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு



# அதிக சுவையானது அதிக முழுமையானது




**நீங்கள் பாசத்துடன்
ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின்
வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.**

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரண சக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. அதிக முழுமையான திட உணவு.

உடல் நலத்தின் உறைவிடம்—க்ளாக்ஸோ


---

**இலவசம்!** குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்: உங்களது பிரதியைப்பெற தபால் மற்றும் இதர செலவிற்கு ரூ. 1/— தபால்தலை உள் வைத்து எழுதுவீர் இம்முகவரிக்கு—தபால் பெட்டி எண் 19119, (FCM-21) பம்பாய் 400 025.

---

CLARION/B/GX/4/203 TAM

# கப்பல்கள் எப்படிக் காணாமல் போகும்?



வங்காள விரிகுடாவில் வந்து கொண்டிருந்த நித்ய நானக், நித்ய ராம் என்கிற இரு கப்பல்களும் காணாமல் போய் விட்டதாகவும் மூன்று வாரமாய் நடக்கும் அதைத் தேடும் முயற்சி பயனளிக்கவில்லை என்றும் செய்திகள் வருகின்றன. அதெப்படி கடலில் வந்து கொண்டிருக்கும்போதே கப்பல்கள் முழுசாய்க் காணாமல் போய்விடும்? கேப்டன் விஸ்வநாதனைக் கேட்டபோது......

"இந்தக் கப்பல்கள் காணாமல் போகிற விஷயம் பொது மக்களுக்கு மட்டுமில்லாமல், கப்பல் போக்குவரத்து சம்பந்தப்பட்டவர்களுக்கும் விடை கண்டுபிடிக்க முடியாத பெரிய புதிராய்த்தான் இருக்கிறது.

"கப்பல்களில் ரேடியோ தொடர்பு சாதனங்கள் இருக்கும். ரேடியோ ஆபீஸர் இருப்பார். அவர் எந்த நிமிடமும் தரையிலுள்ள ரேடியோ நிலையங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். எது நடந்தாலும், மறு நிமிடமே தரையிலுள்ள ரேடியோ நிலையத்துக்குச் செய்தி அனுப்பி விடுவார்.

"அப்படியிருந்தும் கப்பல்கள் காணாமல் போயிருக்கின்றனவென்றால்... ஒன்று கப்பலில் கசிவு ஏற்பட்டு, தண்ணீர் உள்ளே புகுந்து, மூழ்கியிருக்கலாம். ஆனாலும் கப்பல் முழுசாய் மூழ்கக் குறைந்தபட்சம் சில மணி நேரங்களாவது ஆகும். இதற்குள் ரேடியோ ஆபீஸர் கப்பல் ஆபத்தில் இருப்பதைத் தெரிவித்து, உதவி கோரி ரேடியோ நிலையத்துக்கும், கடலில் இருக்கும் மற்ற கப்பல்களுக்கும் செய்தி கொடுத்திருப்பார்.

"இல்லையெனில், ஏர் இந்தியா விமானம் போல, வெடி வைத்துத் தகர்க்கப்பட்டிருக்கலாம். அப்போதும், கப்பலின் உடைந்த பகுதிகள் தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கும்; பயணிகள் உயிரோடு கிடைக்கவில்லையென்றாலும் அவர்களின் இறந்த உடல்களாவது கிடைத்திருக்கும்! ஒன்றுமே கிடைக்கவில்லை.

"இப்போது, இரண்டு கப்பல்கள் ஒரே சமயத்தில் காணாமல் போயிருக்கின்றன. ஒருவேளை இரண்டும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருக்கலாமோ! அப்போது கூட உடைந்த பகுதிகள் மிதந்து கொண்டிருக்கும்; கரையில் ஒதுங்கியிருக்குமே!

"கப்பலுக்கு வேறு எந்தவித விபத்து நடந்திருந்தாலும், பயணிகள் கப்பலில் உள்ள லைஃப் ராஃப்ட், லைஃப் பாய் ஆகியவற்றின் உதவியுடனோ, அல்லது நேரடியாகவோ கடலில் குதித்துத் தப்பிக்க முயற்சி செய்திருப்பார்கள்; பிழைத்திருக்கக் கூட வாய்ப்புகள் உண்டு; இந்த லைஃப் ராஃப்ட், லைஃப் பாய் இவையெல்லாமாவது கரை ஒதுங்கியிருக்குமே! இவற்றில் கப்பலின் பெயர் பொறித்திருப்பார்கள்; அதை வைத்துக் கண்டு பிடித்துவிடலாம்.

"என்ன ஆனாலும் கப்பலிலிருந்து செய்தி அனுப்புகிற கருவி கெட்டுப்போக வாய்ப்பில்லை; மின்சாரத் தடை ஏற்பட்டால் கூட பாட்டரியில் ஆட்டமாடிக்காக இயங்க ஆரம்பித்துவிடும்.

"தவிர, கடலில் உள்ள ஒவ்வொரு கப்பலும், அரைமணிக்கு ஒருதடவை, மூணு நிமிஷ நேரத்துக்குத் தம் ரேடியோவை 500 கிலோ ஹெர்ட்ஸில் திருப்பி வைத்து எங்கிருந்தாவது உதவிக் கோரிக்கை வருகிறதா என்று பார்க்க வேண்டும் என்பது நியதி! அதுமாதிரி எந்தக் கோரிக்கையும் காணாமல் போன கப்பல்களிலிருந்து வந்ததாய்த் தெரியவில்லை. மோசமான வானிலையும் இல்லை!

"சில வருடங்களுக்கு முன்னால், கேரளா ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான 'கைராளி' என்கிற கப்பல் காணாமல் போய் விட்டது. இன்றுவரை அதுபற்றி எந்தவித மான தகவலும் இல்லை. அதுபோல்தான் இவையும் எங்கள் தலையைப் பிய்த்துக் கொள்ள வைத்துள்ளன!"

பேட்டி: மௌஷ்மி.



# திருவண்ணாமலைத் தண்ணீரால் உயிர்ப்பலிகள்!

திடீரென்று, 'திருவண்ணாமலையில் குழாய்த் தண்ணீர் குடித்த ஐந்து பேர் பலி' என்ற செய்தியைத் தினசரிப் பத்திரிகைகளில் படித்தபோது அதிர்ச்சியாக இருந்தது. விஷச்சாராயம் குடித்துப்பலியானவர்களின் பட்டியலைப் பார்த்திருக்கிறோமே தவிர, இப்படிக் குழாய்த் தண்ணீரைக் குடித்துப் பலியானவர்களைப் பற்றிப் படித்ததில்லை. அந்தக் குழாய்த் தண்ணீரில் அப்படி என்னதான் கோளாறு? உண்மையைத் தெரிந்து கொள்வதற்காகத் திருவண்ணாமலைக்கே நேரில் புறப்பட்டுச் சென்றோம்.

திருவண்ணாமலையிலிருந்து சுமார் நான்கு கி. மீட்டர் தொலைவிலுள்ள சமுத்திர ஏரி மற்றும் சாத்தனூரின் மேல் மட்ட அணை ஆகிய இரண்டு இடங்களிலும் இரண்டு நீர்த் தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. இந்த இரண்டும்தான் திருவண்ணாமலை நகர்வாசிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றன. அதில் சாத்தனூரின் மேல்மட்ட அணை திருவண்ணாமலை குடிநீர் சப்ளைக்காகவே கட்டப்பட்டது.

அந்தத் தொட்டிகளை நாங்கள் பார்க்கச் சென்றபோது, அந்தப் பகுதியில் வசிக்கும் ஒருவர், "இந்தத் தொட்டியிலிருந்து சில நாட்களுக்கு முன்னால் செத்த பாம்புகள், எலிகள், பெருச்சாளிகள் போன்றவற்றை எடுத்துப் போட்டார்கள். ஆனால் இந்த விஷயமே வெளியில் பரவாதபடி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமுக்கிவிட்டார்கள்!" என்று சத்தியம் செய்யாத குறையாகச் சொன்னார்.

நகரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தபோது நகரின் பல இடங்களில் தரை மட்டத்திலுள்ள தண்ணீர்க் குழாய்களிலிருந்து ஆங்காங்கே பள்ளம் தோண்டித் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப் பிடிப்பதால் சாக்கடைத் தண்ணீரும் குழாய்த் தண்ணீரோடு சேர்ந்து விடுகிறது. அதனால் குழாய் நீரே விஷ நீராகிக் குடிப்பவர்களைக் காலரா தாக்குகிறது. வாந்தி, பேதி வந்து இறந்து போகிறார்கள். இது நகரைச் சுற்றி வந்தபோது ஓர் அதிகாரி சொன்ன தகவல்.

"இது மாம்பழ சீசன். எங்கு பார்த்தாலும் மாம்பழங்கள் கொட்டிக் கிடக்கின்றன. அதனால் ஈக்கள் பிரச்னை அதிகமாகிக்காலரா தாக்குகிறது!" என்றும் சிலர் சொன்னார்கள்.

"நகரத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும் தண்ணீரை 'சாம்பிள்' எடுத்து டெஸ்ட் செய்து பார்த்ததில் காலராவுக்கான சாத்தியக் கூறுகளே தெரியவில்லை. குழாய்த் தண்ணீரை உபயோகிப்பவர் மட்டுமின்றி, கிணற்றுத் தண்ணீரை உபயோகிப்பவர்களும் காலரா தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதுதான் புரியாத புதிராய் இருக்கிறது!" என்றார் இன்னொருவர்.

உண்மையில் என்னதான் காரணம்? திருவண்ணாமலையிலுள்ள குடிநீர் பின் எப்படித்தான் விஷமானது? காலரா எப்படித்தான் பரவுகிறது?

இறந்துபோன வெங்கடாஜலத்தின் மகன், மனைவி ஆகியோரைச் சந்தித்தோம். அறுபத்திரண்டு வயதான கட்பீஸ் துணி வியாபாரியான அவர் வியாபாரத்தை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்ததும் மயக்கமாய்ப் படுத்தவர்தான்! மருத்துவமனைக்குக் கொண்டு போய், ஆறேழு பாட்டில் குளுகோஸ் ஏற்றியும் பயனில்லாமல் இறந்து போய் விட்டார்; சொன்னார்கள்.

நான்கு வயது சிறுமி பவானி சத்துணவு சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்தாள். சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாடிக் கொண்டிருக்கும்போதே வாந்தி எடுத்தாள். பேதியானது. உடனே மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றிருக்கிறார்கள். வைத்தியம் பார்க்கவும் உடம்பு தேறியது போல் தோன்றியிருக்கிறது. காப்பி, டீ ஏதாவது வாங்கித் தரும்படி குழந்தை கேட்டிருக்கிறாள். தாய் ராஜகுமாரியும் வாங்கிக் கொடுத்திருக்கிறார். டீ குடிக்கும்போதே பேதியாகி மயக்கமாகிவிட்டாளாம். பின், ''குழந்தையின் உடம்பைத்தான் ரிக்‌ஷாவில் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தோம்!'' என்று கதறியழுதார் ராஜகுமாரி.

பவானிக் குழந்தையின் பாட்டியான கனகம்மாவும் காலரா தாக்குதலால் பேத்தியைப் பின்தொடர்ந்து விட்டார்! மொத்தம் இப்படி ஏழு பேர் உயிரிழந்திருக்கிறார்கள். மருத்துவமனைக்கு வராமல் மேலும் சில பேர் இறந்திருக்கக் கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

இப்போது காலரா தாக்கியதால் மருத்துவமனைக்குச் சென்று நூற்றுக்கணக்கானவர்கள் சிகிச்சையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்ப்பதற்காகத் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்குச் சென்றோம். ஒரு வார்டுக்குள் அழைத்துச் சென்று காட்டினார் டாக்டர் செல்லையா. பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாட்டில் பாட்டிலாகக் குளுகோஸ் ஏறிக் கொண்டிருந்தது. அவர்களோடு பேசிப் பார்த்தோம்.

''நான் டைலர் கடை வெச்சிருக்கேன். போன மாதம் வெள்ளிக்கிழமை (28 ஆம் தேதி) ராத்திரிதான் டிரபிளே ஆரம்பமாச்சு. வாந்தியும் பேதியும் மாறிமாறிப் போனதால் உடம்பே பலவீனமாயிடுச்சு. ஓம வாட்டர்

• தரையைத் தோண்டித் தண்ணீர் பிடிக்கிறார்கள்.





• மருத்துவமனையில் சிகிச்சை

• இரண்டு தண்ணீர்த் தொட்டிகளில் ஒன்று.





• ராஜேந்திரன்: ஓம வாட்டர் குடிச்சுப் பார்த்தேன் நிக்கலே.



• மல்லிகா: பக்கத்து வீட்டிலிருப்பவர்களுக்கும் இதே நோய்தான்!

குடிச்சேன். அப்பவும் நிக்கலே. இங்கே வந்து காட்டினேன். குளுகோஸ் ஏத்தறாங்க. இப்ப பரவாயில்லே. குழாய்த் தண்ணிலேதான் ஏதோ கோளாறுன்னு பேசிக்கிறாங்க!'' என்றார் ராஜேந்திரன் என்பவர்.

''பத்து போர்ஷன்கள் இருக்கிற வீட்லே நான் குடியிருக்கேன். நேத்து மத்தியானம் வாந்தியெடுத்து பேதியாச்சு. ஒரே மயக்கமா வந்தது. உடனே ஆஸ்பத்திரி வந்து அட்மிட் ஆனேன். எங்க வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் சிலருக்குக் கூட இதுமாதிரிதான் ஆயிருக்கு!'' என்றார் மல்லிகா.

''திடீரென இப்படி ஏராளமான பேஷண்டுகள் வரவே, நிலைமையைச் சமாளிக்கப் போதிய குளுகோஸும் மற்ற மருந்துகளும் இல்லை. உடனடியாக உள்ளூர்க் கடைகளிலிருந்து வாங்கியும் வேலூரிலிருந்து வரவழைத்தும் நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருக்கிறோம். ஆஸ்பத்திரி ரெகார்டுபடி இதுவரை சுமார் 180 பேர் சிகிச்சைக்கு வந்திருக்கிறார்கள். இந்த நோயை ஏ.ஜி.இ. (அக்யூட் காஸ்டிரோ என்டிரைடிஸ்) என்று சொல்வார்கள்!'' என்றார் டாக்டர். காலரா என்ற பெயரை அவர் உபயோகிக்காவிட்டாலும் ஊர் ஜனங்கள் காலரா தாக்குதல் என்றே எண்ணுகிறார்கள்.

குழந்தைகள் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த பகுதிக்குச் சென்று பார்த்தபோது மயங்கி விழுந்த சிறுவர்களும், சிறுமிகளுமாய் ஏக கூட்டம். அத்தனை பேரும் காலரா தாக்குதலுக்கு உள்ளானவர்கள்தானும். இதனால் சில குழந்தைகளும் இறந்து போயிருக்கின்றன. ஆனாலும் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் காலராவினால் இறந்தவர்களின் பட்டியலோடு சேர்க்காமல் விட்டுவிட்டார்கள் என்று நம்பத் தகுந்த சிலர் கூறுகின்றனர். இதுவரை காலராவினால் மருத்துவமனையிலேயே ஏழு பேர் இறந்திருந்தாலும் ஐந்து பேர் என்றுதான் அதிகாரபூர்வமாகச் சொல்லுகிறார்கள். ஏன் அப்படி? கேள்விக் குறியோடு முனிசிபல் அலுவலகம் போனோம்.

காலரா பரவ ஆரம்பித்தவுடனேயே வேலூரிலிருந்து மாவட்ட மருத்துவ அதிகாரி

## அடுத்த இதழில்...



## ''அரசே ஆலயங்களை விட்டு வெளியேறு!''

## —ஆவேசமாகப் பேசுகிறார் இந்து முன்னணித் தலைவர்

யும் மற்ற அதிகாரிகளும் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தனராம். சென்னையிலிருந்து குடும்பநலத்துறை உயர் அதிகாரியும் வந்திருக்கிறார். தவிர, வேலூரிலிருந்து காலரா தடுப்புப் பிரிவின் பிரத்யேக வேன் ஒன்றும் வந்து நோய்க்கான ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கிறது.

முனிசிபல் நிர்வாகத்தினர் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் சென்று தடுப்பு மருந்துகளை அடித்துச்செல்கிறார்கள். காலரா தடுப்பு ஊசியும் போட்டுச் செல்கிறார்கள். இதை அங்குள்ள மக்களே வியந்து பாராட்டுகிறார்கள்.

வடார்க்காடு மாவட்ட கலெக்டர் டானியல் குணநிதி செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே திருவண்ணாமலைக்கு வந்து, நகரின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்வர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறியிருக்கிறார். அதோடு பொது மக்களை அவரவர் வீடுகளில் சந்தித்து, சுத்தத்தின் அவசியம் பற்றியும், தண்ணீரைச் சுட வைத்துக் குடிக்கச் சொல்லியும் அறிவுறுத்தினாராம்.


உண்மையில் இந்தத் திடீர்த் தாக்குதலின் மூல காரணம்தான் என்ன? ஒரு சானிடரி இன்ஸ்பெக்டரை விசாரித்தபோது, "இதற்கு இன்னதுதான் மூல காரணம் என்று எதையும் குறிப்பாகக் கண்டு பிடிக்க முடியவில்லை!" என்று சொன்னது வியப்பாக இருந்தது.

ஆனாலும் இதற்கு மருத்துவ ரீதியாக — விஞ்ஞான ரீதியாக என்ன காரணங்களைக் கண்டு பிடித்துச் சொன்னாலும் நாங்கள் அங்கேசுற்றிப்பார்த்தவரையில்எங்களுக்குத் தெரிந்தது: அங்கே சுகாதாரம் என்பது படுமோசமான நிலையில்தான் இருக்கிறது. அதனாலேயே ஈக்களும், கொசுக்களும் உற்பத்தியாகி நோய்களைப் பரப்புகின்றன என்பது தான்.

இதற்குஎன்ன காரணம்? சுதந்திரம்பெற்று முப்பத்தேழு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் கோடிக்கணக்கான மக்கள் சுகாதாரத்தைப் பற்றிய அத்யாவசியக் கல்வி கூடப் பெறாமல், அளிக்கப்படாமல் இருக்கிறார்கள். மேலும் அடிப்படை சுகாதார வசதிகள் அவர்களுக்குச் செய்து தரப்படவும் இல்லை. இரண்டும் கிடைக்காத நிலை இன்னமும் நீடிக்கும் அவலம்தான் வெட்கத்திற்குரிய விஷயம். இன்று திருவண்ணாமலையில் நடந்து கொண்டிருப்பது போலச் சாவுகள் ஏற்படும் போதுதான் அரசாங்கமும் அதிகாரிகளும் உதவிக்கு ஓடுகிறார்கள் என்பது அவமானத்திற்குரிய விஷயம். இதே நிலை நீடித்தால்...... இன்று திருவண்ணாமலையில் நடந்து கொண்டிருக்கும் இந்தச் சாவுகள் நாளை மற்ற ஊர்களுக்கும் பரவாது என்பதற்குஎந்தவிதமான உத்திரவாதமும் இல்லை!

— சந்திரமௌலி

படங்கள்: தாமு



மனித வடிவில் வாழும் கடவுள் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஒருவர் தான். அதனால்தான் மூன்று முறை செத்துப் பிழைத்தும் இந்தத் தென்னாட்டு அரியணையில் செங்கோல் ஏந்தியிருக்கிறார்.

—கவிஞர் முத்துலிங்கம்.

எம். ஜி. ஆர். யார் மீதும் எந்தப் பழியைப் போடுவதற்கும் அஞ்சாத அரக்க குணம் படைத்தவர். மனசாட்சி இல்லாதவர். அதனால்தான் நான் லஞ்சம் வாங்கியதாகக் கூறி என்னை மந்திரி பதவியில் இருந்து நீக்கியதாகக் கொஞ்சம் கூட ஈவு இரக்கமின்றித் தெரிவித்தார்.

—எஸ். டி. சோமசுந்தரம்.

திருச்சியில் மனோகரன் என்று ஒரு பையன். அவன் கள்ளச்சாராயம் விற்பவன். கள்ள மார்க்கெட்டில் சினிமா டிக்கெட் விற்பவன். ஒருநாள் அவன் குடித்துவிட்டுப் படுத்திருந்தபோது வேஷ்டியில்தீப்பிடித்து இறந்துபோனான். உடனே குமரி அனந்தனும் அவரது தொண்டர்களும் இறந்து போன அவனைக் காட்டி, "தொண்டா! நீ போய் விட்டாயா?" என்று அழுதார்கள். கருணாநிதி கட்சிக்காரர்கள் சும்மா இருப்பார்களா? அன்பில் தர்மலிங்கம் போனார். "வீர மறவா! நீ போய் விட்டாயா?" என்று ஒப்பாரி வைத்தார்! திருச்சிக்கு வந்த கலைஞர் அப்போது என்ன பேசினார் தெரியுமா? "நம் மனோகரன் இருக்கிறானே ... அவன் எப்படிப் பட்ட தியாகி தெரியுமா? அவன் விட்டுச் சென்ற பணியினை நாம் தொடர வேண்டும்!" என்று பேசினார்.

—முசிறிப்புத்தன்.

நாங்கள் இருக்கிற காரணத்தால் தான் தமிழ்நாட்டில் தீவிரவாதிகள் இல்லை. கருணாநிதியோ, பேராசிரியர் அன்பழகனோ அல்லது கழகத் தலைவர்களோ இருக்கிற இடம் காலி செய்யப் பட்டால் அந்த இடத்தை நிரப்புகிறவர்கள் சீக்கியத் தீவிரவாதிகளை விட பயங்கரவாதிகளாக இருப்பார்கள். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!

—கலைஞர் மு. கருணாநிதி.



# ர.சு.நல்லபெருமாள்

எழுதும்

# உணர்வுகள் உறங்குவதில்லை

பக்கத்துக்குப் பக்கம் பரபரப்பான நாவல்

**கல்கி**

ஆகஸ்டு 4உ ஆண்டு மலரில் ஆரம்பம்



பக்யராஜ் பதில்கள்

**ஆரம்பம்**

**கல்கி நேயர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து வருவார்**

**ஆகஸ்டு 4உ**

# கல்கி

**ஆண்டுமலர்**

## கோவா

சிறப்பிதழாக மலர்கிறது







தீராத விளையாட்டு
சாயி
பகவான் பாபாவின்
மணிவிழாவையொட்டி
ரா. கணபதி
எழுதும் தொடர்





அமரர் கல்கி நினைவுச்
சிறுகதைப் போட்டி
ரூ1000
முதல் பரிசுக் கதை

அதிக பக்கங்கள்: அதேவிலை.


நாமதான் திருடனை லபக்னு பிடிக்கத் தாவும் பறக்கும் விமானம் வாங்கியிருக்கோமே!.. நம்மை யாரும் தாக்க முடியாது!.
ஜனதா
லோக் தளம்
பாரதீய ஜனதா
வாத்யம் தான் ஆடான் வாத்யமே தவிர பல்லவி பழைய பல்லவி தான்!.. எங்களுக்கு ரசிக்க வில்லை!
ஈழப் போராளிகள்



கல்கி

1985 ஜூலை 21
மலர் 43 இதழ் 51
குரோதன ஆடி 6



# கடையைக் கட்டுமா கறுப்புப்பணம்?

ராஜாஜி போன்ற பேரறிஞர்களும் பொருளாதார வல்லுனர்களும் அபரிமிதமான வரிகள் வரி ஏய்ப்புக்கு வழி வகுக்கும்; பர்மிட் லைசென்ஸ் கண்ட்ரோல் ஆட்சியில் லஞ்ச ஊழல் மிகுதியாகும் — இவ்விரண்டும் கறுப்புப்பணம் அதிகரிக்கவே வழிவகுக்கும்; நாட்டின் பொருளாதாரம் சீர்குலையும் என்று நீண்டகாலமாக எச்சரித்து வந்தும் சமீப காலம் வரை, எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது.

ராஜீவ்காந்தி பிரதமர் பதவி ஏற்ற பிறகுதான் தவறு உணரப்பட்டு வரிகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன. சில வரிகள் ஒழிக்கப்பட்டும் இருக்கின்றன. பர்மிட் லைசென்ஸ் கண்ட்ரோல்கள் பல நீக்கப்பட்டும் உள்ளன.

'ஓரிரு ஆண்டுகளுக்கு வருமான வரியே கிடையாது என்று அறிவித்தால் கறுப்புப் பணமெல்லாம் வெள்ளையாகிப் புதிய தொழிலகங்களில் முதலீடாகி, பொருளாதார வளம் பெருகும்' என்ற சிலரது கணிப்பு, சரியானதல்ல. 1983—84—ல் சுமார் 35,000 கோடி ரூபாய் கறுப்புப்பணம் நாட்டில் உருவானதாகக் கருதப்படுகிறது. அத்தனையும் திடீரென்று புழக்கத்துக்கு வந்தால் பணவீக்கமும் கூடவே விலைவாசி உயர்வும் சாமானிய மக்களை வாட்டி வதைக்கும்.

மத்திய நிதி அமைச்சர் வி.பி. சிங் வெளியிட்ட கறுப்புப் பண ஆய்வறிக்கை எந்தத் துறைகளில் கறுப்புப்பணம் மிகுதியாக உள்ளது என்பதைக் கூறுகிறது.

அறிக்கையை அலசிப் பார்த்த வி.பி. சிங் அதன் சில சிபாரிசுகளை ஏற்கெனவே அமுல்படுத்தியிருக்கிறார். ஆனால் என்னதான் வரிகளைக் குறைத்தாலும் கறுப்புப்பணம் பண்ணியே பழகி விட்டவர்களுக்குச் சட்டென்று சரியான கணக்குத் தரக் கைவராது. சில காலம் சென்றால் கறுப்புப் பணம் வைத்துக்கொண்டு அஞ்சி அஞ்சி வாழ்வதைவிட கணக்குக் காட்டி அரசு நியாய அளவில் விதிக்கும் வரியைச் செலுத்தி மிகுதியை மீண்டும் முதலீடு செய்வதே லாபகரம் என்பதை உணர்வார்கள். அந்த நிலை ஏற்படும் வரை வரிகள் குறைக்கப்படவும் வேண்டும்; வரி ஏய்ப்போரைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதில் தீவிரம் காட்டப்படவும் வேண்டும். யாரிடமும் தயவு தாட்சண்யம் கூடாது.

இதே அறிக்கை, உற்பத்திக்கு உதவாத அரசாங்கச் செலவினங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போவதை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது. இதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கப் போவதாக இது வரை கோடிகாட்டக் கூட இல்லை! இது விசனத்துக்குரியது எனில், ரூபாயின் மதிப்பைக் குறைக்கலாம் என்று அறிக்கை கூறியுள்ள யோசனையை அரசு ஏற்காமல் நிராகரித்தது பாராட்டுதலுக்குரியது.

அரசு செய்யக்கூடாத மற்றொரு விஷயமும் உண்டு. முன்பு போல் 'பேரர் பாண்ட்' விநியோகித்துக் கறுப்புப் பணத்தை அதில் முதலீடு செய்ய அனுமதிக்கவே கூடாது. இது நேர்மையாக வரி செலுத்துபவரைத் தண்டித்து, வரி ஏய்க்கும் அயோக்கியர்களைத் தட்டிக் கொடுத்துச் சலுகை காட்டுவதாகும்.

மற்றொரு முக்கிய விஷயம். நமது தேர்தல் முறையில் கறுப்புப்பணம் முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுத் தேர்தலை எளிதாகவும் செலவற்றதாகவும் ஆக்கினாலொழிய தேர்தலிலும் நேர்மை — நியாயம் இராது; கறுப்புப் பண ஆதிக்கமும் நாட்டிலிருந்து ஒழியாது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.



உள்ளுக்குள்ளேயே ஆபத்து!

* மு. சிவஞானமுருகன், ஸ்ரீவைகுண்டம்.

? சுதந்திரமும், ஜனநாயகமும் எவ்வாறு இருக்க வேண்டும்? கணவன் — மனைவியாகவா? மாமியார் — மருமகளாகவா? தலைவன் — தலைவியாகவா?

! தலைவன் தலைவியாக! ஏனெனில் பெரும்பாலான கணவன் — மனைவி உறவில் ஆண்டான், அடிமை மனப்போக்குத்தான் அதிகம். அதேபோல மாமியார் — மருமகள் உறவிலும் ஆக்ரமிப்புத்தான் அதிகம் இருக்கும். தலைவன் — தலைவி உறவு ஒன்றில் மட்டும்தான் எல்லையற்ற அன்பும், உண்மையான சமத்துவமும் இருக்கும்.

* ஏ. விவேகானந்தன், திருச்சி — 8.

? திருச்செந்தூர் கொலை வழக்கு பற்றிய அறிக்கையை அரசு இன்னமும் வெளியிடாதது ஏன்?

! பால் கமிஷன் அறிக்கையை அரசு எப்போதோ வெளியிட்டுவிட்டது; அதன் மீதான நடவடிக்கைகளைத்தான் எடுக்க மறுக்கிறது. காரணம், அது சம்பந்தப்பட்டவர்களுக்குச் சாதகமாக இல்லை என்பதுதான்.

* ஆர். நாகராஜன், செம்பனார்கோவில்.

? மூக்கில் விரலை வைக்கும் அளவுக்கு பஸ் கட்டணம் உயர்ந்துவிட்டதே?

! உங்களுக்காவது மூக்கில் விரலை வைக்கும் அளவுதான். பலருக்கு அது வயிற்றில் அடித்துக் கொள்ளும் அளவு, தெரியுமா!

* ந. வே. சுகவனம், சேலம் — 1.

? குமரி அனந்தனின் வெளிநாட்டுப் பயணம் பயனுள்ளதாக அமைந்ததாமே!

! வெளிநாட்டுப் பயணம் மட்டுமல்ல; மாவட்ட வாரியான சுற்றுப் பயணத்தைக்கூட அவர் பயனில்லாமல் செய்ய மாட்டார்.

° மு. மதிவாணன், அரூர்.


? பேய், பிசாசு இவற்றில் நம்பிக்கை உண்டா?

! உண்டு. லஞ்சப் பேய், ஊழல் பிசாசு ஆகியவற்றைச் சொல்கிறேன்.

° பாரதிவசந்தன், புதுச்சேரி — 5.

? உண்மையிலேயே நமது நாட்டில் நீதிமன்றங்கள் சுதந்திரமாகச் செயல்படுகின்றனவா?

! 'நீதிமன்றங்களுக்கு வெளியிலிருந்து வரும் ஆபத்துக்களைவிட உள்ளுக்குள்ளேயே



அழுக்கு.....

இருக்கும் ஆபத்துக்கள்தான் அதிகம்!' என்று அண்மையில் ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி ஒய். வி. சந்திரசூட் அவர்களே கூறியிருக்கிறார். அதிலிருந்தே புரியவில்லையா?

## காதலில் தோல்வியுற்றோருக்குத் தாங்கள் கூறும் அறிவுரை?

* சி. ஆர். நாகராஜன், வளவனூர்.

? குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காத கிராமங்களிலெல்லாம் தமிழக அரசு நவீன கழிப்பறைகளைக் கட்டியுள்ளதே. இதிலிருந்து என்ன தெரிகிறது?

! கட்சிக்காரர்கள் பிழைப்பதற்கு எத்தனையோ காண்ட்ராக்ட்டுகளைக் கொடுக்கிறார்கள். அவற்றில் இதுவும் ஒன்று; அவ்வளவுதான்!

* எஸ். ஆரோன்பாபு, திருச்சி — 17.

? காதலில் தோல்வியுற்றோருக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

! நீங்கள் காதலிக்கும் ஒரு பெண்ணைவிட உங்களைக் காதலிக்கும் ஒரு பெண்ணே மேலானவள் என்பதை இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள் என்பதுதான்.

(* இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது.)

* ஆ. வெங்கடேசன், பெரியார்நகர் (சென்னை)

? எந்த உரிமை இல்லை என்று பெண்கள் சம உரிமைக்காகப் போராடுகிறார்கள்?

! பெரியார் நகரிலிருந்தா இப்படியொரு கேள்வி! சட்டபூர்வமாக அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகளெல்லாம் நடைமுறையிலும் வழங்கப்பட வேண்டும் என்றுதான் போராடுகிறார்கள்.

* மாதவ. இராமன், கிருஷ்ணகிரி.


? 'சாதிக்கொரு நீதி' என்பதுபோல் சாதிக்கொரு சங்கம் அமைவது எதிர்காலத்திற்கு உகந்ததா?

! ஜாதியின் பெயரால் எது நடந்தாலும் அது வருந்தத்தக்க விஷயமே.

* நெல்லை சங்கரன், திருநெல்வேலி.

? அழுகை கேரக்டர்களுக்குப் பொருத்தமானவர் சரிதாவா? சுஜாதாவா?

! இந்தக்கேள்வியைஎன்னைக்கேட்பதற்குப் பதிலாக உங்கள் மனைவியை கேட்டுப் பாருங்கள். சுஜாதா என்ற பெயரைக் கூறியதுமே கண் கலங்குவார்!


வருந்தியது போதாது!

* டி. ஆர். சந்திரசேகர், சென்னை—44.

? கிருஷ்ணா ஆற்றுக் குடிநீர் சென்னைக்கு எப்போது வரும்?

! கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வருவதென்பது என்டி ஆர். எம்.ஜி.ஆர். கைகளில் மட்டும் இல்லை. அது கர்நாடக முதல்வர் ஹெக்டே, மகாராஷ்டிர முதல்வர் சிவாஜி ராவ் (இப்போதைக்கு!) ஆகியோரின் கைகளிலும் இருக்கிறது. கூடவே மத்திய அரசும் அனுமதி வழங்க வேண்டும்! மத்திய அரசு பரிசீலிக்க ஆரம்பித்திருக்கும் இந்த வேளையில், 'அதனால்கர்நாடக நீர்ப்பாசனத்திற்கு ஆபத்து' என்று ஹெக்டே எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். சிவாஜிராவும் ஹெக்டே வழியைப் பின்பற்றினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. கிருஷ்ணாவை 'கோவிந்தா' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது!

* ஆர். அரிகோபி, குடியாத்தம்

? சட்டமன்ற உறுப்பினர்கள் ஒழுங்காகச் சட்டசபைக்கு வருவதில்லை என்று நாவலர் வருத்தப்பட்டுள்ளாரே?

! சட்டசபைக்குப் போனாலும் போகாவிட்டாலும் சட்டசபைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு 'தினப்படி'களை மட்டும் ஒழுங்காக வாங்கிக் கொண்டிருக்கிறார்களே, அதற்காகவும் சேர்த்து நாவலர் வருத்தப்பட்டிருக்கலாம். தப்பித் தவறி சட்டசபைக்குள் இருக்கும்போது சகிக்க முடியாத வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்களே, அதற்காகவும் வருத்தப்பட்டிருக்கலாம்.

* சலீம்தமீஜுதீன், நெல்லிக்குப்பம்.

? எம். ஜி. ஆர். பொதுமக்கள் மத்தியில் பேசினாராமே?


! அவர் எங்கே பேசினார்? 'அப்புறம் பேசுகிறேன்.....' என்றுதானே சொன்னார்.

* ஜி. ராஜசேகர், வலங்கை

? சத்துணவு சாப்பிடும் குழந்தைகளின் உயரம் அதிகரித்துள்ளதாக அமைச்சர் சௌந்தரராஜன் கூறியுள்ளாரே?


! அவர் பார்த்த நேரத்தில் எந்தச் சிறுவனாவது பெஞ்சு மேல் ஏறி நின்றிருந்திருப்பான்! மற்றபடி சத்துணவுத் திட்டத்துக்கு முன் குழந்தைகளின் உயர வளர்ச்சி விகிதம் எப்படி இருந்தது; இப்போது எவ்வாறு இருக்கிறது என்று ஒப்பு நோக்க ஆராய்ச்சி நடந்ததாகவோ, புள்ளி விவரம் ஏதும் இருந்ததாகவோ தெரியவில்லை.

## நீங்கள் கேட்டவை—தராசு


அப்புறம் பேசுவார்
உயரம் அளந்தாரா?

● ரூ 10 பரிசு பெறுபவர்

ஆர். அரிகோபி,
313, கோட்டா சுப்பையா தெரு,
புதுப்பேட்டை,
குடியாத்தம்—632 602.



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள், சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

# “என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்”...

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப்படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் காலகட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

**இத்தனை வருடங்களாக, சானிடரி பாதுகாப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேலைதான்!**

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு... போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

**ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.**

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு, என் மகள் வளரும் சூழ்நிலை வேறு இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிதுடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

**கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.**

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அந்த நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?




கிடைக்கிறது, 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்
தவிரவும் கிடைக்கிறது, கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ் 10 உள்ள பேக்கில்

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/5070/R/TA

இங்கேயே!

# உமது நிருபருக்கும் துணிச்சல்

அட்டையில் வந்த சிவாஜி படம் மிகவும் தத்ரூபமாக மிளிர்ந்தது. உமது நிருபர் மாறி மாறிச் சூடாகக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சிவாஜி மிகப் பொறுமையாகவும், அழகாகவும் பதில் சொல்லியிருக்கும் விதம் என் போன்ற சிவாஜி ரசிகைகளுக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

எஸ். லெக்ஷ்மி (எம்.ஏ) புதுக்கோட்டை—1

'சொன்னதைச் செய்தாரா சிவாஜி?' என்ற பேட்டி உண்மையில் பேட்டியே அல்ல. கல்கி நிருபருக்கும் சிவாஜி கணேசனுக்கும் நடைபெற்ற அரசியலைப் பற்றிய காரசாரமான வாக்குவாதம் என்றுதான் சொல்லுவேன். உமது நிருபரின் துணிச்சல் மிக்க அறிவுபூர்வமான கேள்விகளுக்கு எனது பாராட்டுதல்கள்.

திருமதி கஜலெட்சுமி
ராஜேந்திரன், லால்குடி.

* நான் சிவாஜியின் தீவிர ரசிகன். படித்தவன். அதனால்தான் நான் இந்த விமர்சனத்தையே எழுதுகிறேன். மதிப்பிற்குரிய சிவாஜி கணேசன் அவர்களுடையமனம் ஒருகுழந்தை மாதிரி. அவருடைய நடிப்பும் செயல்களும் அதையேதான் காட்டிக்கொடுக்கின்றன என்பதும் உண்மை! தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். மாதிரி அரசியல் சாதனை ஏற்படுத்த நினைத்தாலும் அவரால் முடியாது. காரணம் இவருடைய கலைத்திறன் அரசியலுக்குச் செல்லத் தடை செய்கிறது. ஒரு நல்ல கலைஞனாக இருப்பதால் இவராலும் எம். ஜி. ஆரைப் போல் அதை உதறித் தள்ள முடியவில்லை. அதற்காக இன்னும் அவர் ஹீரோவாக நடித்துக் கொண்டிருப்பதுதான் எங்களுக்கெல்லாம் வருத்தமாக இருக்கிறது என்பது வேறு விஷயம்!

இவரைப் பேட்டி கண்ட உமது நிருபரின் அரசியல் கேள்விகளுக்கு இவரால் சரியான பதில்களைச் சொல்ல முடியவில்லை. முடிந்தவரை சமாளித்திருக்கிறார். அவ்வளவுதான்! நடிகர் சங்கத் தலைவராயிருந்து ராஜிநாமா செய்தபோது, இவரைப் பற்றி வந்த செய்திகளும், பதில்களும் இவருக்கு நிர்வாகம் செய்யும் திறன் அறவே இல்லை என்பதைத்தான் பறைசாற்றின. அது ஏன்?

இவரிடம் இருக்கும் பணத்திற்கும் சினிமா உலகில் இருக்கும் புகழுக்கும் பத்திரிகைத் துறையில் உண்மையான—திறமையான நண்பர்கள் இல்லாமலா போய்விட்டார்கள்? அவர்களைக் கொண்டு பத்திரிகை ஆரம்பித்து இ. காங்கிரஸின் கொள்கைகளைப் பரப்பியிருக்கலாமே! எம். ஜி. ஆர். செய்யவில்லையா என்ன?

இவையெல்லாம் சிவாஜி அவர்களின் அரசியல் இயலாமையைத்தான் காட்டுகிறதே தவிர வேறில்லை. இனியும் அவர் அரசியலில் ஏதாவது சாதனையை ஏற்படுத்தினால் எங்களுக்கெல்லாம் அதிசயமாகத்தான் இருக்கும். ஏனெனில், அவரால் முடியாது என்பதே என் போன்றவர்களின் கணிப்பு.

எஸ். ரமேஷ்குமார், திருப்பூர்—1.

என். டி. ஆருக்குத் தமிழ்ச் சகோதரர்கள் சார்பில் எழுதியுள்ள தலையங்கம் அவரைச் சிந்திக்க வைத்துச் சிறந்த வழிகாட்டும் என்று நம்புகிறோம்.

நெல்லை சுவாதி, சென்னை—33.

**உமது சுறுசுறுப்புத்தான் என்ன?**

நடந்து முடிந்து ஒன்றரை வருடங்கள் கழித்து, ஜெயப்பிரகாஷைப் பற்றி, அவரது பாட்டியிடம் கேட்டு எழுதிய உமது சுறுசுறுப்பைப் பாராட்டித்தான் தீர வேண்டும்.

ஸ்ரீரேவதிப்ரியன், ஈரோடு—1.

**மனத்தைப் புண்படுத்தலாமா?**

ஜோக் வரவில்லையே என்று வருத்தப்பட்டதற்காக 'முதலிரவுக்கு ஓ.டி. கேட்கிறார்' என்பது போன்ற விரச ஜோக்குகளைப் போட்டு எங்கள் மனத்தைப் புண்படுத்துவது நியாயமா?

என். செந்தில்குமார், மயிலாடுதுறை—1.

**பயனுள்ள விஷயம்!**

டாக்டர் கல்யாணராமனின் அறிவுரை மிகவும் பயனுள்ளது. உயிரின் விலை ஒரு ஹெல்மெட் என்று அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இதைப் படித்தும்கூட ஹெல்மெட் உபயோகிக்க மறுப்பவர்கள் உங்கள் கருத்துப்படி மாங்காமடையர்கள்தான் ஸ்வாமி!

ஹெல்மெட்தாசன், ஈரோடு—10.



(* இக்குறிப்பிட்ட கவரும் பரிசு பெறுகிறது.)



* சீனிவாச சாஸ்திரி.

# வாதத்திறமை வென்றது

## 15

**வெ**ள்ளிநா படைத்தவர் என்றும், மேடைப் பேச்சு மன்னர் எனவும் கருதப்பட்ட ஸ்ரீனிவாச சாஸ்திரி இந்தப் பாராட்டுக்களை நியாயப்படுத்தும் விதமாகப் பேசினார்:

''ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை எதிர்ப்பவர்களில் எந்தவிதமான குற்றமும் செய்யாத, பரம்பரையாக ஹரிஜனங்களை ஹிம்சிக்காத பல்லாயிரக்கணக்கானோர் இருக்கிறார்கள். இவர்கள் மக்களில் சில பகுதியினரை ஆலயத்தில்பிரவேசிக்காமல்விலக்கி வைப்பதற்கு சாஸ்திர சம்மதம் இருப்பதாக மெய்யாலுமே நம்புகிறார்கள். இவர்களை மெல்ல மெல்ல நம் பக்கத்துக்கு இழுத்துக்கொள்ள ஓரிரு ஆண்டுகள் ஆனால்தான் என்ன? எதற்கு இந்த அவசரம்?

''மதுரையில் நடந்தது இதிகாசச் செயல் என்றால் அது இதிகாசமாகவே விளங்க அனுமதித்து விட வேண்டியதுதானே? விளைவுகள் என்னவாயிருக்கும் என்று தெரிந்தே ஒரு காரியத்தைச் செய்பவர்களுக்கு அந்தப் பின் விளைவுகளிலிருந்து பாதுகாப்புத் தருவது எதற்காக? அவ்விதம் பாதுகாப்புப் பெற்று ஒரு காரியம் செய்வதெனில் அது எவ்வாறு இதிகாசச் செயலாகும்? பிரதம மந்திரி கையாளும் வழி, முறையானதல்ல. ஒரு பெரிய சீர்திருத்தத்தைச் சுற்றி வளைத்துச் சாதிக்கப் பார்க்கிறார். இந்த மசோதாவை நிறுத்தி வைத்தால் குடி முழுகிப் போய் விடாது. பகிரங்கமான ஆலயப் பிரவேசத்திற்கு வழி வகுக்கும் ஒரு நேர்மையான மசோதாவைக் கொண்டு வருவதே சாலச் சிறந்தது.''

''சாஸ்திரி என்ன சொல்கிறார்?'' என்று கேட்டார் ஸி. ஆர். ''ஹரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறந்துவிடும் ஒரே வாக்கிய சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும் என்கிறாரா? அல்லது ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை எதிர்ப்போரை வற்புறுத்தி மெல்ல மெல்ல மனம் மாறச் செய்ய வேண்டும் என்கிறாரா?''

ஸி. ஆர்: தாமதமின்றி எல்லாக் கோயில்களையும் ஒரே சமயத்தில் திறந்துவிடும் ஒரு மசோதாவை அவர் அறிவுறுத்தினால், அந்தப் பரிந்துரையை நான் தீவிரமாக ஆராய்ந்து செயல்படுத்த முயல்வேன். ஆனால் வெறும்

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

அட்டையில்: ஸீமா ஆனந்த்
வண்ணப்படம்: யோகா.

வாக்கு வாதத்துக்காக மட்டுமே கூறப்படுவதானால் அது வேறு விஷயம். அவருடைய அறிவுரைதான் என்ன? நான் ஒரு பதிலை எதிர்பார்த்து என் பேச்சைத் தற்காலிகமாக நிறுத்துகிறேன்.

சாஸ்திரி: என் பதில் நீளமாக இருக்கும்.

ஸி. ஆர்.: பதில் நீளமாக இருந்தால் அது வாக்குவாதமாகத்தான் இருக்க வேண்டும். அறிவுரையாக இருக்காது. 'இதைச் செய்யாதே. அதைச் செய்யாதே' என்று தான் அவர் எனக்குச் சொல்கிறார். 'இதைச் செய்வது மேலானது' என்று அவர் கூறும் போது 'வெறும் வாக்குவாதத்துக்காகத்தான் அப்படிச் சொன்னேன்', என்றும் சேர்த்துக் கொள்கிறார்.

சாஸ்திரி: நான் பிரதம மந்திரி இல்லை; இந்த மசோதாவை நான் கொண்டு வரவும் இல்லை. நான் ஒரு விமர்சகன் என்ற முறையில்தான் இங்கு இருக்கிறேன். சந்தர்ப்பவசத்தால் எனக்கு இது விஷயமாகத் தீர்மானிக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டால், நான் இந்தமறைமுகமான சுற்றுவழியைக்கையாள மாட்டேன்.

ஸி. ஆர்.: இன்னமும் அவர் 'இப்படிச் செய்; இந்த வழியைப் பின்பற்று' என்று தீர்மானமாகச் சொல்லவில்லை பார்த்தீர்களா?

சாஸ்திரியின் சொற்பொழிவில் இருந்த அசாதாரண நேர்த்தியைப் பாராட்டிய ஸி. ஆர். கூறினார்: "இந்த நேர்த்தியை நான் முழுமையாகச் சுவைத்து ரசித்தாலும் அது பெண்கள் தூக்கிச் செல்லும் ஒரு வண்ணக் குடை போல்இருக்கிறதுஎன்றும்நான்சொல்லித்தான் ஆக வேண்டும் — ஒரு பட்டுக் குடை போல — கச்சிதமான அளவில், நேர்த்தியான வடிவத்தில், வண்ணமும் அழகும் நிறைந்ததாக இருக்கிறது. ஆனால் வெயில், காற்று, மழை போன்ற எதிலிருந்தும் பாது காப்பு அளிக்காது."

அன்று அவைநிகழ்ச்சிகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த நிருபர்களும் பிறரும் இந்த வர்ணனையை மனனம் செய்து தங்கள் குழந்தைகளிடமும் சொல்லி வைத்தனர். சென்னையில் 1980—களின் ஆரம்பத்தில் கூட ஸி. ஆரின் இந்தப் பேச்சு மேற்கோள் காட்டப்படுவதைக் கேட்க முடிந்தது.

(தொடரும்)

தமிழாக்கம்: **சீதா ரவி.**



# காந்தியின் கார் டிரைவர்

எம். ஆர். பாப். இவர் மகாத்மா காந்தியின் கார் டிரைவர். 1981ல் காலமானார். இவரது குடும்பம் பெங்களூரில் இருக்கிறது. இவருக்கு நான்கு மகன்களும் இரண்டு பெண்களும் இருக்கின்றனர். ஜெர்மனியில் பணிபுரியும் ஒரு மகன் ஜெர்மன் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு ஜெர்மன் பிரஜையாகிவிட்டார். இன்னொரு மகன் டாக்டர். மீதி இரண்டு மகன்களும் பெங்களூர் N.G.E.F. பாக்டரியில் பணிபுரிகின்றனர். பெங்களூர் வந்த மகாத்மா காந்தி இவரது டிரைவிங் திறமையைப் பார்த்து டெல்லிக்கு அழைத்துக் கொண்டாராம். இவருக்கு பாபு ராஜேந்திரபிரசாத், நேரு போன்ற பெருந்தலைவர்களிடமெல்லாம் செல்வாக்கு இருந்தது. ஆனாலும் இவர் இவருக்கென்று ஒன்றும் சேர்த்து வைத்ததில்லை. நிஜலிங்கப்பாதான் இவருக்குச் சிறிது நிலம் வழங்கினாராம்.

— ஏர்வை உதுமான்.

"உங்க ஆபீஸில் ஒருவேலைகொடுங்க இல்லேன்னா அஞ்சு வருஷம் வேலைசெஞ்சதா ஒருசர்ட்டிபிகேட்டாவது கொடுங்க சார்!"

"ஏன்?"

"சர்டிபிகேட்டை முன் அனுபவமா காட்டி எங்கேயாவது வேலை வாங்கிடுவேன்."

—கீழை. அ. கதிர்வேல்.



# ஆகாச... க்கெ

**வ**சுமதிக்கு எதிர்பாராத வாய்ப்புக் கிடைத்தது. அவனுடைய பொறுப்பில் மாயாவை விட்டுவிட்டு அரவிந்தன் தாரக்ராமைச் சந்திக்கச் சென்றுவிட்டான். குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகும், அவனுக்குத் திரும்பி வர. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் இது மாதிரி வேறொன்று கிடைக்கவே கிடைக்காது.

மௌனமாய் அவன் சோபாவிலிருந்தும் எழுந்தாள். மாயா இன்னும் தாராசமான ஒலியில் சங்கீதம் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய அறை வாயில்வரை சென்றவள் பார்த்தாள். மாயா கண்களை இறுக மூடிக் கொண்டு பாட்டுக்குக் காலால் தாளம் போட்டுக் கொண்டிருந்தாள். இடையிடையே இரு கைகளையும் தட்டினாள். ஹாஹ்ஹா என்றாள்.

ஆரம்பத்திலிருந்தே மாயா ஒரு தேற முடியாத கேஸ் என்று உறுதியாக நம்பும் வசுமதிக்கு இப்போது சிரிப்போ ஆத்திரமோ வரவில்லை. செஸ் விளையாட்டில் ஒரு முக்கியமான இடத்தைப் பிடிக்கவோ அல்லது எதிராளியின் 'காயை' அப்புறப்படுத்தவோ நன்கு யோசனை செய்ய வேண்டும். விளையக் கூடிய லாப நஷ்டங்களை ஆராய வேண்டும். சில சமயங்களில் தவறுதலான ஆட்டத்தால் தோல்வியே ஏற்படக்கூடும்!

வசுமதி யோசித்தாள்.

'உங்களை அடைய என்ன வழி?' என்று அரவிந்தனை அவள் கேட்ட போது அவன் சிரித்துக் கொண்டே 'மாயாவை அப்புறப்படுத்தினால் வழி பிறக்கும். என்னால் முடியாது. உன்னால் முடியுமா?' என்று பதிலளித்தான்.

அவன் வேடிக்கையாகச் சொன்னானா அல்லது உள்ளத்தில் ஒளிந்திருக்கும் ஆசையை அவளுக்கு உணர்த்தினானா? தன்னால் முடியாத ஒரு காரியத்தைச் செயல்படுத்த அவளை உதவிக்கு அழைக்கிறானா?

வசுமதி இன்னும் குழம்பிப் போனாள்.

அப்புறப்படுத்துவது என்றால் என்ன? தற்காலிகமாகவா அல்லது ஒரே வழியாகவா? சென்னையிலிருந்து இன்னொரு இடத்துக்கோ அல்லது மருத்துவமனைக்கோ அப்புறப்படுத்துவதா அல்லது உலகத்திலிருந்தே அப்புறப்படுத்துவதா? அவளுடைய அப்பா அவளை முந்தின நாள் கன்னத்தில் ஓங்கி அடித்த பிறகு, 'கொலை நடக்கும்' என்று அவரிடம் அவள் கூறினாள். கோபத்தில் வெடிக்கும் வார்த்தைகளுக்கு அர்த்தம் இல்லை. ஆனால் அரவிந்தன் கோபமாகப் பேசவில்லை. நிறுத்தி நிதானமாக, சிரித்த முகத்துடன், மாயாவை அப்புறப்படுத்தினால் வழி பிறக்கும் என்று கூறினான்.

வசுமதி நகரவில்லை. மாயா இன்னும் கண்ணை மூடியவளாய், கால்களால் தாளம் போட்டவளாய் உதட்டுச் சிரிப்பை அடக்காமல் படுத்திருந்தாள். அவளைப் பார்க்கப் பார்க்க வசுமதிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. இந்த அரைகுறைக்காக அல்லவா சில மாதங்களுக்கு முன் அவள் தன்னைத்தானே அழித்துக் கொண்டாள்.... 'பெரிய தியாகம்' என்று உள்ளூரப் பெருமை கொண்டு, புத்தி கெட்டுப் போனாள்? இந்த மாயாவுக்கு அன்று வழி விட்டதால் அவளுடைய வாழ்க்கையின் எல்லா வழிகளுமே அடைத்துப் போயின. தன்னுடைய காதலன் நாளை சீரும் சிறப்புமாய்ப் பெரியதோர் கம்பெனியின் தலைவனாக வருவான், அதற்கு அடிப்படைக் காரணம் வசுமதியாக இருப்பாள். ஒரு பாவப்பட்ட பெண்ணின் மன பலவீனம் அவனால் தீர்ந்து போகும் என்றெல்லாம் அவள் சிந்தித்து முடிவு செய்தாளே? என்ன பிரயோசனம்? அவளுடைய காதல் இன்றும் இருக்கிறது. ஏன் முன்னை விட நூற்றுக் கணக்காகப் பெருகி, மதம் பிடித்த யானையின் சீற்றம் போலப் பொங்குகிறது.

முன்பெல்லாம், உணர்ச்சி வயப்படும் நேரங்களில் கடற்கரையின் இருளில் அவன் அவளை அணைத்துக் கொள்ளுவான். அவளுடைய தலையைத் தன் மடி மீது அமர்த்திக் கொள்ளுவாள். தலையை வருடுவாள். அவளுடைய பெண்மை கழிந்தோடும் புது வெள்ளம் போல் கிளுகிளுக்கும். ஒருநாள் அவள் அவனுடைய மனைவியான பிறகு, பரஸ்பர ரகசியங்களுக்கு இடமே இல்லாதபோது, அவனுடைய ஆண்மை அவளை ஆட்கொள்ளும்போது பரவச நிலையில் அவள் தன்னையே இழந்து போவாள். இப்படியெல்லாம் கற்பனை செய்த அவள் ஏன் ஒரு சருகு போலானாள்.

திடீரென்று பழைய எண்ணங்கள் குதித்தோடி மனத்துள் பாய்ந்து வர, வசுமதி தன்னையே இழந்தாள். தான் கௌரவமான ஒரு வழக்கறிஞர் என்பதை மறந்தாள். மாயாவுக்கு அரவிந்தன் ஒருவன்தான் கணவனாக இருக்க முடியும் என்கிற உண்மையை மறந்தாள். ஒரு கௌரவமான குடும்பத்தில் நாலு பேருக்கிடையில் பிறந்து வளர்ந்த மத்திய தர வர்க்கத்தின் ஒரே செல்வமான மானத்தை மறந்தாள். 'நீ ஒரு நாள் சென்னை ஹைகோர்ட்டில் நீதிபதியாக வருவாய்' என்று ஸீனியர் கேஜிகே கூறினாரே, அந்த வார்த்தைகளை மறந்தாள்.

அவள் தன்னைத்தானே இழந்த நிலையில், பலாபலன்களையும் விபரீத முடிவுகளையும் எண்ணிப் பார்க்கவும் சக்தியற்றவளாகப் போன நிலையில் மாயாவின் அறையினுள் புகுந்தாள்.

டேப் ரிகார்டரில் மேனாட்டு இசை இலேசாக அலறிக் கொண்டிருந்தது. அந்த அலறலை அதிகமாக்கினாள்.

மறுகணமே மாயா கண்ணைத் திறந்து பார்த்தாள்.

இரு கைகளையும் அகல விரித்து, தீ பறக்கும் கண்களோடு வசுமதி தன்னை நெருங்கி வந்தபோது, மாயா 'வீல்' என்று அலறினாள். அவளுடைய அலறலை மேனாட்டுச் சங்கீதம் மடியில் போட்டு ஒளித்துக் கொண்டது.

எட்டு விரல்கள் கழுத்தைச் சுற்ற, இரு கட்டை விரல்கள் தொண்டைக் குழாயை அழுத்தின.

ஓரிரு வினாடிகள் விரல்கள் பயந்து இலேசாக இறுக, வசுமதி யோசித்தாள். இந்தக் காரியத்தால் அரவிந்தன் தனக்கு நிச்சயம் கிடைப்பானா என்ற கேள்வி அவளுள் எழவில்லை. செஸ் ஆட்டத்தில் முக்கியமான காயைமுக்கியமான இடத்திலிருந்து அப்புறப்படுத்தினால் வெற்றி நிச்சயம் என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றது.

மரண அவஸ்தை மாயாவை வீறிட்டு எழச் செய்தது. தற்காப்பு எண்ணம் புதுத்தென்பையும் சக்தியையும் அள்ளித் தந்தன. நீண்டு கிடந்த இரு கால்களையும் மடக்கி, வசுமதியின் வயிற்றில் பதிய வைத்து அடைத்துக்கொண்டு வரும் மூச்சையும் மீறி உந்தினாள். வசுமதியின் விரல்கள் தளர, மீண்டும் மாயா உதைத்தாள். வசு நிலைபெயர்ந்து பின்னால் சாய இரும்பு அலமாரி மீது தலை பட்டது. அவள் இன்னும் ஜொலிக்கும் கண்களால் மாயாவைத் தாக்கி முன்னேறி வரத் தயாரானாள்.

ஆனால் மாயா எழுந்து நின்றாள்.

''ஏய்! என்ன செய்யப் பார்க்கிறே?''

டேப் ரிகார்டர் சத்தத்தில் வசுமதியின் காதில் விழவில்லை. அதை நிறுத்தினாள்.

''அன்னிக்கு என் கார் டிரைவரைக் கொன்னது நீதான்... நீதான்.... அந்து! அந்து! வாயேன்... வாயேன்...''

வசுமதி திடீரென்று இந்த உலகுக்கு வந்தாள். தன் பத்து விரல்களையும் பார்த்துக் கொண்டாள். எப்படி இந்த விரல்கள் ஒரு கழுத்தைப் பிடித்து நெரித்தன? அவளுக்குள் இருக்கும் அசுரன் — இத்தனை நாட்களாகத் தூங்கிக் கொண்டிருந்தவன் — கோரப் பசியுடன் விழித்துக் கொண்டு விட்டானா!

''இரு, இரு.... அந்து வந்ததும் அவன்கிட்ட சொல்றேன்.....!'' என்றாள் மாயா.





"நீ ஒரு பைத்தியம். உன்னை ஆஸ்பத்திரியில் சேர்க்கணும்! உன்னாலதான் நானும் அரவிந்தனும் ஒண்ணாச் சேர்ந்து வாழ முடியாமப் போறது..... நீ தொலைஞ்சாத்தான் எனக்கு வழி பொறக்கும்.... நீ பைத்தியம்... நீ பைத்தியம்...."

வசுமதி மூச்சு விடாமல் ஓலமிட்டாள்.

மாயா மௌனமாய் அவளையே பார்த்தாள். பிறகு—

"நான் போயிட்டா அந்து உன்னைக் கலியாணம் பண்ணிப்பாரா, வசுமதி?"

"நிச்சயமா? உன்னை அப்புறப்படுத்தினாத்தான் எனக்கு விமோசனம் கிடைக்கும்னு அரவிந்தனே சொல்லிட்டார்."

"உண்மையாகவா?"

"சத்தியமா!"

"அப்ப அந்துவுக்கு என்னைப் பிடிக்கலையா?"

'இல்லவே இல்லே.... நீ ஒழியணும்னு காத்திண்டிருக்கார்!''

''என்னோட அந்துவா அப்படிச் சொன்னார்?''

''இனிமே அவர் உன்னோட அந்து இல்லே.. என்னோட அரவிந்தன்.''

அப்ப சரி.... இப்ப நான் ரெடி.... கம் ஆன்.... இதோ என் கழுத்து.... நீ அந்துவை எடுத்துக்கோ.''

மறுகணம் மாயா தலையணையை விட்டு, மெத்தையில் தலையை வைத்தாள். கால்கள் கட்டிலைத்தாண்டி, இறங்கித் தொங்கின.

''நான் ரெடி! வசு பி க்விக்.... எனக்கு விடுதலை தந்தாத்தான் உனக்கு விடுதலை கிடைக்கும்.... வா.... வா வசு.... நான் கண்ணை மூடிக்கிறேன். வேணும்னு என் ரெண்டு கரலையும் மொதல்லே கட்டிப் போடு!''

மாயா கண்களை மூடிக் கொண்டாள். அவளுடைய உதடுகளில் புன்னகை மலர்ந்தது. பொன்னிற முகம் நிம்மதியைப்பிரதிபலித்தது.

வசுமதி பார்த்தாள்.

அவளுள் இருந்த அசுரன் திடீரென்று அடங்கி மறுபடியும் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது. மெல்ல நகர்ந்தாள். ஒரு கொலை மூலமா அவளுக்கு விமோசனம் பிறக்க வேண்டும்? வேறு மார்க்கமே கிடையாதா? இது இன்னும் பைத்தியம்! 'அன்றைக்கு என் கார் டிரைவரைக் கொன்னது நீதான்!' என்று என்னவோ சம்பந்தா சம்பந்தமில்லாமல்பேசுகிறாள். வசுநின்றாள். மாயா இன்னும் கண்ணை மூடிய நிலையில் கிடந்தாள்.

திடீரென ஒரு மூச்சின் இழை அவள் மேல் படர்ந்தது. சற்றே திரும்பினாள்.

அரவிந்தன்!

அவன் பேசவில்லை. அவளையும் மாயாவையும் மாறி மாறிப் பார்த்தான்.

மாயாவை விட்டு வசுவின்பால் பார்வையை அவன் செலுத்துகையில், அவள் அவனை இறுகக் கட்டிக் கொண்டாள். ஒரு கணம் அயர்ந்து போன நிலையில் சிக்கின அரவிந்தன் வசுமதியிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான்.

வசுவின் கைகள் இன்னும் இறுகக்கட்டின. கால்விரல்களால் நின்று, அவனுடைய கன்னத்தில் அதரங்களைப் பதிய வைத்தாள்.

இவன்: உன்னிடம்தான் ஸ்கூட்டரே இல்லையே, எதற்காக ஹெல்மெட் வாங்குகிறாய்?

அவன்: ஹெல்மெட் இருந்தால் யாருடைய ஸ்கூட்டராக இருந்தாலும் பின்னால் உட்கார்ந்து கொண்டு போகலாமே அதனால்தான்...!

—எஸ். தேவாதிராஜன்.



''அரவிந்த்... அரவிந்த்... என்னைப் பாருங்க... நீங்க இல்லாமப் போனா என்னாலே வாழ முடியாது. ஐ காண்ட் லிவ் வித்தவுட் யூ!''

மீண்டும் அவளுடைய உதடுகள் அவன் கன்னத்தைத் தேடி, உதடுகளைச் சந்திக்க முயன்றன.

அடுத்தகணம், அரவிந்தன் அவளிடமிருந்து விடுபட்டான்.

வசுமதியின் இரு கன்னங்களிலும் அவனுடைய ஐந்து விரல்களும் பதிந்தன.

''கெட் அவுட்!'' என்றான்.

''அர்விந்த்!''

''கெட் அவுட்!''

''மாயா இஸ் எ மாட் கேர்ள்.... ஷி இஸ் அன்பிட் ஃபார் எனிதிங்... ஐ'ம் ஹியர்... லெட் மி பி யுவர் பார்ட்னர்.... ஸெண்ட் ஹர் டு... ஸெண்ட் ஹர் டு....''

அரவிந்தன் முன்னேறி வந்தான். வசுவின் கையைப் பற்றி இழுக்க, அவள் உட்கார்ந்தாள். மீண்டும் இழுக்க, அவள் கதவருகே போய் நின்றாள். அரவிந்தன் உரக்கக் கத்தினான்.

''சீ, நீயும் ஒரு பெண்ணா? உன்னை மாதிரிப் பெண்களைப் பார்த்துத்தான் அந்தக் காலத்திலே கற்புக்கரசிகள் கதைகளை எழுதினாங்க போலிருக்கு.... கெட் அவுட்.... மாயா என் மனைவி. அவ பைத்தியமில்லே! நீதான் பைத்தியம்! நான் சாகிற வரைக்கும் அவதான் என் மனைவி.... அவதான் என் மனைவி. என் கண்ணுக்கு அவ நல்ல புத்தி சுவாதீனமுள்ள பெண்.... ஊரார் கண்ணுக்கு அவ எப்படி இருந்தாலும் எனக்கு அவ ஒய்ஃப். அவளுக்கு நான் ஹஸ்பெண்ட். இதை நினைவு வைச்சுக்கோ.... இனிமே இந்த வீட்டுப்படி மிதிக்காதே.... கெட் அவுட்!''

வசுமதியால் அரவிந்தனை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

மெல்ல நகர்ந்தாள்.

அவள் கதவைத் தாண்டும்வரை பார்த்துக் கொண்டே இருந்த அரவிந்தன், மெதுவாகத் திரும்பினான்.

''அந்து!''

''என்னம்மா, மாயா?''

''என் கார் டிரைவரைக் கொன்னவளை நீ வெளியே அனுப்பிச்சுட்டே! இனிமேல் நான் எதுக்கும் யாருக்கும் பயப்படவே வேண்டாம்!''

''நீ என்னம்மா சொல்றே, மாயா?''

அவன் பதில்சொல்ல வாயெடுப்பதற்கும், தாரக்ராம் ஹாலில் பிரவேசிப்பதற்கும் சரியாக இருந்தது.

''யார் உங்களை இங்கே வரச் சொன்னா?'' என்றாள் மாயா.

அரவிந்தன் திரும்பிப் பார்த்தான். அவளுக்கு என்ன பேசுவது என்று ஓரிரு நிமிடங்களுக்குப் புரியவில்லை.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

# வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



**காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.**

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.




## 23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

| | |
|---|---|
| புரதம் | [illegible] |
| கொழுப்பு | [illegible] |
| கார்போ | [illegible] |
| ஹைட்ரேட் | [illegible] |
| கால்ஷியம் | கால்ஷியம் |
| பாஸ்பரஸ் | பேன்டோதெனேட் |
| சோடியம் | கோலின் |
| குளோரைடு | [illegible] (பி6) |
| ([illegible] வடிவில்) | வைட்டமின் (பி12) |
| பொட்டாஷியம் | ஃபாலிக் அமிலம் |
| இரும்புச்சத்து | வைட்டமின் ஸி |
| அயோடின் | வைட்டமின் டி |
| வைட்டமின் 'ஏ' | வைட்டமின் ஈ |
| வைட்டமின் 'பி' | வைட்டமின் கே |

பால் சேர்த்திடத் தேவையில்லை.



**காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு**

GK & E. 884. GLC. 120 Tm

அந்தப்பெண்சங்கடத்துடன்நெளிவது அப்பட்டமாகத் தெரிந்தது.

தலைக்குத் தலை கேள்வி!

சுற்றிச் சுற்றி வரும் பார்வைகள்....

டீ கொண்டு வரச் சொல்லட்டுமா?

லஞ்சுக்கு என்ன பண்ணப் போறீங்க?

எங்க தங்கி இருக்கீங்க?

அத்தனையிலும் விடுபட்டு மதியம் மூன்று மணியளவில்தான் அவளால் தனித்திருக்க முடிந்தது.

தற்செயலாக அவள் என் பக்கம் பார்க்க, நான் பார்வையைத்தழைத்துக்கொண்டேன். நான் பார்த்து அவளுக்குத் தெரிந்திருக்குமோ என்று கஷ்டப்படுத்தியது....

தொடர்ந்து வேலையில் ஈடுபடத்தொடங்கினாள் ஷாலினி....

ஆமாம். அதுதான் அவள் பெயர்.

அவளைப் பற்றி....

திருச்சிக் கிளையில் அதிகாரியாகப் பணியாற்றிய அவள் கணவன், சமீபத்தில் இறந்து போக,

அங்கே உத்தியோகம் பெற்றவள்....

இடமாற்றம் வேண்டி....

இங்கு வந்தவள்....

பட்டதாரி....

இன்றுதான் வேலையில் சேர்ந்திருக்கிறாள்.

இவ்வளவுதான் எனக்குத் தெரியும் அவளைப் பற்றி.

எளிமையான தோற்றத்தில் கவர்ச்சி எட்டிப் பார்க்கத் தவறவில்லைதான்.

அடிக்கடி உதடுகளை மடிக்கும்போது முன் பக்கத்து சீட் உபேந்திரன் அவள்தைப் பட்டுக் கொண்டிருந்தான்...


மூடியதலைப்புக்குள் முடிந்தவரை எக்ஸ்ரே எடுத்துக் கொண்டிருந்தான் ஏகாம்பரம்.

எனக்கும் அவளுக்கும் வேலையில் நேரடித் தொடர்பு இல்லாததால்நான் அவளை அணுகவில்லை. ஆனால் மறுநாள் வலுவிலே அந்த சந்தர்ப்பம்வருமென்றுஎனக்குத்தெரியாது..

'இதுக்கெல்லாம்சரியான ஆள் ராம்தான். அவரை அப்ரோச் பண்ணுங்க!' டைப்பிஸ்ட் இஸபெல்லா.



''யார் ராம்?'' என்றாள் ஷாலினி.
நான் நிமிர்ந்தேன்.
''சார் குட்மார்னிங்....! நான் இங்க உக்காரலாமா?''
''யெஸ் ப்ளீஸ்!''
''தேங்க்ஸ்.''
''எதுக்கு?''
''நீங்க ஊமையில்லேன்னு தெரிஞ்சதுக்கு.''
இந்தப் பெண்ணிடம் குறும்பும் உண்டு என்று நினைத்து நிமிர்ந்தபோது காலியான அந்த நெற்றி என்னைக் காயப்படுத்தியது.
''சொல்லும்மா உனக்.... ஐ'ம் ஸாரி!
''பரவால்லே... நான் சின்னவ... எனக்கு அதுல ஆட்சேபனை இல்லே. என்னைப் பத்தி ஒரு அவுட்லைன் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்.... நேரா சப்ஜெக்ட்டுக்கு வந்துரட்டுமா?
வெளிப்படையான அந்தப் பேச்சு எனக்குப் பிடித்தது....
''மாம்பலத்துல அண்ணா வீட்லே தங்கியிருக்கேன். தினமும் ஆவடிக்கு இவ்ளோ தூரம் வேலைக்கு வர முடியலே!''
''ஸோ?''
''இங்க எனக்கொரு வீடு கிடைக்குமா?'
''கூட எத்தனை பேர்?''
''நானும் என்னோட ரெண்டு வயசுக் குழந்தை சூர்யாவும்!''
''தனியா எம்மா?''
''நீங்கள்ளாம் மனுஷா இல்லையா, சார்? பகல் முழுக்க ஆபீஸ்லே.... மிச்சம் கொஞ்ச நேரம்தானே!''
''குழந்தையை......?''
''க்ரீச்லவிட்டுட்டாப்போச்சு. வீடு கிடைக்குமா சார்? ஆனா வாடகை இருநூறுக்கு மேலே கொடுக்க முடியாது... டாப் இருந்தா நல்லது...... ரெண்டுரூம்.... ஒரு.....



''இரு.... இரு.... போடற கண்டிஷனுக்கு வீடு புதுசாத்தான் கட்டணும்.''

''ஏன் சார் கிடைக்காதா?'' கண்களை அகல விரித்து உதடுகளைச் சுழித்துக் கேட்ட போது எதிரே ஒரு குழந்தை தெரிந்தது.

''கவலைப்படாதே.... ஒரு வாரத்துலே பிடிச்சிரலாம்.''

அந்தப் பார்வையும், பேச்சும் நெஞ்சுக்குள் திரும்பத் திரும்ப வட்டம் போட,

அவளுக்காக வீடுதேடி அலையத்தொடங்கினேன்...

அவள் கேட்டதை விட ஒன்று நல்லதாக நாலே நாட்களில் அமைய,

சொன்னேன்.

''ஏற்பாடு பண்ணுங்க சார்.... நாளைக்கு புதன்கிழமை பாலைக் காச்சிடலாம்... எங் கண்ணாவோட வர்றேன்!''

வந்தாள்....

''சூர்யா வரலியா?''

''அவளுக்கு ஜுரம்.... மன்னிகிட்ட இருக்கா... அதான் இன்னிக்கு அழைச்சிண்டு வரலை.... இது எங்க அண்ணா...''

''ஐ'ம் ராம்!''

''நமஸ்காரம் சார்... ஷாலினி மேலே எனக்கு ரொம்பக் கோவம்.... ஆனாலும் எதுக்கு இந்தப் பிடிவாதம்?''

''அவ்ளோ தூரம் வர்றது கஷ்டம்னு சொல்றாங்களே!''

''வேலையை விடட்டும். நான் இல்லையா?''

அந்த வார்த்தை எனக்குப் போலித்தனமாகப் பட பேசாமல் இருந்தேன்.

''இன்னிக்கு இங்க தங்கப் போறியா ஷாலினி?''

''இல்லே சார்... சூர்யாவையும் அழைச்சுண்டு வெள்ளிக்கிழமை வர்றேன்...''

போகும்போது சற்றுப் பின் தங்கின அவள் அண்ணன்,

''இது நல்லாருக்கா சார்?'' என்று கேட்டான்.

''எது?''

''ஆம்பிளை இல்லாம தனியா ஒரு பொண்ணு?''

''ஏன் அதுல என்ன தப்பு?''

என்னை ஒரு மாதிரி பார்த்துவிட்டு வேகமாக நடந்து போனான்.

* * * * *

''என்ன சார் எனக்கு முன்னால நீங்க?''

''வீட்டுக்கு வேண்டிய சாமானெல்லாம் பக்கத்துல மளிகைக் கடையில சொல்லியிருக்கேன்...''

''பால் கார்டு நாளைக்கு வாங்கித் தர்றேன்.''

''காஸ் கனெக்ஷனுக்கு கொஞ்சம் டயமாகும்.''

நான் அடுக்கிக் கொண்டே போக,

திறந்த விழி மூடாமல் நின்றாள் ஷாலினி.

''உங்களுக்கு ஏன் சார் என்னால கஷ்...''

''நோ ஷாலினி... உபசார வார்த்தைகள் எனக்குப் பிடிக்காது. அதோட இந்த சாரும், மோரும் வேணாம். 'ராம்'னு கூப்பிடு... ஐ லைக் தட்! ஆமா எங்கே சூர்யா? கண்ணுல காட்டவே மாட்டியா?''

பின்னால அண்ணா கூட்டிட்டு வர்றான்.''

''சரி எனக்கு டயமாச்சு.... இன்னொரு சமயம் பாக்கலாம்... வரட்டுமா?''

அவளும் புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு பரபரப்பாக உள்ளே நுழைந்தாள்.

* * * * *

''எப்பம்மா அப்பா வருவார்?'' மழலையில் கேட்டது மூன்று வயது சூர்யா.

''தொந்தரவு பண்ணாதே கண்ணம்மா. திடீர்னு ஒரு நாள் உம் முன்னால வந்து நிப்பார்.... அம்மாவை வேலை செய்ய விடு.''

''அப்பா எப்படிம்மா இருப்பார்.''

''நாந்தான் முன்னமே சொல்லியிருக்கேனே. அதே மாதிரி இருப்பார். புடவைத் தலைப்பை விடு. இந்தா ரயில் பொம்மை. போய்ச் சமத்தா விளையாடு!''

விளையாடாமல் மூலையில் போய் உட்கார்ந்து கொண்டது. பிஞ்சுக் கைகளில் முகவாயைத் தாங்கிக் கொண்டு யோசித்தது.

''நாந்தான் முன்னமே சொல்லியிருக்கேனே!''

என்ன சொன்னா அம்மா? யோசித்தது.

உயரமா, சுருட்டை முடியோட.... இது தானா அப்பா?

லேசாகத் திறந்திருந்த கதவை இரு விரல்கள் தட்ட,

''யெஸ்'' என்றாள் ஷாலினி பாத்ரூமிலிருந்து.

உள்ளே நுழைந்தான் ராம்.

உயரமா... மனத்துக்குள் டிக் அடித்தது சூர்யாவுக்கு. சுருட்டை முடியோட.... அதுவும் சரி....

எழுந்து நின்றது.

''திடீர்னு ஒரு நாள் உம் முன்னாலே நிப்பார்''.




அமெரிக்காவில் குற்றங்கள் பெருகிச் சிறைச்சாலைகள் நிரம்பி வழிவது மட்டும் அல்லாமல், சிறைக் கைதிகளைப் பராமரிப்பதிலும் அரசாங்கத்திற்குப் பெரும் 'தலைவலி' ஏற்பட்டுள்ளது.

இதைச் சமாளிக்க தற்போது அமெரிக்காவில் 'தனியார் சிறைச்சாலை'கள் துவங்க 24 பேருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. —சுமதி திராவிடமணி.




• **அதிக பளபளப்பு**—பெஸ்டோவின் விசேஷ ஃபார்முலா துணிகளுக்குத் தருகிறது அதிக பளபளப்பு, அதிக வெண்மை.

• **அதிக மென்மை**—கடுமையான வாஷிங் பவுடர்களைப் போல் பெஸ்டோ துணிகளுக்குக் கெடுதல் செய்வதில்லை. மேலும் உங்கள் கைகளை மென்மையாக வைக்கிறது.

• **அதிக வெண்மை**—துவைக்கத் துவைக்க துணிகள் பழுப்படைவதில்லை. ஆகவே வெளுக்க வெளுக்க வெண்மை நீடித்து நிலைக்கும்.

பெஸ்டோ—ஒரு கிலோவுக்கு
ரூ. 7.20 மட்டுமே!
உள்ளூர் வரிகள் தனி.





உயர் தரத்திற்கும் சிக்கனத்திற்கும்

CHAITRA-B-G-276 TAM R

திறப்பு விழா முடிந்ததும் மூடுவிழா!

கூடலூருக்கு அருகிலுள்ள 'பந்தலூர்' என்ற ஊரில் சமீபத்தில் அமைச்சர் ஹண்டே ஒரு ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தார். 5.89 லட்ச ரூபாயில் கட்டப் பட்ட இந்த ஆஸ்பத்திரியில் 24 படுக் கைகள் இருக்க வேண்டும். அமைச்சர் திறந்த போது இந்தப் படுக்கைகள் இருந் தன. ஆனால் மறுநாளே காணுமல் போய் விட்டன! காரணம், திறப்பு விழாவுக் காக இவை உதக மண்டலம் ஆஸ்பத்திரி யிலிருந்து கொண்டுவரப்பட்டனவாம்.




அதனுல் திருப்பி அனுப்பி விட்டார்க ளாம். தண்ணீர்த் தட்டுப்பாடு என்று காரணம் காட்டி ஆஸ்பத்திரி மறுநாளி லிருந்து மூடப்பட்டுள்ளது!

—சம்பத்குமாரி.

---

அப்பமன்னு? அப்பமன்னு....!

இதுதானு அப்பா?

இது அப்பாவேதான்....

சட்டென்று பந்து போல் துள்ளிய சூர்யா, "அப்பா" என்று அலறிக் கொண்டு அவன் காலே இறுகக் கட்டிக் கொள்ள,

ஸ்தம்பித்துப் போனுன் ராம்....

பதறிக் கொண்டு வெளிப்பட்டாள் ஷாலினி...

"ஏய் வாடி இங்க.... இது உன் அப்பா இல்லேடி...."

அது ராமிடம் பசை போல ஒட்டிக் கொண்டு அலறி அழத் தொடங்கியது.

இவன் பறிக்கப் பறிக்க....

அழுகை பெரிதானது.... மூச்சு இழுத்துக் கொண்டு கண்கள் மேலே போனது.

"நோ ஷாலினி! லீவ் ஹெர்.... ஸம்திங் சீரியஸ், அதர்வைஸ்...."மெல்ல சூர்யாவின் முதுகில் தட்டி அதை ஒரு நிலேக்குக் கொண்டு வந்தான்...."

அவன் மடியிலேயே தூங்கிப் போனது!

ஷாலினி மெல்ல அழத் தொடங்கினுள்...

"ஏம்மா, அழும்படியா என்ன நடந்தது இப்ப?"

"அவரோட மரணத்தைச் சொல்லிப் புரிய வைக்கக் கூடிய வயசு இதுக்கில்லே ராம்... இந்தத் தப்பை நான் செய்யலே. 'அப்பா இருக்கா வெளியூர்ல'னு இவ மனசுல மத்த வங்க பதிய வச்சுட்டாங்க....

"எப்படி இருப்பார்னு கேக்க நான் சொன் னேன். ஸாரி ராம், ஏறத்தாழ அவரோட உருவ ஒற்றுமை உங்களுக்கு ஓரளவு பொருந் தும்.... இப்படி ஒரு சிக்கல் வரும்னு நான் நினேக்கலே....

"போகட்டுமே ஷாலினி! குழந்தைதானே, நிதானமாச் சொல்லி புரிய வச்சாப் போச்சு. இது ஒரு பெரிய இஷ்யூவா? அது சரி, எல் லாம் சரியா இருக்கா? உனக்கு எந்தப் பிரச்னே யும் இல்லேயே..."

"என்னுல உங்களுக்குத்தான்...."

"இல்லேம்மா... நல்ல ஒரு ஸ்நேகிதிக் காக நான் செய்யக்கூடிய சின்னச் சின்ன உதவிகள்... உதவிகள்னு சொல்றதுகூடக் கொஞ்சம் பெரிய வார்த்தைதான்."

அழகான ஒரு பொம்மை போல மடியில் தூங்கும் சூர்யாவை கண் கொட்டாமல் பார்த் தான். அதன் இமைகளில் மெல்ல முத்த மிட்டான்.

"கேக்க மறந்துட்டேனே! மிஸஸ் ராமை நான் எப்ப பாக்கறது?"

"இன்னும் அஞ்சாறு மாசம் கழிச்சு?"

"அதென்ன கணக்கு?"

"டெலிவரிக்குப் போயிருக்கா! நீ வந்த விஷயம், உனக்கு வீடு பார்த்தது எல்லாம் எழுதியிருக்கேன். அடுத்த லெட்டர்ல இந்த பொம்மையைப் பத்தி எழுதணும்... என் பொண்ணும் இதே வயசுதான்."

அவன் வாஞ்சையோடு அதன் தலையைத் தடவிக் கொடுத்தான்.

* * * * *

"அங்கிள்னு சொல்லுடி, அப்பா இல்லேடி அவர்...."

"முடியாது போ... நீதானே சொன்னே திமர்னு வருவார்னு.... நீதானே சொன்னே சுருட்டை முடி இருக்கும்னு.... நீதானே சொன்..."

பளாரென்று அறைந்தாள்....

"பாருப்பா அம்மாவை...." அழுது கொண்டு ஓடி வந்தது சூர்யா.

அள்ளி எடுத்துக் கொண்டான் ராம்.

"அடிக்கறதுல லாபமில்லே, ஷாலினி."

"எனக்குப் புரியலே ராம். நாலு மாசமா போராடறேம். எவ்வளோ சொல்லியும் இவ மாறலே. அது மட்டுமில்லே ராம்...."தயங்கி னுள்.

"என்னம்மா சொல்லு."

"நம்ம ஆபீஸ்ல....."

"அக்கம்பக்கத்தை விட்டுட்டியே, ஷாலினி!"

"ராம், நான் சொல்ல வந்ததை...."

"பரவால்லே, நீயே சொல்லு....ம். கமான்!"

"அதை எப்படி சொல்றதுன்னே...."

"நான் உன்னே வச்சுண்டு இருக்கறதா ஊர் சொல்றது இதுதானே! பிரசவத்துக்கு மனேவியை ஊருக்கு அனுப்பிவிட்டு, விதவை கூட குடித்தனம் நடத்தருன்னு சொல்றுங்க இதுதானே!"

"ஏன் காதை மூடிக்கற ஷாலினி? நெருப் புன்னு வாய் வெந்துடாது. நிஜம் எதுன்னு நமக்குத் தெரியும் இல்லேயா?"

"ஆனுலும் ராம்...."

"என்ன ஆனுலும்?"

"நான் ஒரு பெண்ணில்லேயா? கோச்சுக் காதீங்க. நீங்க இனிமே இங்கே வர வேணும்."

"அதுனுல எல்லாப் பேச்சும் அடங்

கிடுமா? சொல்லு ஷாலினி....! இன்னும் ரெண்டு நாள்ல என் மனைவி இங்க வரப் போறா... இனிமே ஊர் என்ன பேசும் தெரியுமா? பொண்டாட்டி வந்தாச்சு.... பயந்துட்டு 'கீப்'பை விட்டுட்டான்னு சொல்லும். சரி அப்படியே ஆனாலும் இந்தக் குழந்தை 'அப்பா'ன்னு சொல்றதை யாரால நிறுத்த முடியும்? பாரு ஷாலினி, நாம தெளிவா இருந்தா, உலகத்துக்கு பயப்படவே வேணாம். இன்னிக்கு நம்மைப் பத்தி பேசற பொய்கள், நாளைக்கு இதைவிட தலையா இன்னொண்ணு கிடைச்சா நம்மை மறந்துடும்....

"நமக்குள்ளே நல்ல ஒரு ஸ்நேகிதம் இருக்கு. இதை கடிதங்கள் மூலமா என் மனைவிக்கும் நான் புரிய வச்சிருக்கேன். மடில கனமில்லே எனக்கு. தைரியமா இரு. வரட்டுமா?"

"அப்பா, நானும் உங்கூட வரட்டுமா?"

"நாளன்னிக்கு உங்கம்மா, சின்ன பாப்பாவோட வரப்போறா. அப்ப ஸ்டேஷனுக்கு உன்னையும் அழைச்சிண்டு போறேன். அப்பாக்கு இப்ப ஒரு முத்தம் குடு..."

பிஞ்சு உதடுகளை அது கன்னத்தில் பதிக்க, சிலிர்த்துப் போனான்.

"இதுதான் ஷாலினி உண்மையான 'லவ்' கொச்சைப்படுத்தற கூட்டத்தைப் பத்தி கவலைப்பட வேணாம். மதிப்பும் கொடுக்க வேணாம்."

அந்த கம்பீரமான ஆண்மகனைப் பார்த்த போது மயிர்க்கால்கள் ஒவ்வொன்றும் சிலிர்த்துக் கொள்ள கைகூப்பித் தொழுதாள் ஷாலினி.

* * * * *

"சார் போஸ்ட்...."

கடிதம் வத்சலா எழுதியது.

ஏன், வர்ற தேதி தள்ளிப் போச்சா?

பிரித்தான்.

"அன்பருக்கு! உங்களை அப்பா என்று அழைக்க அங்கே ஒரு குழந்தை இருக்கும் போது, என் குழந்தைகளுக்கு அவ்விடத்தில் வேலை இல்லை. பங்கு போடாமல் முழுமையாக நீங்கள் குழந்தைகளுக்கு எப்போது கிடைப்பீர்களோ, அப்போது சொல்லியனுப்புங்கள். வருகிறேன்" — வத்சலா.

இடியட்!

நான் ஷாலினி கிட்ட பேசின ஒவ்வொரு எழுத்துக்களையும், நீ போன பின்னால சுவாசிச்ச மூச்சுக்களைக்கூட எண்ணி, எண்ணி உங்கிட்ட கணக்கு சொன்னேனே... நீயுமா என்னை நம்பலே?

என்கிட்ட களங்கம் இருந்தா இதையெல்லாம் நான் சொல்ல முடியுமா, ஒரு மனைவிடம்?

பாவம் அந்தக் குழந்தை! அப்பான்னு அழைக்கிற அறியாத அந்த ஆசையை ஏன் நான் மறுக்கணும்? அதுல என்ன பாவம் வந்தது?

பரபர'வென எழுந்து அந்தக் கடிதத்தோடு ஷாலினியின் வீட்டுக்குப் புறப்பட்டான்.

"என்ன ர'ம் இந்த நேரத்துல?"

"இதைப்படி!"

படித்து, முகம் இருண்டு போனாள். "நான் அப்பவே சொன்னேன்" உதட்டுக்குள் முணுமுணுத்தாள்.

என்ன அப்பவே சொன்னே? என்ன நியாயம் இந்த லெட்டர்ல?"

"ஒரு மனைவியோட நியாயம் கண்டிப்பா இருக்கு. என்ன பதில் எழுதப் போறீங்க?"

"புரிஞ்சிக்க முடிஞ்ச அன்னிக்கு வரலாம்னு".

"அய் அப்பா" ஓடி வந்த சூர்யாவை வலது கையால் தடுத்தாள். "ராஸ்கல், உன்னோட இந்த 'அப்பா' தான் ஒரு குடும்பத்தையே கூறு போட்டிருக்கு. போ உள்ளே!"

"ஷாலினி, என்ன இது குழந்தையை?"

"ப்ளீஸ் ராம், கெட் அவுட்!"

"ஷா 'லினி?"

"ஐ ஸே யு கெட் அவுட்" குரலெடுத்துக் கத்தினாள். அவன் கால்களை வெளியே பதிக்க, கதவை அடித்துச் சாத்திவிட்டு, மடிந்து உட்கார்ந்து அழுதாள்.

"ஏம்மா, அப்பாவை வெளியே விட்டு கதவைச் சாத்தறே?"

"அப்பா எப்பம்மா வருவார்?" சூர்யாவின் மெல்லிய குரல் தேய்ந்து கொண்டே வந்தது.

* * * * *

நான் செய்தது தவறே என்று தினமும் வாசலைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் ஷாலினி.

தன் கடிதம் கணவனிடம் பாதிப்பை ஏற்படுத்தி, தன்னைத் தேடி வருவான் அல்லது பதிலாவது வரும் என்று வாசல் படியில் தவமிருக்கிறாள் வத்சலா.

இரண்டு வீட்டுக்குள்ளும் தினமும் மழலைக் குரல்கள் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன.

"எப்பம்மா அப்பா வருவார்?"

சராசரிகளால் காயம் பட்டுப்போன அந்த நல்ல மனிதன் இனி வரவேமாட்டான் என்பது அந்தக் குழந்தைகளுக்கு எங்கே தெரியும்?

தாய்: என்ன, உன்னைக் காதலிக்கிற பையன் அப்பா மாதிரி இருப்பாரா?
மகள்: அப்பா மாதிரி அடங்கி ஒடுங்கி, அதிகம் பேசாமல் இருப்பார் என்று தாம்மா சொன்னேன்.

—எஸ். ஸ்ரீனிவாசன்.



15

**நா**ற்சந்தியைக் கடக்கும் சமயத்தில் டிராஃபிக் ஸிக்னலில் சிவப்புப் பளிச்சிட்டது. மெல்லிய எரிச்சலுடன் காந்தாபந்த் வண்டியை நிறுத்தினான்.

வீட்டில் இன்னும் வேலை முடியவில்லை. டைரக்டரிடமிருந்து ஃபோன் வந்ததால் அதுவும் பிரதமருக்கான காரியம் என்றதால் எல்லா வேலையையும் அப்படியே போட்டு விட்டுக் கிளம்ப வேண்டியதாயிற்று. எட்டரை மணிக்குள் மேக்கப்காரரை அனுப்ப வேண்டும். டீ.வி. ஸ்டேஷனுக்குப் போய் ரெஜிஸ்டரைத் திறந்து அவர் விலாசத்தைப் பார்த்து வண்டியை அனுப்பி வரவழைக்க வேண்டும். பி.எம். வீட்டுக்கு ஆளை அனுப்பிவிட்டால் நம் பொறுப்புத் தீர்ந்தது.

டிராஃபிக் விளக்கு இன்னும் ஆக்ரோஷச் சிவப்பில் இருந்தது. காந்தா பந்த் கவலையுடன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு.

நேற்றே தகவல் தெரிந்திருந்தால் இப்பொழுது இப்படிப் பதற்றப்பட வேண்டியிருந்திருக்காது என்று தோன்றிய நினைப்பை அவன் சட்டென்று அமுக்கினான். பக்கத்து ஃப்ளாட் ரஞ்சனி சொன்ன மாதிரி பிரதமர் நேற்று வரை ஒரிஸ்ஸாவில் பயணம் செய்து கொண்டிருந்தவர். டீ. வி. படப்பிடிப்பு நிகழ்ச்சி இன்றென்று நிச்சயிக்கப்பட்டிருக்கலாம். அல்லது மேக்கப் விஷயத்தைப் பற்றி அவர் மறந்திருக்கலாம்.

சிக்னல் 'க்ளியர்' ஆனதும், அவன் அவசரத்துடன் வண்டியைக் கிளப்பினான். நல்ல வேளையாக இன்னும் தெருக்கள் முழுசாக விழித்துக் கொள்ளவில்லை. அமைதியாகவே இன்னும் இருந்த ஸன்ஸத் மார்கில் நுழைந்து தூர்தர்ஷன் கேந்திராவின் காம்பவுண்டுக்குள் வண்டியை நிறுத்தி, கட்டிடத்துக்குள் விரைந்தபோது அவன் எதிர்பார்த்த மாதிரியே இன்னும் ஸ்டாஃப் யாரும் வந்திருக்கவில்லை.

அவன் ரிஜிஸ்டரைத் திறந்து மேக்கப்மேன் கோபாலின் விலாசத்தை ஒரு சீட்டில் எழுதிக் கையோடு அழைத்து வரும்படி கேந்திரத்தின் டிரைவரிடம் சொன்னான்.

பிரதமரின் வீட்டிற்குப் போக வேண்டும் என்றதும் சாதாரணமாக அசமஞ்சத்தனத்துடன் இருக்கும் டிரைவர் வினாடி வீணாக்காமல் கிளம்பியதைக் கண்டு திருப்தியுடன் உள்ளே சென்றான். மேக்கப் கிட்டை எடுத்துத் தயாராக வைத்திருந்தால் கோபால் உடனடியாகக் கிளம்பச் சௌகர்யமாயிருக்கும் என்று எடுத்து வைத்து ரிஸப்ஷனில் இருந்த அன்றைய செய்தித்தாளை மேலோட்டமாகப் படிக்க ஆரம்பித்தான்.

ஒரு பிரும்மாண்ட கூட்டத்தைப் பார்த்துப் பேசுகிற நிலையில் பிரதமரின் புகைப்படம் முதல் பக்கத்தை நிறைத்தது. கொட்டைக் கொட்டை எழுத்துக்களில் பிரதமரின் வார்த்தைகள்.

''நான் இன்று இறந்தால் என் ஒவ்வொரு துளி இரத்தமும் இந்தத் தேசத்தைப் பலப்படுத்தும்....''

காந்தா பந்த் யோசனையுடன் அந்த வரிகளை மீண்டும் ஒரு வெற்றுப் பார்வை பார்த்தான்.

பிரதமரின் நெருங்கிய வட்டத்தில் இருக்கும் ஓர் எழுத்தாளர் முந்தா நாள் தூர்தர்ஷன் கேந்திராவிற்கு வந்திருந்தபோது பேச்சுவாக்கில் சொன்னது நினைவுக்கு வந்தது.

''பிரதமர் இப்பொழுதெல்லாம் அடிக்கடி மரணத்தைப் பற்றிப் பேசுகிறார்.'' எழுத்தாளர் மெல்லிய குரலில் சொன்னார்.

''காலம் மோசமாகத்தான் இருக்கிறது. அதைப் பற்றிய பிரக்ஞை அவரைவிட அதிகமாக வேறு யாருக்கு இருக்கும்? அவரை என்னவோ ஒரு இரும்பு மனுஷியாக மீடியாவும், எதிர்க்கட்சி, ஆளும் கட்சியும் பிரமையை எழுப்பியிருக்கின்றன. நோபடி நோஸ் ஹௌ வல்நரபிள் ஷி இஸ்!''

# மௌனப் பயணம்

**வாஸந்தி**



எழுத்தாளரின் முகத்தில் ஒரு துயரம் தெரிந்தது.

"ஓர் ஆச்சரியமான விஷயம் என்ன தெரியுமோ? மரணத்தைப் பற்றிப் பேசுகிறாரே தவிர, அதைப் பற்றி அவருக்குத் துளியும் பயமில்லை. நாங்கள் எத்தனை பேர் சொல்லியிருக்கிறோம். நீங்கள் உங்கள் தற்காப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று. அவருக்குக் கோபமே வந்துவிடும். நம் ஜனங்களையே சந்தேகிக்கச் சொல்கிறீர்களா என்னை? என்கிறார். 'படுக்கையில் சாவதைவிட நின்றுகொண்டு சாவது மேலில்லையா என்கிறார்! இவரை என்ன செய்ய முடியும்?" காந்தா யோசனையுடன் பேப்பரைப் புரட்டினாள்.

காலம் கெட்டுத்தான் கிடக்கிறது. அஸ்ஸாம் கலவரத்தின்போது தோன்றாத பயமும் நிச்சயமின்மையும் இப்பொழுது கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களாகப் பஞ்சாப் பிரச்னை தீவிரமாகப் போய்விட்ட பிறகு தோன்றிவிட்டது. பஞ்சாபிலிருக்கும் அவளுடைய உறவினர்களைப் பார்த்து இரண்டு வருஷங்களாகிவிட்டன. 'எங்கள் நிலையே நித்திய கண்டமாக இருக்கையில் நீ வேறு வந்து மாட்டிக்கொள்ளாதே' என்று அவள் கிளம்ப நினைக்கும்போதெல்லாம் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரவில் டெலிபோன் அடித்தால், வாசலில் தந்திச் சேவகன் நின்றால், என்ன சேதியோ என்கிற பயத்தில் இதயம் தொண்டையில் வந்து சிக்குகிறது....

ஹிந்துக்கள் இனிமேல் இங்கு நிம்மதியாகவே இருக்க முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று அவளுடைய சித்தி சென்ற மாதம் எழுதியிருந்தாள்.

"பிரிவினை வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. அதன் சோகமும் நஷ்டமும் எப்படிப்பட்டது என்று உனக்குத் தெரியும்..!

பிரிவினை... ஹிந்து—சீக் பிளவினாலா?

எத்தனை அபத்தமான அசம்பாவிதம் இது! ஹிந்து முஸ்லீம் பேதத்தின் அளவு இது இருக்க முடியுமா? சீக்கியர்கள் யார்? ஹிந்துக்களே அல்லவா?

காந்தாவுக்குப் புரியவில்லை. இந்த நிலைமை



எப்படி ஏற்பட்டது என்று நிச்சயமாகப் புரிய வில்லை.

பிரிவினை என்றாலே தேகம் நடுங்குகிறது. நினைவுப் பெட்டகத்தின் அடியில் புதைக்கப் பட்டிருக்கும் நினைவுகள் சீறிக் கொண்டு எழுகின்றன. பன்னிரண்டு வயதுச் சிறுமியாகக் கொள்ளை அழகும் கற்பனைகளும் மலரக் குமரிப் பருவத்தில் காலடி வைக்கும் போதில் லாகூரில் பட்டு வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்த அவள் தந்தையின் பிரும்மாண்டக் கடை எரிக்கப்பட்டதும், உயிரைக் காப்பாற்றிக்கொண்டால்போதும் என்று போட்டது போட்டபடி இலஹாபாதுக்கு ஓடி ஏதோ ஒரு உறவினர் வீட்டில் இரண்டுவருஷங்களுக்கு ஒண்டியதும், கிடந்த பட்டினிகளும் பட்ட அவமானங்களும்.... அப்பா இலஹாபாதில் துவங்கிய வியாபாரம் நிமிரவே நிமிராமல் முடங்கியதும்.... இன்னும் பல ஜன்மங்களுக்கு மறக்காது.

''மேடம், அந்த ஆள் கிடைக்கவில்லை!'' அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

டிரைவர் நின்றிருந்தான் ஒண்டியாக. அவள் பரபரப்புடன் மற்ற மேக்கப்காரர்கள் இரண்டு பேர்களின் விலாசங்களைக் கொடுத்தாள்.

''உடனே போ. கையோடு அழைத்து வா'' என்று துரிதப்படுத்தினாள்.

''இருந்தால் தன்னாலே அழைத்து வர மாட்டேன்?'' என்று டிரைவர் முணுமுணுத்த படி சென்றான்.

டைரக்டர் இரண்டு முறை டெலிபோன் செய்துவிட்டார்.

''பி. எம். வீட்டிலிருந்து போன் வந்து கொண்டேயிருக்கு. எங்கே போய்விட்டான் அந்த மடையன்?'' என்று இரைந்தார்.

''இன்னும் இரண்டு விலாசங்களைக் கொடுத்திருக்கேன். அவர்களும் கிடைக்க வில்லையானால் நானே போகிறேன். கவலைப் படாதீர்கள். பி. எம்முக்குச் சாதாரண மேக்அப்தான் செய்ய வேண்டியிருக்கும். அதை நானே செய்வேன்'' என்றாள் அவள்.

''நேரமாகிக் கொண்டிருக்கிறது. உனக்குத் தெரியும். பிரதமர் நேரத்தைப் பற்றி எத்தனை 'ஸ்ட்ரிக்ட்' என்று! டோன்ட் லெட் மீ டவுன்!''

''டோன்ட் வர்ரி ஸார், அது என் பொறுப்பு!''

அவளுக்குக் கவலையேற்பட்டது. டிரைவரை இரண்டாம் முறை அனுப்பியது தவறு என்று அடித்துக் கொண்டது.

போன சுருக்கில் டிரைவர் வந்து நின்றான், மற்றவர்களும் கிடைக்கவில்லை என்று.

''நானே கிளம்பறேன்!'' என்று அவள் மேக்கப் கிட்டை அவனிடம் கொடுத்தாள். வண்டியில் ஏறப்போகும் சமயத்தில் காஷுவல் லேபரில் வேலைக்கு வரும் மேக்கப்மேன் ராம்குமார் வருவது கண்ணில் பட்டது.

அவள் சட்டென்று அவனைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி, ''நீ போய்விட்டு வாயேன் பி.எம். வீட்டுக்கு? எனக்கு இன்னும் வீட்டில் ஒரு வேலை ஆகவில்லை!'' என்றாள்.

அவனுடைய திகைப்பு முகத்தில் தெரிந்தது.

''நான் போவேன். ஆனால் என்னை உள்ளே விடமாட்டார்கள் மேடம். நான் காஷுவல் லேபர், ஐடென்டிட்டி கார்டு என்னிடம் இல்லை!''

''ஓ ஆமாம்!'' என்று அவள் ஒப்புக் கொண்டாள் வேறு வழியில்லாமல். 'நாம ரெண்டு பேருமாப் போகலாம் வா. நான் சொன்னால் உன்னை விடுவார்கள். விட வில்லையானால் நான் மட்டும் உள்ளே போகிறேன்!''

பிரதமருக்கு மேக்கப் போட வேண்டும் என்கிற நினைப்பு சட்டென்று ராம்குமாரின் முகத்தில் ஒரு பிரசன்னத்தை ஏற்றிவிட்டதை அவள் கவனித்துத் தனக்குள் புன்னகை புரிந்து கொண்டாள்.

சரியாகப் பத்து வருஷங்களுக்குமுன் ஒரு நாள் மாலை திடுதிப்பென்று இதே பிரதமர் அவள் வீட்டிற்கு வந்து அவள் எதிரில் நின்ற போது அவளுக்கு ஏற்பட்ட திகைப்பு நினைவுக்கு வந்தது. இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் நம்ப முடியாததாக இருந்தது. இலஹாபாதைச் சேர்ந்த பெரிய எழுத்தாளர் சுமித்ரானந்தன் பந்த் நோய் வாய்பட்டுச் சிகிச்சைக்காகத்தில்லிக்குவந்தபோது அவள் வீட்டில் தங்கியிருந்தார். பிரதமருக்கு அவர் குடும்ப நண்பரானதால் அவர் தங்கியிருக்கும் இடத்தைத் தேடிப்பிடித்து முன்னறிவிப்பில்லாமல் திடுதிப்பென்று –

இப்பொழுது நினைத்தாலும் காந்தாவுக்குச் சிரிப்பு வந்தது. மாம்பழப் பாயசம் செய்வதற்காகச் சாப்பாட்டு மேஜைமேல் சாமான்களைப் பரத்திப் பாத்திரத்தில் மாம்பழத்தைப் பிழிந்து கொண்டிருந்தாள். எதேச்சையாகத் தலை நிமிர்ந்தபோது எதிரில் மெல்லிய புன்னகையுடன் பிரதமர்!

''சுமித்ரானந்தன் ஜியைப் பார்க்க வந்தேன்!'' என்று அவர் எளிமையாகச் சொன்னதை அரை விநாடி கழித்துக் கிரகித்து மாம்பழக் கையுடனேயே அவரை அழைத்துச் சுமித்ரானந்தன் எதிரில் உட்கார்த்தியது இப்பவும் நம்ப முடியவில்லை.

''இரும்பு மனுஷி!''

பிரதமர் அன்று அங்கு இருந்த ஒரு மணி நேரத்தில் பலமுறை சுமித்ரானந்தரிடம், ''உங்களுக்கு ஏதானும் சிரமம் உண்டா? டாக்டர்கள் சரியாகக் கவனிக்கிறார்களா? உதவி ஏதும் வேண்டுமா?'' என்று கேட்டதில் இருந்த வினயத்தையும் அக்கறையையும் எப்படி மறக்க முடியும்?

* * * * *

வண்டி நின்றது. பிரதமரின் வீட்டு அவுட்டர்ரிங் ஸெக்யூரிட்டி கார்டுகள் வழக்கமான கேள்விகள் கேட்டார்கள். ராம்குமாரிடம் ஐடென்டிட்டி கார்ட் இல்லை என்றதும்,

''ஸாரி, உன்னை விட மாட்டோம்!'' என்றார்கள்.

''பி. எம். எங்களுக்காகக் காத்திருக்கிறார். நீங்கள் விசாரித்துப் பாருங்கள். வேறு மேக்கப்மேன் கிடைக்காததால் இந்த ஆளை

அழைத்து வந்தேன். இவரை எனக்குப் பத்து வருஷமாகத் தெரியும். நான் தூர்தர்ஷனில் ஒரு பொறுப்புள்ள அதிகாரி'' என்றான் அவன்.

அவனுடைய அடையாளச் சீட்டைப் பார்த்துவிட்டு அவர்களுடைய அனுமதியுடன் காம்பவுண்டு வாசலுக்குச் சென்றதும், மறுபடி ஸெக்யூரிட்டி செக்கப்பில் உள்ளேவிட முடியாது என்றார்கள்.

''நீங்கள் டெலிபோன் செய்து விசாரித்துக் கொள்ளுங்கள். எங்களுக்காகப் பிரதமர் காத்திருக்கிறார்'' என்றான் அவன் பொறுமையாக.

கார்ட் உள்ளே சென்று இரண்டு நிமிஷங்களில் திரும்பி ''நீங்கள் உள்ளே போகலாம்'' என்றார்.

அவனும் ராம்குமாரும் வீட்டில் காலடி வைத்த அதே சமயத்தில் இந்திரா உள்ளேயிருந்து வெளியில் வந்தார்.

''மன்னியுங்கள். நேரமாகிவிட்டது'' என்று காந்தா ஆரம்பிப்பதற்குள்,

''பரவாயில்லை. வாருங்கள்'' என்று உள்ளே போனார். ஹவுஸ் கோட்டில் இளைத்துத் தெரிந்தார்.

''முன்னைக்கு இப்பொழுது இளைத்திருக்கிறீர்கள்'' என்றான் காந்தா.

''இல்லையே!''

நேராக நாற்காலியில் அமர்ந்த அவருடைய முகத்தைப் பூவைத் தொடுவதுபோல் ராம்குமார் வேலையை ஆரம்பிக்கையில் இன்று காலை எழுந்தபோது தனக்கு இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் வரும் என்று நிச்சயம் இவன் நினைத்திருக்க மாட்டான் என்று காந்தா தனக்குள் புன்னகை செய்து கொண்டான். இந்திரா அவனைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அவருக்கு இருக்கிற அலுவல்களில் பிரச்னைகளில் பத்து வருஷத்துக்கு முன்னால் பார்த்த முகம் எங்கே ஞாபகம் இருக்கும் என்று அவன் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டான்.

''நேற்று இரவு புவனேஸ்வரிலிருந்து லேட்டாக வந்தேன். தலைக்கு ஸ்நானம் செய்து ஈரத்தலையோடு படுக்கப் போய்விட்டேன். அதில் கொஞ்சம் ஜலதோஷம் பிடித்துவிட்டது. கண்ணில் கொஞ்சம் வீக்கம் இருக்கு. அதற்குத்தான் லேசாக டச் அப் செய்யணும். இல்லையானால் காமிரா க்ளோஸ் அப்பிலே அசிங்கமாத் தெரியும்.'' என்றார் அவர் ராம்குமாரிடம்.

தன்னைப் பற்றி ஞாபகப்படுத்தலாமா என்று காந்தா தயங்குகையில் அவர் அவன் பக்கம் பார்த்துச் சிரித்தபடியே,

''இப்பவும் மாம்பழப் பாயசம் செய்வீர்களா?'' என்றார்.

அவன் திக்குமுக்காடிப் போனான் இதைக் கொஞ்சமும் எதிர்பாராத திகைப்பில். பெரிய சிரிப்பாய் மலர்ந்தது.

மேக்கப் முடிந்தது. காந்தா எழுந்தான். ''நாங்கள் கிளம்புகிறோம்'' என்றான் மெல்ல.

''இருங்கள். தேநீர் அருந்திவிட்டுப் போகலாம்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்ற

''இந்த ஹோட்டல் இட்லி மல்லிகைப்பூ மாதிரி இருக்கும்.

''அவ்வளவு மிருதுவா?''

''ஊஹூம்... சைசை சொன்னேன்.''

—''இளைழக்கதிர்.''



ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் ஆரஞ்சு நிறப் பட்டுப்புடவையில் திரும்பி வந்தார் இந்திரா.

தேநீரை யாரோ நீட்டினார்கள். அதை வாங்கிக் கொண்டபடி, விருவிருவென்று நடந்து வெளியே செல்லும் அவரை அரை விநாடி பார்த்துவிட்டுக் காந்தா குனிந்து தேநீரை அருந்தக் கப்பை உதட்டுக்கு எடுத்துச் செல்லும் தருணத்தில் —

பட்டாசு வெடிச் சத்தம்போல் தோட்டத்தில், அருகில், மிக அருகில் கேட்டது. தொடர்ந்து வெடிச் சத்தம் — ஏழு, எட்டு, பன்னிரண்டு, பதினாறு?

திமுதிமுவென்று பலபேர் கத்தும், ஓடும், சுடும், பேசும் சத்தங்கள் —

காந்தாவின் கையிலிருந்த கோப்பை கீழே விழுந்து நொறுங்கிற்று. நாடி நரம்பெல்லாம் துடிக்கச் சரேலென்று தோட்டத்துக்கு ஓடிய போது —

இந்திரா இரத்தக் குட்டையில் கிடந்தார். ஆரஞ்சுப் புடவை சிவப்பாய் மாறிக் கொண்டிருந்தது.

சற்றுத் தொலைவில் இரண்டு ஸெக்யூரிட்டி போலீஸ்காரர்களின் உடல்களும் நிலத்தில் கிடந்தன.

சிலையாய் ஸ்தம்பித்து நின்றவர்கள் சுரணை பெற்று ஆம்புலன்ஸ் எங்கே வண்டியெங்கே என்று அலங்கமலங்க விழிக்கையில், மார்பை அடித்துக் கொண்டு சுற்றிலும் ஓலங்கள் கேட்டன —

''ஸர்தார்களை இனியும் நம்பாதீர்கள். அருகில் வைத்துக் கொள்ளாதீர்கள் என்று எத்தனை சொன்னோம். அம்மா கேட்கவில்லையே! என்ன செய்வோம், என்ன செய்வோம்!''

அவன் விழிகள் பிதுங்க அடிபட்ட பட்சி போல் கிடக்கும் பிரதமரையும் குப்புற விழுந்திருக்கும் அந்த இரு சீக்கியர்களையும் பார்த்தான். நாபியிலிருந்து ஒரு ஆக்ரோஷம் கிளம்பிப் பார்வையை மறைத்தது.

(தொடரும்)



• சரோஜினி வரதப்பன்

# பெண்களின்...
## முன்னேறியிருக்கிற...

இந்த ஆண்டு எஸ். எஸ். எல். சி. ... மாணவ, மாணவியரில் மாணவர்களைவிட ... சதவிதம் அதிகம் தேர்ச்சி பெற்றிருக்கிறார்... இடங்களையும் மாணவிகளேதான் தட்டிச் ... கள். அதுவும் — எப்போதும் இல்லாத வ... அளவிலான மாணவிகள் அந்த இடங்க... றார்கள். இந்தப் போக்கு எதைக் காட்டுகிற... நமது பெண்களின் நிலை உயர்ந்து விட்ட... கிறதா? உண்மையில் இந்தக் கல்வி அவர்க... வாழ்க்கைக்கு எந்த அளவுக்கு உதவப் போ...

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இதோ... வளிக்கிறார்கள்:—

**திருமதி சரோஜினி வரதப்பன்:**

பொதுவாகச் சொல்வதென்றால் இந்தப் போக்கு பெண்களுக்கான முன்னேற்றத்தின் முதற்படி என்றுதான் சொல்ல வேண்டும். ஆனாலும் இந்தக் கல்வி அவர்களின் நடைமுறை வாழ்க்கைக்கு உதவுமா? அவர்கள் நன்றாகத்தான் படிக்கிறார்கள். ஆனால் எதைப் படிக்கிறார்கள்?

ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளின் பாடப் புத்தகத்தை எடுத்துப் பாருங்கள். அம்மா சமையலறையில் சமைத்துக் கொண்டிருப்பாள். அப்பா ஹாய்யாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதாவதொரு பேப்பர் படித்துக் கொண்டிருப்பார். அவருக்கருகில் ஆண் குழந்தை ஏதாவது படித்துக் கொண்டோ அல்லது எழுதிக் கொண்டோ இருப்பான். பெண் குழந்தையோ ஏதாவதொரு குழந்தை பொம்மையை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும்.

இதுமாதிரியான படங்களைத்தான் பாடப் புத்தகங்களில் போடுகிறார்கள். இது எந்த மாதிரியான மன நிலையை வளர்க்கும்? ஆண் என்றால் அவன் வீட்டு வேலைகள் எதையுமே செய்ய வேண்டியதில்லை. பெண் என்றால் சமைப்பது போன்ற வீட்டு வேலைகள் செய்ய வேண்டும்; குழந்தைகளைப் பெற வேண்டும் என்கிறஒர் ஆண் ஆதிக்க மனநிலையைத்தான் வளர்க்கும்.

இந்த நிலையை ஒழிக்க முதலில் நமது கல்வித் திட்டத்தையே அடியோடு மாற்ற வேண்டும்.

**மால்கம் ஆதிசேஷய்யா: (முன்னாள் துணைவேந்தர்):**

இந்த ஆண்டு பெண்கள் அதிகம் தேர்ச்சி பெற்றிருப்பதற்குக் காரணம் அவர்களுடைய கடுமையான உழைப்புத்தான்! நமது பெண்கள் நிறைய உழைக்கிறார்கள். ஆனால் அந்த உழைப்பெல்லாம் வீணாகப் போகிறதோ என்றுதான் சந்தேகப்படத் தோன்றுகிறது. காரணம் தங்களின் நிலை இன்னமும் இந்தச் சமுதாயத்தில் தாழ்ந்துதான் இருக்கிறது என்பதை அவர்கள் உணரவில்லை. முதலில் இதை உணருவதற்கான கல்விமுறை வேண்டும்.

கொடைக்கானலில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பெண்கள் பல்கலைக் கழகம் பெண் உரிமைக்குப் பாடுபடும். எந்தெந்தத் துறைகளிலெல்லாம் பெண்கள் தாழ்த்தப்படுகிறார்கள் என்பதை அடையாளம் காண்பதும், அவர்களைப் பாதிக்கும் வகையிலான பாட நூல்களை அறிந்து கொண்டு குறைகளை நிவர்த்தி செய்வதும்தான் அதன் வேலை. அதன் மூலம் நிச்சயம் பெண்களின் நிலை மாறும் என்றே நம்புகிறேன்.

• சரயாபேகம்



• திருமதி சே...





* மால்கம் ஆதிசேஷய்யா

...வு எழுதிய
...விகள் ஏழு
...முதல் ஐந்து
...றிருக்கிறார்
...ல் மாவட்ட
...பெற்றிருக்கி
...முதாயத்தில்
...ான் காட்டு
... நடைமுறை
...?
...வர்கள் பதி

**திருமதி சேகர் (முதல்வர், வெலிங்டன் சீமாட்டி ஆசிரியர் கல்லூரி):**

ஆண்களுக்குத் தாங்கள் குறைந்தவர்கள் அல்லர் என்று நிரூபிக்கும் போட்டி மனப்பான்மையே பெண்களின் கல்வி ஆர்வத்திற்குக் காரணம். படித்த பெண்கள் கூட சமுதாயப் பிரச்னைகளைச் சமாளித்துத் தன்னம்பிக்கையுடன் வாழ முடிவதில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை. அதற்குப் பாடத்திட்டத்தைக் குறைகூறிவிட முடியாது. அதை மாற்ற வேண்டிய அவசியமும் இல்லை. பெற்றோர்கள் பெண்களை வளர்க்கும் விதம்தான் அவர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதாக இல்லை. அதைத்தான் நான் குறை சொல்லுவேன்.

மேலும் ஆபாசமான மனத்தைக் கெடுக்கும் பத்திரிகைகள், சினிமா, டி.வி. போன்றவற்றின் பாதிப்பும், படித்தால் மட்டும் வேலை கிடைத்துவிடவா போகிறது என்ற ஆண்களின் சலிப்பு மனப்பான்மையும் அவர்களின் கல்வி ஆர்வத்தைக் குறைத்து விடுகிறது. இந்த ஆர்வம் எப்போதும் நீடிக்க வேண்டுமானால் படித்தவுடன் எதிர்காலத்திற்கான வேலை உறுதி என்ற நிலையை இருபாலருக்கும் நாம் உருவாக்கியாக வேண்டும்.



* ஜெகதீசன்

**டாக்டர் பெ. ஜெகதீசன் (ரீடர், வரலாற்றுத்துறை, சென்னை பல்கலைக் கழகம்):**

கல்விக்கும் ஆண்களுக்கும் இடையிலான தொடர்பு ஏழு தலைமுறைகளாக இருக்கிறதென்றால் பெண்களுக்கும் கல்விக்குமான தொடர்பு கடந்த மூன்று தலைமுறைகளாகத்தான் இருக்கிறது. அந்த ஆரம்ப விறுவிறுப்புத்தான் இன்றைய தேர்ச்சி விகிதம். இதோடு பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளின் சிந்தனைகள், வார்த்தைகள், நடவடிக்கைகளின்மீது காட்டும் கண்டிப்பை ஆண் குழந்தைகளின் விஷயத்தில் காட்டுவதில்லை!

இருந்தாலும், தேர்வுகளில் வெற்றி பெற்றாலும் நடைமுறைப் பிரச்னைகளை அணுகுவதிலும், அதற்கான சமூகத் தகுதியிலும் ஆண்களைப் பெண்கள் வெற்றி பெற்று விடுவார்கள் என்று ஒருபோதும் சொல்லிவிட முடியாது. காரணம் வாழ்க்கைப் பிரச்னைகள் எதிர்கொள்ளும் கடமையும், பெருமையும் ஆணுக்கே உரியவை என்ற மனப்பான்மை பெண்களிடம் இருப்பதுதான்!

இதன் காரணமாகவே பெண் கல்வி என்பது அவளுடைய திருமணத்திற்கு முன்பு வரையிலான ஒரு பொழுது போக்காகவோ



• லக்ஷ்மணன்



• எலிசபெத்

அல்லது ஆடம்பரமானதாகவோதான் இருக்கிறது. வெகு சிலருக்கே வாழ்க்கையின் தேவையாக இருக்கிறது. ஆண்களுக்கிருப்பதைப் போன்ற தனித்தன்மையும், தனி மனிதச் சிறப்பியல்பும் தங்களுக்கும் உண்டு என்பதை அவர்கள் உணர வேண்டும். இந்த நிலை மாறாத வரையில் தேர்வுகளில் வெற்றி என்னும் வெறும் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு பெருமைப்பட்டுவிட முடியாது.

**டாக்டர் ஜி. வி. சுரயாபேகம் (முதல்வர், கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி):**

நான் கல்லூரி முதல்வர் மட்டுமில்லை. ஒரு தாய். எனக்கும் இரண்டு மகன்கள் ஒரு மகள் இருக்கிறார்கள். அவர்களுக்கிடையிலுள்ள வித்தியாசத்தை நான் கவனிக்காமலில்லை.

பொதுவாகவே ஆண்கள் அதி அற்புதமாகப் படிப்பார்கள். அல்லது படு மோசமாகப் படிப்பார்கள். ஆனால் பெண்கள் அப்படியல்ல; அவர்கள் மிகவும் பொறுப்புணர்ச்சி கொண்டவர்களாக இருப்பதால் எதையும் பொறுமையாக — ஒரே சீராகப் படிப்பார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் பெண்களுக்கு வீட்டில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள்தான். அதனால்தான் அவர்களால் படிப்பில் அதிகமான கவனத்தைச் செலுத்த முடிகிறது. இப்படிப்பட்ட தொருநல்லகட்டுப்பாடுகள் பெண்களுக்கு அவசியம் தேவை என்றுதான் நான் சொல்லுவேன். இவற்றோடு பெண்கள் தங்கள் வாழ்க்கைக்காக மற்றவர்களை நம்பியிருக்காமல் சுயமாகச் சம்பாதித்து வாழும் மனநிலையும், ஆண்களைப் போல மேலும் மேலும் முன்னேற வேண்டும் என்ற உத்வேகத்தையும் பெற வேண்டும். அது மிகமிக முக்கியம். அதற்கு இப்போதிருக்கும் கல்வி ஆர்வம் உதவியாக இருக்கும் என்றே நம்புகிறேன்.

**லக்ஷ்மணன் (ஆராய்ச்சி மாணவர்):**

பெண்களின் கல்வி ஆர்வம் அதிகரித்துக் கொண்டிருந்தாலும், படித்துப் பட்டம் பெற்ற பெண்கள் கூடத் தங்கள் வாழ்க்கையில் சுதந்திரமாக இல்லை என்றுதான் சொல்லுவேன்.

காரணம், கையில் பேனா பிடிப்பதைவிடக் கரண்டியைப் பிடிப்பதில்தான் பெண்களே அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்! அதற்காக படித்தபெண்களெல்லாம்கரண்டிபிடிக்கவே கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. சமையலறைக்கு அப்பாலும் வாழ்க்கை பரந்து கிடக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும் என்கிறேன். இதை அவர்கள் உணராத வரையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

**செல்வி எலிசபெத் (எம். ஏ. மாணவி):**

பலநூறு ஆண்டுகளாகப் பெண் கல்வியைப் புறக்கணித்து வந்த சமுதாயத்திற்கு அதிர்ச்சி தரும் வகையில் பெண்களின் கல்வி ஆர்வம் அதிகரித்துக் கொண்டு வருவதைத் தான் இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்தக் கல்வி ஆர்வம் ஒரு சில குறிப்பிட்ட துறைகளில் மட்டுமே தேங்கிவிடாமல் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாகப் பரந்துபட வேண்டும். குடும்பப் பொறுப்போடு சமுதாயப் பொறுப்பும் தங்களுக்கிருக்கிறது என்று எப்போது பெண்கள் எண்ணுகிறார்களோ அப்போதுதான் உண்மையில் பெண்களின் நிலை உயர்ந்ததாகச் சொல்ல முடியும்.

பேட்டி: கே. பாரதி.

படங்கள்: சுபா.

---

பெண்: புடவைக்குப் பத்து வருஷம் கேரண்டின்னு சொன்னீங்க. புடவை ஆறு மாசத்துக்கு மேலே வரலியே...?

கடைக்காரர்: அந்தப் புடவைதான் எங்கக் கடையிலே ஒன்பது வருஷம் ஆறு மாசம் இருந்திருக்கே.

— ஜா. ரவி.



# இன்சுவை ஜோடி!
## சக்திக்கும் சுவைமிகு மொறுமொறுப்புக்கும் ஸ்பென்ஸர்ஸ் ஹைமில்க் மற்றும் நைஸ் பிஸ்கெட்டுகள்



ஸ்பென்ஸர்ஸ் ஹைமில்க்—கறந்த பாலின் இனிமையுடன் சக்தி தரும் புரதச் சத்துக்களும் சேர்ந்த முத்தான பிஸ்கெட்.

அதனுடன் இணைசேர்ந்து தெவிட்டாத சுவை அளிப்பது தேங்காயும் சர்க்கரையும் பாங்குறக் கலந்த மொறுமொறுப்பான நைஸ் பிஸ்கெட்.
ஸ்பென்ஸர்ஸ் நைஸ்.




**ஸ்பென்ஸர்ஸ்**
**பிஸ்கெட்டுகள்**
**சுவைத்திடச்சிறந்தவை**

**ஸ்பென்ஸர்ஸ்**
ஸ்பென்ஸர் & கோ. லிமிடெட்
769, அண்ணா சாலை,
சென்னை 600 002

FAME/S/1128 TAM

# ஏன் ரம்யாவா இப்படி?

திமரென்று அந்தக் காலை நேரத்தில் பெட்டி, படுக்கைகளோடு ஆட்டோவிலிருந்து மோகன் இறங்கியதைக் கண்ட வெற்றிவேலுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. மிக மகிழ்ச்சியுடன் அவனை வரவேற்றவன், "ஒரு கடிதம்கூடப் போடாமல் இப்படி 'திடும்' என்று வந்து குதித்திருக்கிறாயே, என்ன அப்படித் தலைபோகிற விஷயம்?" என்று கேட்டான்.

"தலை போகிற விஷயம்தான்! நேராக இங்கேதான் வந்து இறங்கியிருக்கிறேன். முதலில் இப்போது ரம்யாவைப் பார்க்க வேண்டும். அதன்பின் நாளைதான் என் பெற்றோரைப் பார்க்க அன்னஞ்சி செல்ல வேண்டும்!" என்றான் மோகன்.

"சே!" கோபப்படுவதுபோல் பாவனை காட்டினான் வெற்றிவேல். "நீ என்னைத்தான் பார்க்க வந்திருக்கிறாயென்று நான் எண்ணி மகிழ்ச்சியடைந்தது எவ்வளவு பெரிய மடத்தனம்!"

"போதும்டா! அறுக்காதே. கிளம்பு, சமதர்மபுரத்துக்கு!"

"ரம்யாவைப் பார்க்கத்தானே? இப்போதுதான் நெடுந்தூரத்திலிருந்து வந்திருக்கிறாய். ஒரு தூக்கம் போடு. வெயிலும் கொஞ்சம் குறையட்டும்!"

"அதுவும் சரிதான்!"

"ரம்யாவை எதற்குப் பார்க்கப் போகிறாய்?" வெற்றிவேல் கேட்டான்.

"இது என்னடா கேள்வி? நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் நீண்ட காலமாகக் காதலிக்கிறோம். அச்சமயம் நிரந்தர வேலையில்லாதிருந்தேன். நிரந்தர வேலையும், சம்பாத்தியமும் இருந்தால்தான் ரம்யாவை மணக்க முடியும் என்று அவளது அப்பா கூறினார். எனக்கு ஏற்பட்ட வேகத்திலும், கோபத்திலும் உங்கள் எல்லோரிடத்திலும் சொல்லிக் கொண்டுதானே பம்பாய்க்குச் சென்றேன்? ஒன்றுமே தெரியாதது மாதிரிக் கேட்கிறாயே?"

"எல்லாம் தெரிந்துதான் கேட்கிறேன் மோகன்! அப்போதே ரம்யாவுக்கு என்ன வயதிருக்கும்?"

"இருபது அல்லது இருபத்திரண்டு இருக்கும்!"

"இப்போது மேலும் மூன்றாண்டுகள் முழுதாக ஓடிவிட்டன. அதுவரைக்கும் எந்த அப்பன் தன் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்காமல் வைத்துக் கொண்டேயிருப்பான்?"

"நீ என்ன சொல்கிறாய் வெற்றிவேல்? எனக்காகக் காத்திருப்பதாய் ரம்யா சொல்லியிருந்தாளே?"

"சொல்வாள், சொல்வாள்! மோகன் நமது சமூக அமைப்பில் பெண்களால் இந்தச் சமூகத்தை எதிர்த்து நிற்க முடியாது. அதைத் தெரிந்து கொள் முதலில்!"

"நீ... நீ என்ன சொல்கிறாய்?" மோகன் தடுமாற்றத்தோடு கேட்டான்.

"ரம்யாவுக்குத் திருமணம் ஆகியிருக்கலாம்!"

"என்ன! இங்குள்ள யாரிடமும் என் பம்பாய் முகவரிக்குக் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ளாதது எவ்வளவு பெரிய தவறு!" தன்னையே நொந்து கொண்டான் மோகன்.

"மாலையில்தான் அவளது வீட்டுக்குப் போகிறோமே— அப்போது நீயே தெரிந்து கொள், நான் யூகித்தது சரியா, தப்பா என்று!"

மாலை மூன்று மணியளவில்—

இருவரும் சமதர்மபுரத்துக்குக் கிளம்பும்போதே, 'கொண்டு ராஜா நினைவு நடுநிலைப் பள்ளி'யைக் கடந்தபோது, அங்கு வாக்குச் சாவடி அமைக்கப்பட்டு, ஓட்டு பதிவு நடந்து கொண்டிருந்தது. "மோகன்! கால்மணி நேரம் ஓரமாக நில்! அதற்குள் நான் என் ஓட்டைப் போட்டுவிட்டு வந்துவிடுகிறேன்..." என்று வேண்டிக் கொண்டான் வெற்றிவேல்.

வாக்குச் சாவடி முன் ஆண்கள் வரிசை குறைவுதான். சற்று தள்ளி பெண்கள் வரிசைதான் அதிக நீளமாக இருந்தது.

சாலை ஓரமாக வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றவர்களோடு, தானும் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் மோகன்.

ஓட்டு போட்டவர்களும், போடாதவர்களும் ஆங்காங்கே வருவதும், போவதுமாயிருந்தார்கள். கட்சித் தொண்டர்கள், அவரவர் கட்சிச் சின்னத்தை ஓட்டு போட வருபவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருந்தார்கள்.

எதிர்பாராதவிதமாக, மோகன் வேறொரு காட்சியைக் கண்டுவிட்டான். உடனே திடுக்கிட்டான். ஆம்—

நின்றிருந்த பெண்கள் வரிசையை நோக்கி எதிர்த்திசையிலிருந்து வந்து கொண்டிருந்தாள் ரம்யா, இடுப்பில் ஒரு கைக்குழந்தையோடு. முந்தானையைக் குழந்தை இழுத்துவிடும் என்று பயந்தவளாய், கழுத்தைச் சுற்றிப் போர்த்தியிருந்தாள்.

தன் கண்களை நம்பாமல் தேய்த்துவிட்டு நன்றாகவே கவனித்தான் மோகன்.

# அன்பிற்கினியவன்



அவள் ரம்யாவேதான்!

அவளது கையிலிருந்த குழந்தை அழுது கொண்டிருந்தது. அதைத் தட்டிக் கொடுத்து, சமாதானப்படுத்த முயன்றாள்; வீணாயிற்று. பக்கத்திலிருந்தபெண்கள்ரம்யாவிடம்ஏதோ சொன்னார்கள். 'குழந்தை பசியால்தான் அழுகிறது' என்று சொன்னார்களோ என்னவோ? ஏனென்றால் ரம்யா உடனே குழந்தையை அப்படியே தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அந்த அளவில் குழந்தை தன் அழுகையை நிறுத்தியது. முன் பின் தெரியாத பலர் முன்னிலையில் குழந்தைக்குப் பால் கொடுக்க வெட்கப்பட்டிருப்பாள்' என்று மோகன் எண்ணிக் கொண்டான்.

அதே சமயம் பெரியவர் ஒருவர் ரம்யாவிடம் வந்து, "ஏனம்மா அழுகிற குழந்தையோடு நீ இப்படி நின்று கஷ்டப்படுகிறாய்? நேராக உள்ளே வா....!" என்று உரத்த குரலில் சொல்லிவிட்டு, வாக்குச் சாவடிக்குள் அவளைக் கூட்டிச் சென்றார்.

தான் ஏமாற்றப்பட்டதாக மோகன் உணர்ந்தான். கோபம் அதிகமாகி, பற்களை

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

# விஐபி


## கன்காரு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்காரு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

## ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.




தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

LINTAS VIP M 10 2013 TM

"நறநற"வென்று கடித்தான். 'திருமணத்துக்கான ஏற்பாடுகள் செய்வதற்காக வந்திருக்கிறேன். வஞ்சகி! என்னை ஏமாற்றிவிட்டு வேறு எவனையோ மணந்துவிட்டாளே! இவளுக்காகவா இப்படி தினமும் ஏங்கித் துடித்து பம்பாயிலிருந்து ஓடி வந்தேன்? சே!' என்று முணுமுணுத்தான்.

அவள் கண்களில் படுவதையும் வெறுத்தான்.

சில நிமிடங்களில் திரும்பி வந்த வெற்றிவேலிடம், "நான் இங்கு இனி வேறெங்கும் போவதாகவோ, யாரையும் பார்ப்பதாகவோ இல்லை! நேராக உன் அறைக்கே திரும்புவோம்!"

"ரம்யாவைப் பார்க்க—"

வெற்றிவேலை முடிக்கவிடவில்லை மோகன்.

"வேண்டாம். உடனே நான் அன்னஞ்சிக்குக் கிளம்புகிறேன்!" என்றான் திடமாக.

"இவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?" என்று குழம்பினான் வெற்றிவேல்.

* * * * *

"அக்கா! இந்தா வாங்கிக் கொள் உன் குழந்தையை! நீயும் உன் குழந்தையும்!" என்றவாறே அடுத்த வீட்டுக்காரியிடம் குழந்தையை நீட்டினாள் ரம்யா.

"ஏன் ரம்யா! ரொம்பவும் அழுது ஆர்ப்பாட்டம் செய்துவிட்டானா?"

"அதை ஏன் கேட்கிறாய்? 'ஓட்டுப் போடப் போகிறாயே, அப்படியே இவனையும் தூக்கிக் கொண்டு போ. என்னை எந்த வேலையையும் செய்ய விடாமல் எப்போது பார்த்தாலும் தூக்கி வைத்திருக்கச் சொல்லி உயிரை வாங்குகிறான்' என்று சொன்னாயே என்று பரிதாபப்பட்டுத்தானே இவனைத் தூக்கிக் கொண்டு போனேன்? வாக்குச் சாவடியை நான் நெருங்குகிற போதே என்ன அழுகை? அழுது ஊரையே கூட்டிவிட்டான் இந்தப் போக்கிரி!"

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? 'குழந்தைக்குப் பசிக்கிறது. தாய்ப்பால் கொடு' என்று சில பெண்கள் என்னிடம் சொன்னார்கள். என்கிட்டே ஏது தாய்ப்பால்? நல்ல வேளையாய் ஒரு பெரியவர் வந்து, என்னை வரிசையில் நிற்க விடாமல், அழும் குழந்தையை வைத்திருப்பதால், நான் உடனே ஓட்டு போடும்படி ஏற்பாடு செய்தார்....!"

"அதுதானே! ஓட்டுச் சாவடிக்குப் போய் விட்டு இவ்வளவு சீக்கிரமாகத் திரும்பி விட்டாயே என்று யோசித்தேன். விஷயம் இப்படியா? இவனைக் கொண்டு போனதால் தானே நீ வெயிலில் நிற்காமல் வேர்த்து வடியாமல் மகாராணி மாதிரி நேரே போய் ஓட்டும் போட்டுவிட்டு, சீக்கிரம் வந்துவிட்டாய்! இந்தக் குட்டிப் பயலுக்கு நன்றி சொல் முதலில்! அதை விட்டுவிட்டு என் செல்லத்தைப் பற்றிப் புகார் சொல்கிறாயே?" என்று தன் கைக்குழந்தைக்கு முத்தம் கொடுத்துக் கொஞ்சினாள் அந்த அடுத்த வீட்டுக்காரி!

# வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்



## மதிக்கப்பட்ட ஆசிரியர்

போட்டி: 12

நீங்கள் படித்த பள்ளி அல்லது கல்லூரிகளில் உங்களால் மிகவும் மதிக்கப்பட்ட ஆசிரியர் யார்? அவரிடம் இருந்த சிறப்பு இயல்பு என்ன? கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு; தவிர ஒருவருக்குக் குலுக்கல் முறையில் விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ்! உறையின் மேல் 'மதிக்கப்பட்ட ஆசிரியர்' என்று தவறாமல் குறிப்பிடுங்கள்!

முடிவு தேதி: 5.8.85

இன்னும் 41 விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் காத்திருக்கின்றன. அவற்றில் ஒன்று ஏன் உங்களுடையதாக இருக்கக் கூடாது? ஆகவே வாரம் தோறும் போட்டியில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................




# ராகமாலிகா பட்டு சேலைகள்

**சுகன் ஆர்கேட்,**

**நெ. 12பி, நாகேஸ்வரராவ் ரோடு,** பனகல் பார்க் எதிரில்

**தியாகராய நகர், சென்னை-600 017**

(ஞாயிறு கடை உண்டு)

**கல்லூரிப் படிப்பு முடித்துவிட்டு, வெளியில் வரும்போது அரசாங்கமே கூப்பிட்டு வேலை கொடுக்கும் என்றெல்லாம் போக்கத்துப் போய் நம்பிக் கொண்டிருக்காமல் சுயமாய் ஏதாவது ஆரம்பித்து, சொந்தக் காலில் நிற்கும் ஒரு சிலரைப் பற்றி:**

''டைப்ரைட்டிங் எந்த அளவுக்கு வாழ்க்கையை உயர்த்தும் என்பதை மிக நன்றாக உணர்ந்தவள் நான்' என்று ஆரம்பிக்கிறார் உடுமலைப்பேட்டை அமிர்தவல்லி. வசதியாகப் பிறந்தாலும், இடையில் தகப்பனருக்கு ஏற்பட்ட நோயால் வறுமைக்குத் தள்ளப்பட்ட குடும்பம். அம்மாவோ, 'பொண்ணு வீட்டோட இருந்தாப் போதும். படிப்பு, கிடிப்புன்னு வெளியில சுத்த வேணாம்' டைப். அப்பாவோ, ''அவ கிடக்கிறா நீ போய் டைப்ரைட்டிங் கத்துக்கோ'' என அனுப்பி வைத்தார். தினம் பல மைல் நடந்தே போய் டைப் அடித்துவிட்டு வரவேண்டிய நிலையில் பலவிதமான கஷ்டங்கள். அப்படியும் லோயர் தேறிவிட்டார். ஹையர் பரீட்சைக்கு இருபது நாள் இருக்கும்போது அப்பா போய்விட்ட சோகம். வேதனையின் அழுத்தத்திலேயே பரீட்சைக்குப் போனார். குடும்ப நண்பரிடம் 1000 ரூபாய் கடன் வாங்கி, அதிலே ஒரு பழைய டைப்ரைட்டிங் மிஷினை வாங்கி, மரப்பெட்டிக் கடையில் உட்கார்ந்து, வாழ்க்கையைத் துவக்கினார். ஆறே மாதத்தில் ஆங்கில டைப்ரைட்டருக்கு 'கம்பெனி' கொடுக்க ஒரு தமிழ் டைப்ரைட்டர் வந்து சேர்ந்தது. சலியாத உழைப்பு. சேமிப்பும் உண்டு. பாங்க் கடனுதவியுடன் இன்னும் நாலு மிஷின்கள் வாங்கிப் போட்டார். ''செந்தில் டைப்ரைட்டிங் இன்ஸ்ட்டிடியூட்'' திறக்கப்பட்டது. மேலும் பாங்கின் உதவியால் இன்று மொத்தம் 25 டைப்ரைட்டர்கள் நாள் முழுக்க டக் டக் டக்கின்றன. லேட்டஸ்ட் சேர்த்தி ஜெராக்ஸ் மெஷின். இத்தனைக்கும் ஒரே காரணம்? மாறிப் போன எழுத்துக்களை ஒன்று படுத்தி நீங்களே கண்டு பிடித்துவிடலாம். ''க் த ம் கை ன் பி ன''

* * * * *

லட்சுமி நாராயணன், நெய்வேலிக்காரர். பள்ளியில் படிக்கும்போதே படிப்புச் செலவுக்குப் பணம் சம்பாதிக்க வைத்திருந்த உபாயம்: கடைகள், கம்பெனிகள் என்று போய் ரப்பர் ஸ்டாம்புக்கு ஆர்டர் பிடிப்பது. படித்து முடித்ததும் முன் அனுபவம் காரணமாகத் தாமே ஒரு ரப்பர் ஸ்டாம்புகள் தயாரிக்கும் கடையைத் திறந்தார். அல்லும் பகலும் அலையோ அலை என அலைந்து ஆர்டர்கள் பிடித்து, அவற்றைக் குறித்த காலத்தில் டெலிவரி செய்து, ரப்பர் ஸ்டாம்பு தயாரிப்பதில், நல்லதொரு முத்திரையைப் பதித்தார். கூடவே ஒரு சர்க்குலேஷன் லைப்ரரி ஆரம்பித்தார். அதுவும் நன்றாய்ப் போகவே அதைத் தொடர்ந்து இப்போது வீடியோ காஸட் லைப்ரரி தொடங்கியிருக்கிறார். எல்லாவற்றிலுமே செமத்தியான போட்டி. இருந்தாலும் விடாமுயற்சி காரணமாய் வெற்றி நடை போட முடிகிறது இவரால்.

* * * * *

கொப்பம்பட்டியிலிருந்து அன்பு மதியழகன் எழுதியிருக்கிறார். அது சுய வேலை வாய்ப்பை மேற்கொண்ட இளைஞனைப் பற்றிய செய்தி. எம். ஏ. முடித்தும் வேலை கிடைக்காததால் என்ன பண்ணுவதென்று புரியாத நிலை. வீட்டிலே இரண்டு மூன்று கோழி வளர்த்து வந்தார்கள். ஒரு நாள் ''ரெண்டு கோழி முட்டையை விலைக்குத் தர முடியுமா?'' என்று கேட்டு வந்தார் ஒருவர். அப்போதுதான் சட்டென உதித்தது ஒரு ஐடியா. கோழி வளர்ப்பிலேயே முழு மூச்சுடன் ஈடுபட்டால் என்ன? அங்கே இங்கே பணம் புரட்டினார். சின்ன அளவில் ஒரு கோழிப் பண்ணை ஆரம்பித்தார். கடுமையாய் உழைத்தார். இன்றைக்கு நல்ல நிலையில் இருக்கிறார்.

* * * * *

நாமக்கல்லில் இருக்கிறது சுசிலா எம்ப்ராய்டரி & தையல் நிறுவனம். இதனை நிர்வகித்து வரும் மிஸஸ். குழந்தாய் முத்து சின்ன வயதில் ஸ்கூலுக்கு ஐந்து மைல் நடந்திருக்கிறார். எஸ். எஸ். எல். சி. முடித்த பிறகு மேலே படிக்க முடியாது போன குறையைப் போக்கிக் கொள்ள தையல் மிஷின் கம்பெனி ஒன்று நடத்தின தையற் பயிற்சியில் சேர்ந்து, நீடில் ஒர்க், டிரன் மேக்கிங் என்று எல்லாவற்றிலும் 'பிஸ்தா' வானார். அந்தக் கம்பெனி இவரையே ஒரு பயிற்சியாளராக்கியது. இடையில் கணவரின் பிசினஸில் நஷ்டம் ஏற்பட்ட போதிலும் தவணை முறையில் வாங்கின தையல் மெஷின் சம்பாதித்துக் கொடுத்தது.


பத்து வருஷம் சென்று வேலையை ராஜினாமா பண்ணியபோது இவருக்கு சொந்தத்தில் ஒரு வீடு இருந்தது. இன்று பயிற்சி நிலையம் நிறுவி பெண்களுக்குத் தையல் கற்றுக் கொடுக்கிறார். மாசம் 2500 போலக் கிடைக்கிறது என்கிறார் இவரைப் பற்றித் தகவல் அனுப்பின விஜயபாரதி. என்றாலும் தம் பழைய நாட்களை மறக்காமல் ஏழைகளுக்கு இலவசமாய் தையல் கற்றுக் கொடுக்கிறார் குழந்தாய் முத்து.

— எஸ். சந்திரமௌலி.

# கோழிப் பண்ணையும் கோமாளுக்கும்!



**எதிர்காலம்**
**உங்கள் கையில்**



லட்சுமி நாராயணன்



### அகிலனின் ஆசை!

அது ஒரு கவிதை நூல் வெளியீட்டு விழா. அகிலன் அவர்கள் பேச ஆரம்பித்தார். "என்னுடைய சிறு வயதில் நிறையக் கவிதைகள் எழுத வேண்டும் என்று எனக்கு ஆசை. ஒருமுறை ஒரு கவிதை எழுதி ஒரு பத்திரிகைக்கு அனுப்பினேன். அதற்குப்பின் அந்தப் பத்திரிகை வெளி வரவேயில்லை. கொஞ்சம் நாட்கள் கழித்து மீண்டும் ஒரு கவிதை எழுதி வேறொரு பத்திரிகைக்கு அனுப்பினேன். அதோடு சரி; அந்தப் பத்திரிகையும் அதற்குப் பிறகு வெளிவரவில்லை. அதன்பின் நான் கவிதை எழுதுவதில்லை. ஆனால் இப்போது வெளிவரும் ஒரு சில வார, மாதப் பத்திரிகைகளைப் பார்க்கும்போது மீண்டும் நான் கவிதை எழுதலாம் என்றே தோன்றுகிறது!" என்றாரே பார்க்கலாம். அரங்கமே சிரிப்பில் ஆழ்ந்தது.

— ஆர். மோகன்ராஜ், சேலம் — 16.

### இப்படித்தான் வாழ்த்த வேண்டும்!

நாங்கள் சென்றிருந்த திருமண வரவேற்பு விழா ஒன்றில் ஒருவர் மணமக்களை வாழ்த்திப் பேசியது:

"நானும் பல பெரியவர்கள், அறிஞர்கள், மணமக்களை வாழ்த்திப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அனேகமாக அனைவரும், 'தம்பதிகள் இருவரும் நகமும் சதையும் போல, தமிழும் இனிமையும் போல, பூவும் நாரும் போல, வெள்ளிக்கிழமையும் புளிக்குழம்பும் போல, ஞாயிற்றுக்கிழமையும் கறிக் குழம்பும் போல இருக்க வேண்டும்' என்று வாழ்த்தினார்களே தவிர, ஒருவராவது 'என்னையும் என் மனைவியையும் போல வாழ வேண்டும்' என்று வாழ்த்தியதேயில்லை. ஆனால் நான் வாழ்த்துகிறேன். மணமக்கள் இருவரும் என்னையும் என் மனைவியையும் போல மகிழ்ச்சியோடும் ஒற்றுமையோடும் வாழ வேண்டும்!"

— லில்லி தாமஸ், மதுரை — 2.

### தமிழின் பெருமை!

பி. சி. ஜியை எதிர்த்து ராஜாஜி அவர்கள் தீவிரமாகப் பேசி வந்த காலம். ரசிக ரஞ்சனி சபாவில் நடந்த பெரிய கூட்டத்தில் பேசி முடித்தபின் பி. சி. ஜியினால் விளையும் தீமைகளை விளக்கித் தாம் ஆங்கிலத்திலும், தமிழிலும் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளதைக்

# கூட்டத்தில் கேட்டது

குறிப்பிட்டார். ஆங்கிலப் பதிப்பின் விலை ஐம்பது காசாகவும், தமிழ்ப் பதிப்பின் விலை ஒரு ரூபாயாகவும் இருக்கவே ஒருவர், "ஏன் ஆங்கிலப் பிரசுரத்தின் விலையை விடத் தமிழ்ப் பிரசுரத்தின் விலை அதிகமாக வைத்துள்ளீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு ராஜாஜி அவர்கள், "**Tamil is a richer language!**" என்று பதிலளித்தபோது அரங்கத்தின் சிரிப்பலை அடங்க வெகு நேரமாயிற்று!

— சி. ஜெ. என். ராவ், சென்னை — 4.

## அங்கேயும் இப்படித்தான்!

குடும்பநலத் திட்ட விழா ஒன்றில் ஒருவர் பேசியது:

"எனது நண்பர் ஒருவர் குடும்ப நலத் திட்ட அதிகாரி. அவர் தமது மனைவியை முதல் பிரசவத்திற்காக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல விரும்பியபோது, 'சாதாரணமாகப் பெண்களின் முதல் பிரசவம் அவர்களுடைய பிறந்த வீட்டில்தானே நடப்பது வழக்கம். நீங்கள் மட்டும் ஏன் உங்கள் மனைவியை மாமியார் வீட்டுக்கு அனுப்பவில்லை?' என்று நான் கேட்டேன்.

அதற்கு அவர், 'அங்கேயும் இதே நிலைதான். என் மாமியார் அவருடைய தாயார் வீட்டுக்குக் குழந்தைப் பேறுக்காகச் சென்றிருக்கிறார்!' என்று சொன்னார். இப்படியிருந்தால்குடும்பநலத்திட்டம்எப்படிவெற்றிகரமாக அமையும்?" என்று பேச்சாளர் பேசியபோது அனைவரும் வயிறு வலிக்கச் சிரித்தனர்.

— ஏ. சிவசங்கர், வடுகன்பற்று.

## புத்திசாலி மருமகள்!

மாமியார் — மருமகள் சண்டையில், மருமகள் தன் கையிலிருந்த உலக்கையை வீச மாமியாரின் கழுத்தில் அடிபட்டுப் பேச முடியாமல் விழுந்து கிடந்தாள் மாமியார். அப்போது வந்த தனது மகனைப் பார்த்து ஜாடையில் உலக்கையையும், மருமகளையும், கழுத்தையும் மாறிமாறிக் காட்டினார் அந்த மாமியார். மகன் புரியாமல் விழிக்கவே அருகிலிருந்த மருமகள் சொன்னாளாம்: "என்ன இது கூடவா புரியலே? உலக்கை மாதிரி நீக்காமதன் கழுத்தில்இருக்கிறநகைகளை எடுத்து எனக்குப் போடச் சொல்லி ஜாடை செய்யறாங்க!" என்றாளாம்.

இது புலவர் கீரன் சொன்னது!

— எம். மலர்விழி, சென்னை — 38.

## தாபத்தின் அழைப்பு!

காஞ்சிபுரத்தில் நடந்த ஒரு விழாவில் கவிஞர் வைரமுத்து பேசும்போது, "நிலவு காயும் நேரம். நாட்டுப்புறத் தம்பதியரில் கணவன் ஏதோவொரு நினைவோடு வெளியில் படுத்துக் கொண்டிருக்கிறான். மனைவியோ குடிசைக்குள் படுத்துக் கொண்டிருக்கிறாள். தாபம் அவளைத் தகிக்க வைக்கிறது. இருந்தாலும் வெளியிலிருக்கும் கணவனை வெளிப்படையாக அழைக்க நாணம் வந்து தடுக்கிறது. அந்த நேரம் பார்த்துக் குழந்தை அழுகிறது. இதைப்பயன்படுத்தித்தனதுதாபத்தை ஒரு பாடலாகக் கணவனுக்கு வெளிப்படுத்துகிறாள் மனைவி.

'ஆரும் அடிக்கலையே
ஐவிரலும் தீண்டலையே
தானாக அழுவுறான் — ஒரு
தம்பி துணை வேண்டுமென்று!'

தன்னுடன் விளையாட ஒரு தம்பி வேண்டுமென்று குழந்தை அழுகிறான்; உடனடியாக வந்து குழந்தையைச் சமாதானப்படுத்துங்கள் என்று கணவனுக்கு மிகவும் நளினமாக அழைப்பு விடுக்கிறாள் மனைவி!" என்று குறிப்பிட்ட அந்த நாட்டுப்புறப் பாடலை என்னால் இன்னும் மறக்கவே முடியவில்லை.

— எஸ். பாலாஜி, செங்கல்பட்டு — 1.

## பூவா, தலையா?

கலைஞர் கருணாநிதியும், கவியரசர் கண்ணதாசனும் பங்கு பெற்ற ஒரு விழா. கலைஞருக்குப் பின் அமர்ந்திருந்த கவிஞர், கலைஞரின் பின் தலையிலுள்ள வட்ட வடிவ வழுக்கையைப் பார்த்துப் பேசும்போது அதைக் குறிப்பிட்டு, "அது பூவா, தலையா? எனத் தெரியவில்லை!" என்றார்.

பதிலடியில்வல்லவரான கலைஞர் உடனே, "பூவானாலும் சரி, தலையானாலும் சரி பறிக்காமலிருந்தால் சரி!" என்றார். இது காங்கிரஸ் சார்பு கவிஞருக்கும், கருணாநிதிக்கும் நடந்த ஒரு சுவையான மோதல்!

— டாக்டர் என். கோபாலகிருஷ்ணன்,
ஊட்டி — 1.

## இருக்க வேண்டிய இடத்தில்.....

இரண்டு நண்பர்கள் திருப்பதி செல்லத் திட்டமிட்டிருந்தனர். அதைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பிய ஒரு நண்பரின் மனைவி, மற்றொருவரிடம் "யாரெல்லாம் திருப்பதிக்குச் சென்று வரத் திட்டம் போட்டுள்ளீர்கள்?" என்று கேட்டாள்.

அதற்கு அந்த நண்பர், "நீங்கள் என் மனைவி, நான் உங்கள் கணவன்!" என்றார்.

இந்தப் பதிலைக் கேட்டதும் அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன சொன்னீர்கள்?" என்றாள் கோபத்தோடு.

கமாவைப் போட வேண்டிய இடத்தில் போடாமல்விட்டதால்ஏற்பட்ட தன் தவற்றை உணர்ந்து, கமாவைச் சரியாகப் போட்டு, "நீங்கள், என் மனைவி, நான், உங்கள் கண

வன்!'' என்று பதில் அளித்தார்.

—எஸ். பாலசுப்பிரமணி, அழிஞ்சிருப்பம்

## முதலில், இதைப் பாருய்யா!

சமீபத்தில் ஒரு கிராமத்தில் ஓர் அரசியல் கட்சியின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பேசிய பேச்சாளர்கள் அனைவரும், ''சீனாவைப் பார்! ரஷ்யாவைப் பார்! செக்கோஸ்லாவியாவைப் பார்! இந்தோனேஷியாவைப் பார்!'' என்று அடுக்கிக் கொண்டே சென்றார்கள்.

திடீரென்று கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து, ''மொதல்ல இதப் பாருய்யா!'' என்று வயிற்றைத் தட்டிக் காண்பிக்கவும் கூட்டமே சிரித்தது. அடுத்துப் பேசியவர்கள் 'அதைப்பார் இதைப்பார்!' என்று தவறிக் கூடப் பேசவேயில்லை.

எம். ரமேஷ்குமார், போடிநாயக்கனூர்.

## அம்மா திட்டப் போகிறாள்!

கிருபானந்த வாரியார் சுவாமிகளின் கதா காலட்சேபம். வரதட்சணையின் கொடுமைகளையும், அது எத்தனை பெரிய பாவம் என்பதையும் விளக்கிய வாரியார் சுவாமிகள் தமக்கே உரிய பாணியில் எதிரிலிருந்த சிறுவர்களை நோக்கி, ''வரதட்சணை வாங்க மாட்டேன் என்று சொல்பவர்கள் கையை உயர்த்துங்கள்!'' என்றார். பல சிறுவர்கள் கையை உயர்த்தினர். உடனே சுவாமிகள், ''சரி, சரி! சீக்கிரம் கையைக் கீழே போடுங்கள். உங்கள் அம்மா பார்த்தால் திட்டுவார்கள்!'' என்று ஒரு போடு போட்டாரே, பார்க்கலாம்!

—ஆர். கார்த்திகேயன், கரூர்—1.

## சக்தி பெரிதா? சிவம் பெரிதா?

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் அமர்ந்திருந்த இரண்டு பெரியவர்கள் காரசாரமாக விவாதித்துக் கொண்டனர்:

முதல் பெரியவர்: சக்திதான் பெரியது.

இரண்டாவது பெரியவர்: இல்லை இல்லை. சிவம்தான் பெரியது.

மு. பெ: சென்ற வாரம்தான் பார்த்தேன். சக்திதான் பெரியது.

இ. பெ: நேற்று முன்தினம்தான் பார்த்தேன். சிவம்தான் பெரியது.

மு. பெ: சக்தியில் ஐநூறு பேருக்கு மேல் அமரலாம்.

இ. பெ: சிவத்தில் இன்னும் அதிகம் பேர் அமரலாம்!

— இந்த விவாதம் மதுரையில் இருக்கும் சக்தி தியேட்டர் பெரியதா அல்லது சிவம் தியேட்டர் பெரியதா? என்பது பற்றி! இதை இளம்பிறை மணிமாறன் ஒரு சொற்பொழிவில் குறிப்பிட்டதை எப்போதும் மறக்க முடியாது.

—டி. ஜெ. ஜவஹர், கோவில்பட்டி.

## கண்ணகி செய்த தவறு!

சுகிசிவம் அவர்களின் இலக்கியச் சொற்பொழிவில் கேட்டது:

'கோவலன் என்பதைக் கேவலன் என்று பிழையாக ஏன் எழுதினாய்?' என்று ஆசிரியர் கேட்டதற்கு மாணவன், 'அவன் மாதவி வீட்டுக்குப் போய்ப் பொருளையெல்லாம் தொலைத்துவிட்டு வந்தபின் கண்ணகியே அவன் காலை வெட்டியிருக்க வேண்டும். அவள் செய்யாததால் நான் அதைச் செய்தேன்! கேவலமான காரியத்தைச் செய்தவன் என்ற காரணப் பெயராகவும்தான் அப்படி எழுதினேன்!' என்றானாம்.

—திருமதி ஜி. லலிதா, பொள்ளாச்சி—1.

## பெரியாரின் முயற்சி

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திருமணம்செய்துகொண்ட சமயம். மணியம்மையும் அவரும் ஒரு கூட்டத்தில் பேச வந்திருந்தார்கள். பெரியார் பேசிக் கொண்டிருக்கும் போது, ''ஐயா, தாங்களோ திராவிடத்தந்தை; மணியம்மையோ திராவிடத் தாய்! திராவிடக் குழந்தை எப்போது பிறக்கும்?'' என்று எழுதப்பட்ட சீட்டு மேடைக்கு வந்தது.

அதைப் படித்துப் பார்த்த பெரியார் அவர்கள் சிரித்துக் கொண்டே, ''அதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன!'' என்று பதிலளித்தார். கூட்டமே வாய்விட்டுச் சிரித்தது.

—வி. மணி, கூறைநாடு.

## இப்படியும் ஓர் எம். எல். ஏ.!

பாரதியாருக்கு நாடெங்கும் நூற்றாண்டு விழா நடந்து கொண்டிருந்த நேரம். எங்கள் ஊரில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ன பேசினார் தெரியுமா?


''இது போன்றதொரு நூற்றாண்டு விழாவைக் காமராஜர் காலத்தில் எடுத்தார்களா? அண்ணா காலத்தில் கொண்டாடினார்களா? இல்லை கலைஞர் ஆட்சியில்தான் விழா எடுத்தார்களா? இப்படிப்பட்டதொரு மாபெரும் விழா எங்கள் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தானே கொண்டாடப்படுகிறது!'' என்று.

—ஜி. தங்கம், நீலகிரி.

**புளோபிளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**ஏ. சிவசங்கர்,**
**வடுகன்பற்று,**
**அகஸ்தீசுவரம் (அஞ்சல்),**
**கன்னியாகுமரி மாவட்டம்.**





# ஒரு பட்டதாரியின் பதில்....

ஒரு குறிப்பு:

கதையின் தலைப்பில் காணப்படும் 'பட்டதாரி' என்னும் வார்த்தைக்கு முன்னால், 'வேலையற்ற' எனும் வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு கெஞ்சல்:

'த்தூ.....' இதே டைப்பில் எத்தனை கதைகளைத்தான் 'படிப்பது' என சலித்துக் கொள்ளாமல், அந்த வரிசையில் இதை கடைசிக் கதையாக எண்ணிப் படித்துவிடுங்களேன், ப்ளீஸ்.....

இனி கதை:

காலையிலேயே எழுந்து சூரியனை எழுப்பினேன்.

இருவரும் சேர்ந்தே சோம்பல் முறித்துக் கொண்டு கிளம்பினோம். அதற்கு இருக்கிறது வேலை, எனக்கு ஏது?

பின் எங்கே? இண்டர்வியூவுக்கா?

இல்லை. அதெல்லாம் போய் வந்தாகிவிட்டது. இப்போது லைப்ரரிக்கு.

வீட்டுத் திண்ணையில் வந்து நான் நிற்கும் போதெல்லாம் சொல்லிக்கொண்டது போல வந்து நிற்பாள் எதிர் வீட்டு மங்களா.

என்னைப் பார்ப்பாள்.

''காதல் பார்வையோ?'' (இது நீங்கள்).

அட, சும்மா என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதீர்கள்.

'எனக்கு நிறைய வீட்டு வேலைகள் இருக்கு.

இராஜா பாலச்சந்தர்

அதனாலேவீட்லேயே இருக்கேன். நீ எதுக்குடா வீட்லேயே இருக்கே?' என்றனைப்பாளைவை அந்த மங்களாவினுடையது.

அதை தாங்க மாட்டாமல்தான் வெளியே கிளம்பி விடுவேன்.

எங்கே போக முடியும்?

என்னை மாதிரி பையன்களுக்கெல்லாம் தான் சோமு டீ கடை வைத்திருக்கிறான். ஆனால், அட்லீஸ்ட் ஐம்பது பைசாவாவது இல்லாமல் அங்கே அனுமதி கிடையாதே!

ஒரே போக்கிடம் லைப்ரரிதான். போகிறேன்.

காலை வேளையில் ரோடு பிஸியாக இருக்கிறது.

'டீக்'காக ட்ரஸ் பண்ணிக்கொண்டு, தோளில் மாட்டிய டம்பப் பை மார்பில் இடிக்க, நிறைய இளம் பெண்கள் என்னைக் கடந்தார்கள் — என்னைப் பார்த்துக் கொண்டே.

''காதல் பார்வையோ?'' (மறுபடியும் நீங்கள்)

நீங்க ஒண்ணு. மனுஷனுக்கு இருக்கிற வேதனை போதாதுன்னு...

என் மூஞ்சியையும், கையில் படிந்து போய் இருக்கும் பரிதாபத்தையும் பார்த்தால் காதலா வரும்? 'ஐயோ பாவம்'தான் வரும்.

எனக்குத் தெரியாமல், ஆனால் அவர்களுக்கெல்லாம் தெரியும்படியாக, 'அவன் வேலையற்றவன்' என்று என் நெற்றியில் ஏதாகிலும் மாய எழுத்துக்கள் இருக்கிறதா என எனக்குள் ஒரு சந்தேகம்.

தினமும் பார்த்துப் புரிந்து கொண்டால் என் சம்பந்தப்பட்ட தெருக்களைக் குத்தகை எடுத்திருக்கும் பிச்சைக்காரர்களுக்கும் நான் ஒரு 'ஐயோ பாவம்'.

என்றைக்காவது எனக்கு அவர்கள் காசு போட்டுவிடுவார்களோ என்ற பயத்தோடு தான் அவர்களைக் கடக்க வேண்டிய கால கட்டம் எனக்கு.

பாளையங்கோட்டையில் உள்ள சில புத்தகக் கடைகளில் பள்ளி மாணவ மாணவியர் புத்தகங்களை 'பைண்டிங்' செய்தே விற்பனை செய்கிறார்கள். இப்படி பைண்டிங் செய்த புத்தகங்கள் ஒவ்வொன்றுக்கும் அதிகப்படியாக இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டும். இதனால் பைண்டிங் செய்ய விரும்பும் மாணவர்கள் பைண்டிங்கிற்காக நேரத்தை செலவு செய்ய வேண்டிய தில்லை. இதை மற்ற ஊர்களிலும் கடைப் பிடித்தால் என்ன?

—எஸ். முகம்மது யூசுப்.




லைப்ரரியில் நான் படிக்கவென்று நிறைய புத்தகங்கள் வைத்திருக்கிறார்கள்.

அங்குள்ள லைப்ரரியன் டீ மற்றும் பீடிக்காக அடிக்கடி வெளியே போய் வருவார். அதுகூட எனக்கு முடிவதில்லை.

நான் அங்கு படிக்க வருபவனா அல்லது அங்கேயே வேலை செய்பவனா என்பதே பலருக்குச் சந்தேகம்தான். குறிப்பாக அவளுக்கு.

அடிக்கடி புஸ்தகம் எடுத்துப் போக வருவாள்.

பெயர் சுதா எனக் கேட்காமலே தெரிந்து கொண்டேன். சுதா என் மீது பார்வை வீசுவாள்.

''காதல் பார்வையோ?'' (மீண்டும் நீங்கள்!)

அட, பேசாமல் இருக்கமாட்டீர்களா, நீங்கள்.

ஐயப் பார்வை. முதலில் சொன்னேனே அந்த ஐயம்.

''ஐ ம் அன் அன்எம்ப்ளாய்ட்'' என கூறி விடலாமா என நினைப்பேன். சுய கௌரவம் இடம் தரவில்லை.

ஒருநாள் அவள் வரும்போது 'வேலையற்ற பட்டதாரிகளும் வேலை வாய்ப்புகளும்' என்ற புஸ்தகத்தில் மூழ்கியிருந்துவிட்டேன்.

பார்த்துவிட்டாள்.

அதன் பிறகு அவளின் அந்த ஐயப்பார்வை 'ஐயோ பார்வை'யாகிவிட்டது.

இனிமேல் இந்த சுதா இந்தக் கதையில் வரமாட்டாள். எனவே, அவளோடு கூடிய என் காதல் காட்சிகளை எதிர்பார்க்க வேண்டாம்.

காதல் புரியும் (புரியப்படும்) தகுதியில் நான் இல்லை.

பத்திரிகைகளில் வரும் கதைகளைப் படிக்கும்போது எனக்குள் ஒரு சந்தேகம் வருகிறது.

எல்லா எழுத்தாளர்களும் ரகசியமாக என்னைக் கண்காணித்துவிட்டுப் போய் கதை எழுதிப் (புகழ் பெற்று) விடுகிறார்களோ?

என் கதையை மற்றவர்கள் திருட்டுத் தனமாக எழுதும்போது நானே ஏன் என்னைப் பற்றி எழுதக் கூடாது என நினைப்பேன்.

பாழாய்ப் போன லைப்ரரி பன்னிரண்டு மணிக்கு மூடிக் கொள்ளும்.

பழையபடி வீடு.

உள்ளே நுழையும் முன் ஒரு முறை மங்களாவை (எதிர் வீடு) தரிசிக்க வேண்டும் என்பது கடமை (அ) நியதி.

அம்மாவின் புலம்பல் பொரியலுடன் மதிய உணவு.

''ஏண்டா, ஊர்ல ஒலகத்தல உன்ன மாதிரி பசங்க வேல செய்யல? அந்த சோலங்கிய பார்டா....''

எனக்கு கோபமெல்லாம் பக்கத்து வீட்டு பையன் சோலங்கி மீது திரும்பியது.

பேரைப் பார், சோலங்கி. 'ல'வுக்கு பதில் 'ண' போட்டால் பொருத்தமான பெயராக இருக்கும்.

அவனுக்கு இங்கிலீஷ் வராது, பாடத் தெரியாது, வயலின் வாசிக்கத் தெரியாது.

# உலகிற்குக் காட்டுங்கள், உண்மையான வெண்மை என்ன என்பதை







## உன்னதம்...உன்னதம்...
## வெண்மையிலே
## அனைத்திலும் உன்னதம்!

உங்களுக்கு காட்டவும் டெட்டில் உண்டு ஏராளம். இதன் புதிய உறை—கண்ணைக் கவரும். திறந்து பாருங்கள் ஆச்சரிய மளிக்கும் இதன் புத்தம்புது மணம். இக்கட்டியில் அடங்கி யுள்ளது அதிக வெண்மைக்கான சக்தி.

நீங்கள் பாருங்கள்... காட்டுங்கள் உலகிற்கு
டெட் தரும் வெண்மையை... உண்மையான வெண்மையை.

Shilpi DM 9A/84 Tam.



# அருள்வாக்கு

ஜலத்துக்கு நிறைவு சமுத்திரம். டம்ளரில், செம்பில், குடத்தில், அண்டாவில், கிணற்றில், குளத்தில், நதியில் என்று ஒன்றைவிட ஒன்று ஜாஸ்தியாக இருக்கிற ஜலம் கடைசியில் சமுத்திரம் என்று முடிகிறது. இப்படியே ஞானத்துக்கும், கிருபைக்கும் நிறைவான சமுத்திரம் பராசக்தி. நமக்குக் கொஞ்சம் அறிவு, கொஞ்சம் அன்பு இருக்கிறது. பிராணிகளுக்கு நம்மைவிடக் குறைவு. நம்மைவிட ஜாஸ்தி அறிவுள்ள, ஜாஸ்தி கிருபாசக்தியுள்ள தேவஜாதிகள் இருக்கின்றன. நம்மிலேயே மஹான்களானவர்கள் மகாஞானிகளாக பரமகாருண்யத்தோடு இருக்கிறார்கள். இந்த ஞானம், கிருபை பூரணமாக நிறைந்த இடத்தைத்தான் ஸ்வாமி, பரமாத்மா, பராசக்தி என்று சொல்வது.

எல்லாவற்றையும் அறிகிற ஞானம் அது: அறிகிறது மட்டுமில்லை, அறியப்படுகிற எல்லாமுமே அதுதான். அதற்கு வேறாக இன்னொன்று இருந்து, அதை இது அறிகிறது என்றில்லை. அப்படி இன்னொன்று இருப்பதற்கு இடம் இருந்துவிட்டால், இது எங்கும் நிறைந்த பூரணம் ஆகாது. இன்னொன்று துளித்துளி இருந்து விட்டால் கூடச் சரி, இதற்குக் குறைதான் – இது அந்தத் துளியில் இல்லாததால் இது பூரணமில்லை, நிறைந்த ஒரே நிறைவில்லை என்றுதானே அர்த்தம்? இதனால் என்ன முடிவாகிறது என்றால், பரமாத்மாவைத் தவிர அறியப்படுகிற வஸ்து என்று இரண்டாவது பதார்த்தமே கிடையாது என்பதுதான்.

அப்படியானால் இத்தனை ஜீவாத்மாக்கள் வேறுவேறாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோமே, இது என்ன? இது ஒரு பெரிய வேஷம்தான், மாயா நாடகம்தான். வேஷம் கலைந்துவிட்டால் நிறைந்த நிறைவான ஒன்றே ஒன்றுதான். அதுவே அறிவாக நிற்கும். "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்று தாயுமான ஸ்வாமிகள் சொல்கிற அறிவு! அது பூரணமானதால் அதனால் அறியப்பட வேண்டிய வஸ்து என்று வேறு எதுவுமே இல்லை. தன்னையே அறிந்துகொண்டிருக்கிற அறிவு அது.

இப்படி இரண்டாவதாக வேறே இல்லாமல் ஜீவாத்மாவை அந்தப் பரமார்த்த சமுத்திரத்தில் கொண்டு போய்க் கரைப்பதுதான் வாஸ்தவமான நிறைவு.

**—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.**

---

கதை, கவிதை எழுதத் தெரியாது, படிப்பு கூட சரியாக வராது.....(எனவே இதெல்லாம் எனக்குத் தெரியும், வரும் என்று அர்த்தம்).

அவனுக்குப் போய் வேலை.

அநியாயம்!

ஆனால், எனக்கு 'பெரிய இடத்தில்' ஆள் கிடையாதே... இதை நினைத்தால் அவனுக்கு வேலை கிடைத்ததில் உள்ள நியாயம் புரிகிறது.

பிற்காலத்தில் நான் பெரிய எழுத்தாளனாக வந்து, வெளி நாட்டுக்குப் போனால், 'நான் இந்தியாவில் பிறந்ததைப் பெருமையாகக் கருதுகிறேன்' என்று பேட்டி கொடுப்பேன்; கொடுக்க வேண்டும்!

என்னைத் திட்டுவதற்கென்றே எனக்கு முன்னால் பிறந்து சிவப்பாகப் பயிற்சி எடுத்துக் கொண்ட என் அப்பாவைத் தினமும் சில நிமிடங்கள் சந்திக்க வேண்டியதும் தவிர்க்க முடியாதது.

போஸ்ட் செய்யக் காக வேண்டுமே....

தினமும் என்னால் இரண்டு போஸ்ட் கவர்கள் போஸ்டல் டிபார்ட்மெண்ட்டுக்கு லாபம்.

வேலை நிச்சயமாகக் கிடைக்காது எனும், திட நம்பிக்கையுடன் அனுப்பப்படும் வேலைக்கான விண்ணப்பம்.

'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்' முடன் திரும்பி வரும் என்ற நிச்சயத்தோடு பத்திரிகைக்கு அனுப்பப்படும் சிறுகதை.

'இந்தியாவில் முன்னுக்கு வர நிறைய வாய்ப்புகள் உள்ளன' — இதையும்கூட வெளிநாட்டுப் பேட்டியின்போது கூற வேண்டும்.

மத்தியானம் முதல் மாலை வரை அப்ளிகேஷன் மற்றும் கதை எழுதிவிட்டு, சாயங்காலமாக மாலைத் தினசரிகளின் பெரிய எழுத்து விளம்பரத் தொங்கலைப் பார்க்கப் போய்,

இரவில் வீட்டில் எல்லோரும் தூங்கிய பின் சத்தம் போடாமல் போய்ப் படுத்துக் கொண்டேன்.

'அம்மாடி, இன்றைய பகல் ஒருவழியாக போனது. நாளைக்கு......?'

# மோகினி திருக்கோலம்

## 40

### மராட்டியரிடம் சிக்கிய வர்மன்

திருமாமங்கை கோவில் திமுதிமு என்று தெரிந்து கொண்டிருந்தது. உள்ளே பக்த ஜனங்கள் வழிந்தார்கள். பிராகாரங்கள் முழுதும் தலைகளாகத் தெரிந்தன.

இதில் மோகினி நோன்பு எடுத்தவர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். பெண் நோன்புக்காரிகள் நீலத்தில் உடை தரித்து, நெற்றியில் மஞ்சளும் குங்குமமும் இட்டிருந்தார்கள். கையில் வெள்ளிச் செம்பில் பால் வைத்திருந்தார்கள்.

ஆண் நோன்புக்காரர்கள் நிறைய பேர் மோகினித் திருக்கோலம் பூண்டிருந்தார்கள். பலருக்கு அது தத்ரூபமாக இருந்தது. அருகில் போய்ப் பார்த்தால்தான ஆண் என்று புலனாயிற்று.

வர்மன் செஞ்சுகாவைத் தேடி விட்டான்.

தூப்ளே மதாமின் ஆட்கள் எங்கு தங்கியிருக்கிறார்களெனத் தெரியவில்லை. மதாமின் இந்த நடவடிக்கையில் தூப்ளே பங்கு பெற்றிருக்கிறாரா, தெரியவில்லை.

கணவனுக்குத் தெரியாமல் மனைவி நிறைய விவகாரங்களில் ஈடுபட்டிருந்தாள். வியாபார அக்கறையும் உண்டு. ஏராளமாகச் சொத்தும் சேர்த்து விட்டாள் என்று கேள்வி.

ஊரைச் சுற்றி உள்ள தோப்பு வட்டாரங்களில் தேடிவிட்டுக் கோவிலுக்கு வந்தான் வர்மன்.

எங்கும் பெண்ணும், பெண் வாடையும நிரம்பியிருந்தன.

படிக்கட்டுகள் ஏறியவுடன் அது ஒரு மாயையான உணர்ச்சி என்று சொல்ல வேண்டும். எங்கு பார்த்தாலும் செஞ்சுகாவாகத் தோன்றினள்.

நெருக்கி அடித்து உள்ளே போகச் சாம்பிராணி, ஊதுபத்தி, பூ, சந்தனம், புனுகு, அத்தர் மணங்கள் காம்ப நெடியாக வந்தன. மூக்கில் ஒரு சுவர்க்க லோகம் ஏறிற்று.

கூட்டத்தை நெம்பிக் கொண்டு உள்ளே போக ஆரம்பித்தான். 'நாராயணா, நாராயணா' என்ற ஒலங்கள் மெய்சிலிர்ப்பாக எழுந்தன. காற்றில் பக்தி துடித்தது.

உள்ளே போகப் போக ஒரு தெய்வீகம் போர்வையாக அவன் மீது படிந்தது.

மணி மாமண்டபத்தை அடைந்தபோது முற்றிலும் அவன் மாறியிருந்தான்..

வேறு உலகத்திற்கு வந்திருப்பதாகத் தோன்றியது! போரும், பூசலும், ராஜரீகமும் இல்லாத புது உலகம். இதுதானே இயல்பான உலகம்! அவனுக்குச் சொந்தமான உலகம். இந்த உலகத்தில் சௌகரியமாக வாழத்தானே, அந்த மற்ற உலகில் சேவகம் செய்ய வேண்டி வந்தது.

மேடை வரை போனன்.

தோழிக் கின்னை வாகனத்தில் மங்கை மார்பன் பெருமானை அசல் மோகினியாக வேஷம் இட்டிருந்தார்கள்.

பட்டுத் துகிலும், தலை டோபாவும் வளையும் தண்டையும், நெற்றிக் குங்குமமும் அணிவித்துத் தத்ரூபப் பெண்ணாக்கி இருந்தார்கள்.

மூக்கில் ஒரு தளுக்கு 'டால்' அடித்தது. விக்கிரகத்தின் உதட்டில் வசீகரப் புன்னகை நிரந்தரமாக உட்கார்ந்திருந்தது.

உடல் முழுதும் நவரத்ன அங்கியும் அணிகளும் தகதக என்று தீப்பிழம்புகள் போல் மின்னி, திருமாலின் அந்த மோகினி அவதாரம் மனோரம்யமாக இருந்தது.

மோகினியின் கையில் ஒரு தங்கக் குடம் புது மெருகில் மினுக்கியது.

வர்மன் போன நாழிகைக்குக் கற்பூர ஆரத்தி எடுக்க,

ஆகாய நட்சத்திரங்கள் அனைத்தும் ஓர் இடத்தில் குவிந்தாற்போல,

அத்தனை லட்ச தீபங்கள் சுடர்களாகத் தெரித்தன.

கூட்டம் அசையும் அலை இயக்கத்தில் வர்மன் பக்கத்திலிருந்த பெண்ணின் காலை மிதித்து விட அந்தப் பெண் உடனே முகம் சுளித்து 'தல்லு நீ' என்று சொல்ல, அந்தத் தமிழின் ஒலியும், விநோதமும் வர்மன் கவனத்தை இழுத்தன.

'இவள் மராட்டியளா!' என்று நினைத்தான். நினைக்கும்போதே அடுத்த எண்ணம் தொடர்பாக வந்தது. ஓ! மராட்டியனோ?

திடுக்கிட்டுப் பெண்கள் இருந்த திசையெல்லாம் பார்க்க, ஆங்காங்கே மராட்டியப் பெண் வேடதாரிகள் நிறைய இருந்தார்கள்.

அவன் தலையில் விச் என்று ஒரு மின்னல் ஓடியது.

ஓஹோ, திருவண்ணாமலை, திருவேந்திபுரங்களில் நடந்தது இங்கும் நடக்கப்போகிறதோ என்று நினைத்தான்.

பரபரத்துக் கண்களைச் சுழல விட்டான். தர்மகர்த்தா அவன் கண்களில் விழுந்தார். ஒவ்வொருத்தரிடமும் ஒவ்வொரு கட்டளை அவர் வழங்கிக் கொண்டிருந்தார். வர்மன்

ஸ்ரீவேணுகோபாலன்

நெருக்கி அடித்து அவரை நெருங்கினான். "சுவாமீ! சுவாமீ!" என்று அவரை அழைத்தான். அவர் திரும்பியதும் அருகில் போய் விஷயத்தைக் கசமுசத்தான்.

தர்மகர்த்தாவுக்கு அறுபது வயது இருக்கும். உடம்பு தூலமாக இருந்தாலும், வஜ்ஜிரமாக இருந்தது. எதேச்சையாகப் பார்ப்பவர் போல் சுற்றி வரக் கண்ணோட்டம் இட்டார் நிலைமை புரிந்துவிட்டது.

மோகினிப் பெருமாளைப் பார்த்தார். பெருமாள் மேனியில் ஏராளமான நகை! அத்தனை அணிகளும் மோகினித் திருக்கோலம் அன்றைக்குப் பெருமாள் மீது அணிவிக்கப்படும். அவைகளின் 'மதிப்பு எக்கச்சக்கமானது. அத்தனையும் இந்த மராட்டியக் கும்பலுக்கு இழப்பதா! 'பெருமாளே வழிகாட்டும்' என்று மானசீகமாகப் பிரார்த்தித்தார்.

பிறகு அவசரமாக அவர் தம் சகாப் பெரியவர்களிடம் தனித்தனியாகக் கூறினார்.

சிறிது நேரத்தில் ஒரு தண்டோராக்காரர் மணி மண்டபத்துள் நுழைந்தார். டம டம டம என்று டமாரத்தை ஓங்கி அடிக்க எங்கும் நிசப்தம் எழுந்தது

"ஐயாமார்களே, அம்மாமார்களே! கூட்டம் ஏராளமாக இருக்கையாலே, நோன்பு வைபவம் பிராகாரத்திலே வச்சிக்கறோம். நோன்புத் தாய்மாருங்க எல்லாரும் இப்பவே பிராகாரத்திலே போய் இடம் பிடிச்சுக்கிடலாம்" என்று ஒரு உச்சத் தொண்டையில் கூவினார்.

அதைத் தொடர்ந்து தண்டோரா டமடமத்தது.

இரண்டு முறை இதேபோலக் கூவியதும் தான், பெண் கூட்டம் சிறிது அடங்கியது.

ஒவ்வொருவராக வெளியே போக ஆரம்பித்தார்கள். கோவில்சிப்பந்திகள் ஒவ்வொரு மூலையிலும் நின்று, 'போங்கள், போங்கள்' என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசிப் பெண் போவதற்குள் நேரம் இழுத்து விட்டது.

உடனே மண்டபத்தின் பிரம்மாண்டக் கதவுகள் படீரென்று சாத்தப்பட்டுத் தாழிடப்பட்டன.

வாத்தியக்காரர்களையும் டமாரக்காரர்களையும் தர்மகர்த்தா ஜாடை காட்ட, பெரும் ஓசை ஒன்று பிலுபிலுத்து எழுந்தது.

உள்ளே அவசர ஆலோசனை நடந்தது. வர்மன் அதில் நாயகமாக விளங்கினான். பரபர என்று எல்லோரும் இயங்கினார்கள். அர்ச்சகர்கள் அந்த மோகினிப் பெருமாளின் சாத்துப் பொடியைக் கலைக்க ஆரம்பித்தார்கள்.

அங்கிருந்த முக்கிய பெரியவர்கள் ஒவ்வொருவரிடமும் நகைகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. சங்கிலிகளும், தாழ்வடங்களும் கிடைத்தவர்கள் அவற்றைத் தம் கழுத்தில் மாட்டிக் கொண்டு உத்தரீயத்தால் உடலைப் போர்த்திக் கொண்டார்கள்.

இதர அணிகள் கிடைத்தவர்கள் அவற்றைத் தமது இடுப்பு உத்தரீயத்தில் வைத்துச் சுற்றிக் கொண்டார்கள்.

வெகு சீக்கிரத்தில் இந்த வேலை அனைத்தும் நடந்து விட்டது.

பெருமாள் தனது ஆபரணாதிகள் இழந்து, சுயமான திருமேனியில் ஒற்றைப் பரிவட்டம் மட்டும் சாத்தியிருந்தார். அவரையும் நாச்சியாரையும் சுற்றி ஒரு பெரும் திரை மூடப்பட்டது.

'எச்சரிக்கை' என்று ஏகமாகப் பலர் குரல் எழுப்ப, பெருமாளின் வாகனம் மெள்ள எழுந்தது.

வாயிற்கதவு திறந்தது. நாயனங்களும், தாரை தப்பட்டிகளும் முழங்க வாகனம் மெதுவாக வெளி வந்தது.

அதை வியாஜமாக வைத்துக் கொண்டு வெளியில் வந்த பெரியவர்கள் கூட்டத்தில் கரைந்து மறைந்து போனார்கள்.

பிராகாரத்தில் கூடியிருந்தோர் தீவர்த்தி ஒளியில் பெருமாள் திரை போட்டு வருவதைப் பார்த்தார்கள்.

அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பிராகாரத்தில் சிறிது தூரம் வந்தும், "திரையை எடுங்கள், திரையை எடுங்கள்" என்று கூச்சல்கள் ஒலித்தன.

வாகனம்தாங்கியவர்கள் திடீரென்று வாகனத்தைக் கீழே வைத்துவிட்டு ஓடலானார்கள்.

வர்மன் இதற்குள் கூட்டத்தில் புகுந்து, "ஓடுங்கள்! ஓடுங்கள்!" என்று குரல் கொடுக்க, சீக்கிரம் அந்தப் பெரும் கூட்டத்தில் அமளிதுமளி ஏற்பட்டது. ஓலங்களும்,



ஆரவாரமும் எங்கும் எழுந்தன. ஜனங்கள் சின்னாபின்னமாக ஓட ஆரம்பித்தார்கள்.

கண்ணைத் திறப்பதற்குள் அது நடந்து விட்டது. வர்மனை நாலு பேர் ஒரு கட்டாகக் கட்டி அலாக்காகத் தூக்கி விட்டார்கள்.

மராட்டியரைத் தவிர வேறு யாரால் அப்படிச் செய்ய முடியும்?

எல்லையில் இருந்த அந்தச் சத்திரத்தில் கொணர்ந்து பளீரெனக் கூடத்தில் தள்ளினார்கள்.

வர்மன் விழித்துப் பார்த்த போது அங்கே பெரிய சபையே கூடியிருப்பது தெரிந்தது.

மராட்டியரின் ஒரு கோஷ்டித் தலைமை அங்கே கொலு வீற்றிருந்தது.

"யார் நீ?" என்றார் தலைவர் மிடுக்காக.

வர்மன் அவரை அலட்சியமாகப் பார்த்தான். ஒரு எக்காள மூச்சுடன், "நான் சொல்வதற்கு இல்லை" என்றான்.

"சொல்கிறாயா, மாட்டாயா?"

"மாட்டேன்."

தலைவர் கண்ணை அசைக்க, இரு திடசாலிகள் வந்தார்கள். முதலில் வர்மனின் மீதுள்ள கயிறுகளை எல்லாம் எடுத்து அவன் மேனியை விடுதலை ஆக்கினார்கள். அவர்களது சாட்டைகள் அவனது சருமத்தில் நேராகப் பட வேண்டும் என்பதற்கே அதைச் செய்தார்கள்.

இருவரும் விலக பளீர் என்று ஒரு சத்தம்.

ஒரு சாட்டையின் உக்கிர அடி அவன் முதுகில் தீயாக விழுந்தது. ஒரே ஒரு கணம் தடுமாற, "ஐயோ, வேண்டாம், வேண்டாம்" என்று பெண் குரல் எழுந்தது.

குரல் வந்த பக்கம் வர்மன் மெள்ளத் திரும்பினான்.

"செஞ்சுகா!" அவன் வாயை மீறிக் குரல் வந்தது.






செஞ்சுகா, அங்கே ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். அவள் முகம் சோர்வை இழந்திருந்தது. கண்களில் நீர் தங்கியிருந்தது. அவள் நெஞ்சு படபடப்பதும், ஆசனத்தில் நிலைகொள்ளாமல் அவள் தடுமாறுவதும் தெரிந்தது.

இவள் எப்படி இங்கே வந்தாள்?

வர்மன் சிறிது யோசித்தான்.

நிச்சயம் செஞ்சுகா பிரெஞ்சு கோஷ்டியுடன் தான் வந்திருக்க வேண்டும். ஆனால் மராத்தியக் கோஷ்டி அவர்களைத் துரத்தி அடித்துச் செஞ்சுகாவை அபகரித்திருக்கும். அதன் காரணம் மராத்தியருக்கு இந்தப் பணய விவகாரம் முழுதும் தெரிந்திருக்க வேண்டும். பணயப் பணம் வருகிறது என்பதும் தெரிந்து அந்தப் பணத்தை அபகரிப்பதற்காகச் செஞ்சுகாவைக் கைப்பற்றியிருப்பார்கள். பிரெஞ்சு கோஷ்டியை விரட்டியிருப்பார்கள்.

வர்மனின் இந்த ஊகம் சரிதான் என்பது பின்னர்தான் அவனுக்குத் தெரியப் போகிறது.

''இந்தா, சொல் நீ யார்?'' என்று தலைவர் மீண்டும் அதட்டினார்.

வர்மன் பதில் சொல்லவில்லை! மாட்டேன் என்பதற்கு இசையத் தலை ஆட்டினான்.

சாட்டை ஓங்கியது.

''ஐயா! அடிக்காதீர்கள், அடிக்காதீர்கள்'' என்று பதறிக் கொண்டு இரைந்தாள் செஞ்சுகா.

பிறகு அவனை நோக்கி, ''வீரரே!'' என்றாள். வர்மன் திரும்பிப் பார்த்தான். ''தயவு செய்து எனக்காக நீங்கள் யார் என்று சொல்லுங்கள்'' என்றாள்.

வர்மனுக்குச் சோகமான புன்னகை வந்தது. பதில் சொல்லவில்லை.

''சொல்லு'' மராட்டியக் குரல் ஓங்கி எழுந்தது. சாட்டை ஓங்கியது. ''நிறுத்துங்கள்'' என்று செஞ்சுகா கூறுமுன் வர்மன் மீது விழுந்தது.

''ஆ!'' என்று வீறிட்டுச் செஞ்சுகா எழுந்தாள். அவள் பக்கத்தில் பெண் வேடம் பூண்டிருந்த மராட்டிய வீரன் அவளை இழுத்து உட்கார்த்தினான். பெண் வேடத்திலிருந்த மராட்டியன், செஞ்சுகா, வர்மன் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சொல்லு!''

''மாட்டேன்.''

திரும்பிச் சாட்டை ஓங்க,

''ஐயா! நிறுத்துங்கள்! அவர் சொல்லாவிட்டால் நானே சொல்கிறேன். அவர் பொம்மராஜு பாளையத்து வீரர். பணயப் பணத்தை அவர்தான் கொண்டு வந்திருக்கிறார்'' என்று படபடவென்று மொழிந்தாள் செஞ்சுகா.

வர்மன் திடுக்கிட்டான்.

ஐயோ! உண்மையைச் சொல்லிவிட்டாளே. திருப்பதிப் பணம் இந்த மராட்டியர் கையில் போவதா?

(தொடரும்)

# வானதி வழங்கும் சரித்திர சமூக நாவல்கள்

## சாண்டில்யன்

| | விலை ரூ. பை. |
|---|---|
| ராஜ்யஸ்ரீ | 22.00 |
| நாகதேவி | 18.50 |
| மலைவாசல் | 30.00 |
| பாண்டியன் பவனி | 12.00 |
| பல்லவ திலகம் | 20.00 |
| ஜலமோகினி | 21.00 |
| மோகனச் சிலை | 30.00 |
| நாகதீபம் | 16.50 |
| இந்திரகுமாரி | (அச்சில்) |

## சிவசங்கரி

| | |
|---|---|
| பாலங்கள் (கோவை கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளை ரூ 10000/– பரிசு பெற்ற நாவல்) | 19.00 |
| மாலையில் பூக்கும் மலர்கள் | 14.00 |
| நண்டு | 18.00 |
| கப்பல் பறவை | 12.00 |
| 47 நாட்கள் | 14.00 |
| புல்தடுக்கி பயில்வான்கள் | 10.00 |
| திரிசங்கு சொர்க்கம் | 12.00 |
| வெட்கம் கெட்டவர்கள் | 6.50 |
| தான் தன் சுகம் | 5.00 |
| தகப்பன் சாமி | 10.00 |
| அணில்கள் | 6.00 |

## பாலகுமாரன்

| | |
|---|---|
| இரும்பு குதிரைகள் | 22.00 |
| மெர்க்குரிப் பூக்கள் | 23.00 |
| என்றென்றும் அன்புடன் | 14.00 |
| கரையோர முதலைகள் | (அச்சில்) |

## வாஸந்தி

| | |
|---|---|
| மயக்கங்களும் சிலந்திக் கூடுகளும் | 7.50 |
| நழுவும் நேரங்கள் | 14.00 |
| தூரத்தும் நினைவுகள் அழைக்கும் கனவுகள் | 17.00 |
| மனிதர்கள் பாதிநேரம் தூங்குகிறார்கள் | 14.00 |
| மௌனத்தின் குரல் | 12.00 |
| யுகங்கள் மாறும்போது | 6.00 |
| பறவைகள் பறக்கின்றன | 10.00 |

## ர. சு. நல்லபெருமாள்

| | |
|---|---|
| தூங்கும் எரிமலைகள் | 22.00 |

## சுசீலா கனகதுர்கா (தமிழில்)

| | |
|---|---|
| துளசிதளம் (எண்டமூரி வீரேந்திரநாத்) (சாவியில் தொடர்கதையாக வந்து லட்சக்கணக்கானவர்களைக் கவர்ந்த நாவல்) | 20.00 |
| மீண்டும் துளசி | 27.00 |

## வித்வான் வே. லட்சுமணன்

| | |
|---|---|
| நீலவேணி பாகம் I சரித்திர நவீனம்) | 25.00 |
| நீலவேணி பாகம் II ( ,, ) | 30.00 |
| பாவை மன்றம் (சரித்திர நவீனம்) | 17.50 |

## வாசவன்

| | |
|---|---|
| இன்னும் ஒரு பெண் (சிறுகதைகள்) | 20.00 |

## அனுராதா ரமணன்

| | |
|---|---|
| மிதிலை நகரத்து சீதைகள் | 15.00 |
| ஒரு கோடி இன்பங்கள் | 16.00 |
| ஹேமா உனக்காக | 16.00 |
| தேவதைகள் தூங்குவதில்லை | 16.00 |
| கூட்டுப் புழுக்கள் | 18.00 |
| வாயுள்ள ஊமைகள் | (அச்சில்) |

## கோவி. மணிசேகரன்

| | |
|---|---|
| காஞ்சிக் கதிரவன் | 20.00 |
| கங்கை நாச்சியார் | 14.00 |

## கௌசிகன்

| | |
|---|---|
| ஜுலேகா (முதல் பாகம்) (தினமணிக் கதிரில் தொடராக வெளி வந்தது. லட்சக்கணக்கான வாசகர்களைக் கவர்ந்த நாவல்) | 24.00 |
| ஜுலேகா (இரண்டாம் பாகம்) | (அச்சில்) |
| அமுதி (சிறுகதைகள்) | 16.00 |

## தென்னரசு

| | |
|---|---|
| தில்லைநகரம் (சரித்திர நாடகம்) | 10.00 |

* தேவையான புத்தகங்களை V. P. P. யில் பெற கடிதம் எழுதுங்கள். V. P. P. தபால் செலவு தனி.
* நூல் நிலையங்கள் — லெண்டிங் லைப்ரரி — புத்தக வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு — எழுதுக.
* வானதியின் 1985 ஆண்டு இலவச விலைப் பட்டியலுக்கு இன்றே எழுதுங்கள்.

விவரங்களுக்கு

# வானதி பதிப்பகம்

No. 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-600017.

Phone: 442810


இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை:
ஸியோ A/C
12.15, 3.15, 6.30, & 9.45
ஈகா A/C
பிரபாத்
தினசரி 3 காட்சிகள்
சந்திரன் A/C
பகல் காட்சி
மற்றும் தமிழகமெங்கும்
K.R.G பிலிம் சர்க்யூட்
உன்னைத் தேடி வருவேன்
A
ஸ்ரீதர்
K.R.கங்காதரன்
இளையராஜா
P.பாஸ்கர் ராவ் • K.R.ராமலிங்கம் • A.ராமசாமி • ரவி
CROWN






• பாதிப்படைந்து வெந்து போன மக்களுடைய பக்கம்.

# "சோளிங்கரில் போலீஸாரின் அட்டகாசம்!"

—நமது நிருபரின் நேரடி ரிப்போர்ட்

கடந்த மாதம் பதினேழாந்தேதி; மாலை ஏழு மணி இருக்கும். அரக்கோணத்தின் அருகிலிருக்கும் கூடலூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த முனிரத்னம் — சம்பூர்ணம் தம்பதிகள், வட ஆற்காட்டிலுள்ள சோளிங்கருக்குச் சென்று டாக்டர் திருநாவுக்கரசை சந்தித்து விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். மனைவி சம்பூர்ணம் முன்னால் போக, கணவன் முனிரத்னம் பின்னால் சென்று கொண்டிருந்தார். எப்போதும் பிஸியான காந்தி சாலையிலுள்ள ஆஸ்பத்திரி அருகே அவர்கள் சென்று கொண்டிருந்தனர்.

திடீரென்று வீறிட்டுக் கிளம்பிய சம்பூர்ணத்தின் குரல் கணவன் முனிரத்னத்தைத் தடுமாறச் செய்தது. ஏதோவொரு குடும்ப நினைவில் வந்து கொண்டிருந்த அவர் அவசரமாக மனைவியை நோக்கி ஓடினார்.

அங்கே—

சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த மூவர் சாதாரண உடையில், நன்றாகக் குடித்து விட்டுச் சம்பூர்ணத்தின் கையைப் பிடித்து இழுத்துக் கன்னத்தைக் கிள்ளி விளையாடிக் கொண்டிருந்தனர்.

"டோய்... என் மனைவிடா இவ. கையை வைச்சீங்க, தொலைஞ்சீங்க!" — ஆத்திரத்தில் அந்தக் கணவனின் வாயிலிருந்து வார்த்தைகள் நெருப்புத் துண்டங்களாகத் தெறித்து விழுந்தன.

"நாங்க போலீஸ்காரங்கடா, யார் கையை வேணும்னாலும் புடிச்சு இழுப்போம். நீ யார்டா கேக்கறதுக்கு?" — இது அந்தப் போலீஸ்காரர்கள்.

இதற்குள் இந்தச் சண்டையைக் கேட்டுக் கூட்டம் கூடி விட்டது. பொது மக்கள் அந்தப் போலீஸார் மூவரையும் கையும் களவுமாகப் பிடித்து 'செமை' உதை உதைத்து, காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். செல்லும் வழியிலேயே மூன்று போலீஸ்காரர்களில் இருவர் தப்பித்துக் கொண்டு சென்று விட்டனர். ஒருவரை மட்டும் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றனர். ஆனால் போலீஸாரோ வழக்குப் பதிவு செய்ய மறுத்தனர்!

அதனால் சுமார் முந்நூறு பேர்களைக் கொண்ட பொதுமக்களின் கூட்டம் சோளிங்கர் போலீஸ் ஸ்டேஷன் முன் திரண்டு நின்று போட்ட கோஷம் போலீஸ் ஸ்டேஷனையே நடுங்கச் செய்தது. அந்தச் சமயம் சப்—இன்ஸ்பெக்டரும் ஸ்டேஷனில் இல்லை. போலீஸ்காரர்கள் ஒயர்லெஸ்ஸில் அரக்கோணத்துக்கும், வேலூருக்கும் தகவல் அனுப்பி, போலீஸ் படைகளை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தனர். மக்களோ, 'பிடிபட்ட போலீஸ்காரர் மீது வழக்குப் போடும் வரை நாங்கள் நகர மாட்டோம்!' என்று உறுதியாகச் சொல்லிவிட்டு ஸ்டேஷன் முன்பே அமர்ந்து விட்டனர்.

கூட்டத்திலிருந்த டைலர் சுந்தரம், பழக்கடை ஆனந்தம், டீ ஸ்டால் பக்தன் போன்றோர் ஆத்திரமுற்ற மக்களைப் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொண்டு, அந்தப் போலீஸ்காரர் மீது வழக்குப் போட்டு, அவரை லாக்—அப்பில் வைத்து விடுமாறு போலீஸாரிடம் வாதாடிக் கொண்டிருந்தனர்!

இதற்குள் எங்கிருந்தோ இரண்டு லாரி நிறைய சிறப்புக் காவல் படையினர் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அவ்வளவுதான்! அட்டகாசம் ஆரம்பமானது! கையிலிருந்த லத்திகளைக் கண்ணுபின்னாவென்று சுழற்றி மக்களை அடிக்க, மிரண்டு போன மக்கள் காந்தி சாலையில் ஓடப் பின்னர் மக்கள் போலீஸ்காரர்களைத் துரத்த ஒரு மணி நேரம் காந்தி சாலை யுத்தகளம் போலவே காட்சியளித்தது. இதற்குள் நள்ளிரவு தாண்டி மணி இரண்டாகவே, பொது மக்கள் வீட்டிற்குச் செல்லத் தொடங்கினர். ஒருவாறாக அன்றைய கலவரம் ஓய்ந்தது. அந்தப்

பெண்ணைக் கைப்பிடித்து இழுத்த சிறப்புக் காவல் படையினர் மூவரும், இரண்டு லாரி சிறப்புக் காவல் படையினரும் சோளிங்கருக்கு எங்கிருந்து வந்தார்கள்?

சோளிங்கரிலிருக்கும் 'சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ்' என்னும் மில் நீண்ட காலமாகவே இருந்து வரும் ஒன்று. சமீப காலங்களில் டி. வி. எஸ். தொழிற்சாலை போன்று மற்றும்பல தொழிற்சாலைகள் அருகில் முளைத்தன. அந்தத் தொழிற்சாலைகளில், தொழிலாளர்களுக்கு வழங்கும் வசதிகளைப் போலவே தங்களுக்கும் வேண்டும் என்று சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் மில் தொழிலாளர்கள் போராடினர்.

இதற்காகவே புதிய சங்கத்தை அமைத்தனர் தொழிலாளிகள். புது தொழிற்சங்கத்தைப் பிடிக்காத நிர்வாகம்; கலவரம். நிர்வாகம், போலீஸுக்குத் தகவல் அனுப்பி, எப்போதும் காவல் வேண்டும் என்று கூறி, அறுபது சிறப்புப் போலீஸ் படையினரை வரவழைத்து வைத்துக் கொண்டனர். அவர்களுக்கு உணவு, நிர்வாகத்தின் செலவுதான். அந்த அறுபது சிறப்புக் காவல் பண்டயினரில் மூவர்தான் கடைத் தெருவில், சம்பூர்ணத்தின் கையைப் பிடித்து இழுத்தனர். பின் லாரிகளில் ஏறிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தவர்களும் அவர்களே!


பதினேழாம் தேதி நடந்த சம்பவத்துக்குப் பிறகு, போலீஸார், மக்களை வேட்டையாடத் துவங்கி விட்டனர். தெருவில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் பழக்கடை வியாபாரிகள், இரவுக் காட்சி சினிமா பார்த்து விட்டு வருபவர்கள் என்று யாரைக் கண்டாலும் 'தர்ம அடி' போட்டுக் கொண்டிருந்தனர்.

அதனால் இரவு எட்டரை மணிக்கே மக்கள் வெளியே வரப் பயந்தனர். இரவுக் காட்சி சினிமாவுக்குக் கூட்டம் குறைந்தது. போலீஸார் சில குறிப்பிட்ட நபர்களைக் குறி வைத்து வேட்டையாடத் துவங்கினார்கள். டைலர் சுந்தரம், பழக்கடை ஆனந்தம், கோவிந்தன் (மீன் பிடிப்பவர்) என்று 64 நபர்களைத் தேடினார்கள்.

இதில் சுந்தரம் வேலூருக்குத் தப்பி ஓடி, போலீஸில் சரணடைந்து பின்னர் ஜாமீனில் வெளி வந்துவிட்டார். பழக்கடை ஆனந்தம், ஊருக்கு வெளியே ஏரிக்கரையில் படுத்துறங்கினார். தேடி வந்த போலீஸாரிடம் ஆனந்தத்தின் மனைவி, ''வீட்டில் அவர் இல்லை'' என்று கூறியதும், ''ஏண்டி புருஷனை எங்கே ஒளிச்சு வைச்சுட்டே?'' என்று திட்டிக் கொண்டே அவரை சாத்தோ சாத்து என்று சாத்தியிருக்கிறார்கள்.

நரசிம்மன் என்றொரு பழவியாபாரி, இரவு வண்டிமேல் படுத்துறங்கிக் கொண்டிருந்திருக்கிறார். அவரைத் தட்டி எழுப்பிய போலீஸ்காரரிடம், என்ன ஏது என்று கேட்பதற்குள்ளேயே பத்துப் பதினைந்து அடிகள் அவர் மீது விழுந்தன! 'கல்கி' உட்பட பல பத்திரிகைகளின் ஏஜெண்டான கிருஷ்ணமூர்த்தி என்ற இளைஞர் கடையில் படுத்துக் கொண்டிருந்த போது, அவரை எழுப்பியிருக்கிறார்கள் போலீஸார். 'ஸார் நான் இந்தக் கடைக்காரன். பத்திரிகை ஏஜெண்ட்!' என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் பயங்கரமான அடி. அந்த அடியால் இப்போது அவர் கையில், மூன்று அங்குல நீளத்திற்கு ரத்தம் கட்டியிருக்கிறது. அதேபோல் மக்கடை பக்தன் மீது, போலீஸார் வெந்நீர் பாய்லரைத் தள்ளிவிட பக்தனின் உடலில் பாதி வெந்து போய் விட்டது. கணேசன் என்றொரு அ. தி. மு. க. தொண்டர். அ. தி. மு. க. எம். எல். ஏ.விடம் வேலை செய்து கொண்டிருந்தவர். அவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டி வந்து ஜட்டியுடன் நிற்க வைத்துச் சுற்றிச் சுற்றி வந்து அடித்தார்களாம் போலீஸார். இப்படி ராஜேந்திரன்,

* இரண்டாவது கலாட்டா ஆரம்பமான சாராயக் கடை.



முனிரத்னம் என்று அடிவாங்கியவர்களின் எண்ணிக்கை ஏறிக் கொண்டே போகிறது!

இந்தப் போலீஸ் அட்டகாசங்கள் நடக்கும் போது — முதல் சம்பவம் நடந்து எட்டு நாட்கள் கழித்து — 26—ம்தேதி காந்தி சாலையிலுள்ள ஒரு கல்யாண மண்டபத்தில் ஒரு போலீஸ்காரர் வீட்டுக் கல்யாணம் நடந்தது. அதில் ஆவடி சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த ஆறு போலீஸ்காரர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் மூவர், பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில் உள்ள சாராயக் கடையில் சாராயத்தைக் குடித்துவிட்டு, காசு கொடுக்காமல் தகராறு செய்திருக்கிறார்கள். காசு கேட்ட கல்லாப் பையனைத் தாக்கியிருக்கிறார்கள். சாராயக் கடையின் உரிமையாளர் அசோகன் விரைந்தோடி வந்து விசாரித்த போது அவருக்கும் பலமான அடி விழுந்திருக்கிறது.

ஏற்கெனவே போலீஸ் மீது மிகுந்த வெறுப்புக் கொண்டிருந்த பொது மக்கள் அந்தமூன்றுபோலீஸ்காரர்களையும்பிடித்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டி வந்தனர். கல்யாண மண்டபத்தைத் தாண்டித்தான் போலீஸ் ஸ்டேஷனுக்கு வர வேண்டும். அப்போது கல்யாண மண்டபத்தின் வாசலில் இருந்த போலீஸ்காரர்கள், தமது சகாக்களை பொது மக்கள் இழுத்துக் கொண்டு வருவதைப் பார்த்தவுடன், தடுத்து நிறுத்தி விசாரிக்கத் துவங்கியிருக்கிறார்கள். தரணி என்றொரு ஏட்டு போலீஸ்காரர்களுக்குத் தாம் பொறுப்பு ஏற்பதாகவும், அவர்களை விட்டு விடும்படியும் கேட்டுக் கொண்டாராம். சரி என்று ஒப்புக் கொண்டனர் பொது மக்கள்.

ஆனால்சிறிதுநேரத்திலேயேமூன்றுபேரில் இருவரைக் காணவில்லை. பொது மக்கள், பொறுப்பை ஏற்றுக் கொண்ட தரணி என்ற அந்த ஏட்டைப் பிடித்துக் கொண்டார்கள்.

இதற்கிடையில், கல்யாணத்துக்கு வந்தவர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையே பலத்த மோதல் ஏற்பட அங்கு விரைந்தது போலீஸ்! லத்தி சார்ஜ் செய்து கூட்டத்தைக் கலைத்தபின், சாராயக் கடை முதலாளி அசோகன், குடித்துவிட்டுக் காசு கொடுக்காமல் வந்த மூவரில் ஒருவர் ஆகியோரை ஸ்டேஷனுக்குக் கூட்டி வந்தனர். அசோகன் மீது நான்கு செக்ஷன்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.


இந்தச் சம்பவத்துக்குப் பிறகு போலீஸ்காரர்களுக்குப் பொது மக்களைப் பழிவாங்கும் உணர்வு அதிகமாகி விட்டது. அதனால் முதல் சம்பவத்தில், கல்லெறிந்து கலாட்டா செய்ததாக 64 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர். தெருத் தெருவாகச் சென்று வேட்டையாடிப் பதினாறு பேரைக் கைது செய்தனர். மற்றவர்கள் இதுவரை போலீஸில் மாட்டிக் கொள்ளாமல், வெளியூருக்குச் சென்றும், இரவு நேரத்தில் ஊருக்கு வெளியே படுத்துறங்கியும், தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இரண்டு சம்பவங்களினாலும், அதைத் தொடர்ந்து நடந்த கலாட்டாக்களினாலும் சோளிங்கர் நகர மக்கள் அனைவருமே பீதியினால் நடுங்கிக் கொண்டிருக்

* நரசிம்மன்.



* சம்பூர்ணத்தின் கையைப் பிடித்து இழுக்க இடம்...





* போர்க்களமான காந்தி தெரு-

கின்றனர். எந்த நேரத்தில் வீட்டுக் கதவைப் போலீஸார் தட்டுவார்களோ என்ற பயம் மனத்தில் உறுத்தத் தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அந்த நகரத்தில் பழைய எம்.பி. வேலு, (காங்கிரஸ்) பழைய எம்.எல்.ஏ. கோபால் (அ.தி.மு.க.) ஆகியோர் வசித்தும், போலீஸாரின் அக்கிரமங்களை அவர்கள் தட்டிக் கேட்கவில்லை என்று வருத்தப்படுகிறார்கள் பொதுமக்கள். ஆனால் அ.தி.மு.க. வினரோ, கோபால் ஓரளவு தலையிட்டதனால்தான் நிலைமை சீரடைந்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். இந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ. சண்முகம் (அ.தி.மு.க.) இதுவரை சோளிங்கர்பக்கமே எட்டிப் பார்க்கவில்லையாம்!

போலீஸ் வட்டாரத்தில் விசாரித்த போது, பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்த விஷயத்தில் சம்பந்தப்பட்ட சிறப்புக் காவல் படையினர் இருவர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதாகவும், சாராயக்கடை விவகாரத்தில் சம்பந்தப்பட்ட போலீஸார் மூவரும் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிய வந்தது. பொதுமக்கள் சொல்வது மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கிறது என்றும், பொதுமக்கள் பொறுப்பற்று நடந்து கொண்டு, போலீஸ் ஸ்டேஷனையும், போலீஸ்காரர்களையும் தாக்கினர் என்றும், போலீஸார் கூறுகின்றனர். ஆனாலும் சப் – இன்ஸ்பெக்டர் எல்லப்பன் வேறு ஊருக்கு மாற்றப்பட்டிருக்கிறார்!

வழக்குப் பதிவு செய்யப்பட்ட 64 பேரில் 58 பேர் வன்னியர் குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சென்னைக்குச் சென்று அந்தக் குலத்தைச் சேர்ந்த 'சக்தி' வாய்ந்த ஒரு அமைச்சரைப் பிடித்து வழக்கை வாபஸ் பெறும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்களாம்!

கடந்த ஒரு மாதமாகக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் சோளிங்கரில் அமைதி திரும்புமா? அரசு நியாயம் வழங்குமா? கேள்விக் குறியோடுதான் முடிக்க வேண்டியிருக்கிறது!

– ப்ரியன்.

படங்கள்: (ராதாகிருஷ்ணன்) சுபா.



பிலிப்பைன்ஸில் நடந்த நான்காவது சர்வதேசமாரதான் (தொலைதூர) ஓட்டப் பந்தயத்தில் 42.195 கிலோ மீட்டர் தூரத்தை 4 3/4 மணி நேரத்தில் ஓடிக் கடந்து வெற்றி பெற்றிருக்கிறாள் இந்த ஜப்பானியச் சிறுமி. பெயர் யயாமோ கோஜிமா. வயது ஏழு. உயரம் 1.2 மீட்டர். இவள் ஓட்டப் பந்தயத்தில் ஓடி வரும் போது வழியெல்லாம் பார்வையாளர்கள் மகிழ்ச்சிப் பெருக்கோடு ஆரவாரம் செய்து உற்சாகமூட்டியிருக்கிறார்கள்.

தகவல்: வியன்னு.

கிராண்ட் ஸ்வீட் ருசி எப்படியிருக்கும்?

கடவுள் பெயரைச் சொல்லுவது போல இருக்கும்.

இனிப்பு வகைகள்:

1. அதிரசம்
2. பாம்பே பாதுஷா
3. தேங்காய் போளி
4. குங்குமப்பூ கோதுமை அல்வா
5. குங்குமப்பூ ஜாங்கிரி
6. குங்குமப்பூ லட்டு
7. மேங்களூர் போளி
8. பொரிவிளங்காய் உருண்டை
9. இனிப்பு சோமாஸ்
10. ரஸகுலா
11. ரஸ மலாய்

கார வகைகள்:

1. கைமுறுக்கு
2. காரசேவ்
3. முள்ளு தேன்குழல்
9. மிளகு வடை
5. ரிப்பன் பக்கோடா
6. ஸ்பெஷல் மிக்சர்
7. சீடை
8. தட்டை
9. தேன்குழல்
10. சமோசா
11. உருளைக்கிழங்கு சிப்ஸ்

பொடி வகைகள்: சாம்பார்ப் பொடி, ரசப்பொடி, இட்லி மிளகாய்ப் பொடி வகைகள் முதலியவைகள்.
கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, திரட்டுப்பால், அதிரசம், பருப்புத் தேங்காய் முதலியன தயாரித்துத் தருகிறோம்.

கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2—வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை—20 போன்: 412557.

கிளை: காமதேனு சூப்பர் மார்க்கெட் தேனாம்பேட்டை, சென்னை—18.

ஸ்தாபிதம் 1942 போன் 2379

'சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு'

# கும்பகோணம் லலிதா பார்மஸி

(D. L., No - 40)

157, பட்டமங்கலத்தெரு மயிலாடுதுறை PIN. 609001

பிராஞ்ச், 39, ரெங்கனாதன்தெரு தி. நகர்,
சென்னை - 17 போன் No. 441454

105, கச்சேரிரோட், மயிலாப்பூர், சென்னை - 4
போன் No. 73007

'எமது விசேஷ தயாரிப்புகள்'

(1) மதுயஷ்டி தைலம்" கூந்தல் வளர்ச்சிக்கு உதவ"

(2) நீலிப்ருங்காமலக தைலம்" அகாலநரை, செம்பட்டை, கேச வரட்சியை போக்கி கூந்தலுக்கு கருமையும் குளிர்ச்சியும் தர

(3) யௌவநீ ரஸாயனம்" ஆண்களுக்கான சிறந்த டானிக்

# "அஞ்சுக்த மூணு காதிலேயே நிக்குது"

## நானே ராஜா நானே மந்திரி

"குட்மார்னிங், பாலு ஆனந்த் இருக்காரா?"

"டைரக்டர் சார், உங்களுக்குத்தான்."

"ஹலோ, பாலு ஆனந்த் ஹியர்."

"கையைக் கொடுங்க புது டைரக்டர் சார். மொதல் படமே பேசும்படியா பண்ணியிருக்கீங்க."

"சந்தோஷங்க!"

"எடுத்தவுடனேயே சுறுசுறுன்னு சூடு பிடிக்கிற காட்சி. பண்ணையார் விஜய்காந்த் கூத்தைப் பார்க்க வராரு. என்ன பந்தா — என்ன பதவிசு! அந்த காரெக்டரை நீங்க நல்லா ஷேப் பண்ணியிருக்கீங்க. விஜய்காந்தும் கப்புன்னு பிடிச்சுக்கிட்டு நடிச்சிருக்காரு. பேப்பர்ல விளம்பரம் கொடுத்துப் படிச்ச ஆளுங்களை இண்டர்வியூவுக்குக் கூப்பிட்டு அவரும், அவரோட சிஷ்ய கோடிகளும் அடிக்கற கூத்து அப்படியே மனசுல நிக்குது. 'எம். என் னி. படிச்சிருக்கேன்றியே, பதினொண்ணுவதை முடிச்சிட்டியா?' ன்னு அவர் கேக்கப் போய் அத்தனை பேரும் துண்டைக் காணோம் துணியைக் காணோம்னு ஓடிப் போயிடறாங்க. அப்புறம் ராதிகா வந்து வேலைல சேருவதும், அவங்களை எப்படியாவது கௌப்பிடணும்னு விஜய்காந்த் அண்ட் கோவும் அடிக்கற லூட்டியும் நல்லாயிருக்குது."

"விறுவிறுப்பா இருக்கணும்னு ஆசைப்பட்டேங்க."

"விறுவிறுன்னுதான் போயிட்டிருக்கு. தங்கிட்ட விஜய்காந்த் நடந்துக்கிற முறையை வச்சு ராதிகா தப்புக் கணக்குப் போட்டுட்டு ஜீவிதாவைத் தான் விஜய்காந்த் கல்யாணம் செய்துக்கப் போறாருன்னு தெரிஞ்சதும் அதிர்ச்சியடைஞ்சு நிக்கறாரே, அங்கேயே படமும் அதிர்ச்சியோட நின்னு போயிடுது. அப்புறம் ஜீவிதா விஜய்காந்தை வெறுக்கிற மாதிரி நடிக்கறதும், ராதிகா சமாதானம் செய்யறதும்னு ஐடியாப் பஞ்சம் வந்த மாதிரி படம் இழுக்க ஆரம்பிச்சுடுது."

"ஓவராப் போய்டுச்சுங்களா?"

"க்ளைமாக்ஸ் வரைக்கும் நொண்டுது கதை. கவுண்டமணியோட லைட் கதையும் ஒட்டாமலேயே வந்து இடைஞ்சல் பண்ணுது. எத்தனை நாளைக்குத்தான் சாமியார் வேஷம் போட்டுச் சிரிக்க வைக்க முயற்சி பண்ணப் போறாரோ தெரியலே."

"க்ளைமாக்ஸ் எப்படிங்க?"

"விஜய்காந்துக்குக் கொடுத்த பண்ணையார் காரெக்டருக்கு முழு உயிரும் க்ளைமாக்ஸில வருது. முட்டாள் தனமான பிடிவாதத்தோட ராதிகாவோட கழுத்துல தாலி கட்டறதும், அவர் ஆத்திரம் தாங்காம மூஞ்சில அடிச்ச மாதிரி பேசினதும், ஜீவிதா கழுத்துல தாலியைக் கட்டிக் கூட்டிட்டுப் போறதும் நல்லாத்தான் இருக்குது. ஆனால்..."

"என்னங்க ஆனால்?"

"கட்டாயமாக் கட்டுன தாலியைத் தூக்கி எறிஞ்ச ராதிகா, எல்லாரும் போனதும் மறுபடி அதை எடுத்துக் கழுத்தில கட்டிக்கிட்டு விசும்பற போது அந்த காரெக்டர் அடிபட்டுப் போகுது."

"பொம்பிளைங்க மனசு ரொம்ப மிருதுவானதுங்க."

"அதுதான் போகட்டும். கடைசில ஸ்லேட் போட்டுக் காட்டிப் பின்னணில அதைப் படிச்சு வேற காட்டணுமா. — அமெச்சூர்தனமா இருக்குது. முக்கியமா இன்னொருத்தரைப் பாராட்ட விட்டுப் போச்சு."

"இளையராஜாதானே?"

"ஆமா, அந்த பாட்டுல மூணு காதுலயே நிக்குது."



## உன்னைத் தேடி வருவேன்

''மனோரமா ஸ்பீக்கிங்.''

''ஒரு மலரின் பயணம்னு ஒரு படத்தில நடிச்சிங்களே. இப்பத்தான் வெளியே வந்த படம்.''

''நீங்களும் கேக்கப் போறீங்களாக்கும். அந்தப் படத்தில வர்ற மாதிரி சின்னச் சின்னப் பொருளைத் திருடும் பாத்திரம் மறுபடி ஸ்ரீதர் படத்திலயும் வந்திருச்சன்னுதான சொல்லப் போறீங்க?''

''பத்து வருஷம் முன்னால வந்த படத்தை ஆர்ட்டிஸ்ட்டை மாத்திப் போட்டுப் புதுசாப் படம் எடுக்கறதைப் பாத்திருக்கோம். ஆனா கிட்டத்தட்ட ரெண்டு மாச இடைவெளில அதே நட்சத்திரம் அதே மாதிரி ரோல்போட்டு ஆடியன்ஸுக்குச் சிரிப்பு மூட்ட நெனைக்கறது ஆச்சரியமாயிருந்தது.''

''ஏதோ தப்பாயிடுச்சு, விட்டுத் தள்ளுங்க.''

''மத்தபடி ஸ்ரீதரோட புதுப்படத்துல தேங்காயோட பாத்திரம் அட்டகாசமா இருக்கு. க்ளைமாக்ஸ் நெருங்கற நேரம் கொலைகாரன் கிட்ட, மாட்டிக்கிட்டு கெடு நேரம் நெருங்க நெருங்க அவர் தவிக்கக்கிட்டு 'இந்தக் கடிகாரத்தை நம்பாதேப்பா, இது ஸ்விட்சர்லாந்துல வாங்கினதில்ல. என் மச்சான் லோக்கலா நாலேஞ்சு பார்ட்டை அஸெம்பிள் பண்ணின கடிகாரம்'னு சொல்றப்ப, கலகலன்னு சிரிப்பு வருது. வில்லனைப் போட்டிருக்காங்களே விஜேந்த்னு ஒரு புதுமுகத்தை

# "ஸ்ரீதருக்கு என்ன குழப்பம்?"

—தாடியெல்லாம் வச்சு முரட்டுத்தனமா மாத்திவிருந்தா கூட கண்ல கோபமே இல்லியே அவரிடம்? காமிராவைப் பாத்து பயமா?''

''இந்தக் காலத்துப் பசங்களுக்குக் காமிரா பயமாவது வேறொண்ணாவது?''

''நெஜம்தான். சாதனாவும் சுரேஷும் கனவு ஸீன்ல தண்ணில நனைஞ்சுக்கிட்டே பாட்டு முழுக்க வளைய வராங்களே, காமிரா பயமே இல்ல ரெண்டு பேருக்கும். அத்தனை கிளுகிளு ஸீன் அது. ஆனா பாருங்க ஸ்ரீதர் கொஞ்சம் கொழம்பியிருக்காரு.''

''அவருக்கு என்ன கொழப்பம்?''



''கொலைகாரன் — மிரட்டல்னு திகிலா படத்தை ஆரம்பிச்சுட்டாரு. அப்புறம் மெதுவா முக்கோணக் காதல்னு எறங்கிட்டாரு. சாதனாவும் நளினியும் போட்டி போட்டுக்கிட்டு சுரேஷை லவ் பண்ற காட்சிங்களை அடுக்கிட்டே போறாரு. தியாகம், நட்பு எல்லா மசாலாவும் சேர்த்து ஒரு மாதிரி ஷேப் ஆனதும் மறுபடியும் உன்னைத் தேடி வருவேன்னு வில்லன் துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டுக் கௌம்பிடறாரு. இளையராஜா ரீரெகார்டிங்ல பிரமாதமா திகில் மியூஸிக் கொடுத்திருக்காரு. ஆனா காட்சி அமைப்பில திகில் கொறைச்சலா இருக்குது.''

''பாட்டுல்லாம் எப்படி?''

''பரவாயில்லே டைப். மொத்தத்தில படத்தில கிளுகிளுப்பும் கொறைச்சல். திகிலும் கொறைச்சல். சாம்பாரையும், பாயஸத்தையும் கலந்து போட்ட மாதிரி ஆயிடுச்சு.''

**—ஜெயமன்மதன்.**

## ஹெல்மெட் ஹெல்மெட்

* இத்தனை நாளா என் ஹெல்மெட்டை மட்டுந்தான் தூக்கிக்கிட்டு அலைஞ்சிண்டிருந்தேன். இப்போ என் வொய்ஃபை ஆஃபீஸ்ல விட்டுட்டு அவளுதையும் தூக்கிக்கிட்டுப் போக வேண்டியிருக்கு.

* காலைல ''ஹஸ்பெண்ட் ஆஃபீஸ்ல கொண்டு வந்து விட்டுட்டாரு. 'சாயங்காலம் பஸ்ல போய்டு'ன்னு நாலு மணிக்கு ஃபோன் பண்ணிச் சொன்னார். கடைசில ஹெல்மெட்டைக் கைல எடுத்துக்கிட்டு பஸ்ல வர வேண்டியதாப் போச்சு

* இந்த சர்தார்ஜிங்க கில்லாடிங்கப்பா. இந்தியாவுலதான் அவங்க ஹெல்மெட் போட்டுக்க வேணாம்னு இல்ல. லண்டன்ல கூட கேஸ்ல ஜெயிச்சு, எக்ஸெப்ஷன் வாங்கிட்டாங்களே!

* பெண்களுக்கான ஹெல்மெட்டுகளில் இனி பூ மாதிரியான டிசைன்களைப் போட்டா ஏகமாக விக்காதா? கண்டிப்பா விக்கும்!

—இந்து....

நீங்கள் ஏன் ஒரு மிகச் சிறந்த திட்டத்தில் முதலீடு செய்ய வேண்டும்...

14.25%

வருடா வருடம் யூனிட்டுகள்
மேன்மேலும் அதிக டிவிடெண்டுகளை அளித்து வருகின்றன.

# UNITS

1984-85க்கான டிவிடெண்ட் 14.25 சதவீதம்!

ஜூலை முழுவதும் யூனிட்டுகளை மிகக் குறைந்த விலையில் வாங்கலாம். வருடத்திலேயே மிகக் குறைந்த விலை ரூ. 12.75 தான்!

யூனிட்டுகள் உங்களுக்கு ஏராளமான பலன்களை அளிக்கின்றன.

வருடா வருடம் யூனிட்டுகள் மேன் மேலும் அதிக டிவிடெண்டுகளை அளித்து வருகின்றன. இந்த வருடம் 14.25% டிவிடெண்ட் அளித்துள்ளன! யூனிட்டுகளை எளிதாகவும், விரைவாகவும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

மேலும் யூனிட்டுகள் உங்கள் முதலீட்டிற்கு பாதுகாப்பு அளிக்கின்றன. விசேஷ வரிச் சலுகைகளும் உண்டு!

யூனிட்டுகளை வாங்குவதோ மிகச் சுலபம்! அருகாமையில் உள்ள எங்கள் அலுவலகங்களிலோ அல்லது வங்கிகள் மற்றும் முக்கிய தபால் நிலையங்களிலோ நீங்கள் யூனிட்டுகளை வாங்கலாம். மேலும், எங்கள் முக்கிய பிரதிநிதிகள் அல்லது ஏஜெண்டுகளிடம் இருந்து விவரம் அறியலாம்.

இன்றே யூனிட்டுகளில் முதலீடு செய்வீர். பதினைந்து லட்சத்திற்கும் மேலான மக்களின் நம்பிக்கையை யூனிட்டுகள் பெற்றுள்ளன!

**யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா**

தலைமை அலுவலகம்: பம்பாய்-20

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்)
பிராந்திய செயலகம்: ரெஜினா மான்ஷன்
46, செகண்ட் லைன் பீச்,
சென்னை 600 001.
போன்: 27433/24146

கேரளா செயலகம்:
12/758, தெக்கே மடம் சாலை,
திருச்சூர் 680 001, போன்: 24690

ஆந்திர பிரதேஷ் செயலகம்:
27-11-68 மேரி சாலை, கவர்னர்பேட்,
விஜயவாடா 520 002. போன்: 63964

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

தமிழ்நாட்டிலுள்ள எங்கள் முக்கிய பிரதிநிதிகள்:- திரு. எ. தனபால், கோயம்புத்தூர், போன்: 34776 (O). திரு. எம். ராமமூர்த்தி, மதுரை, போன்: 30160 (O) 43179 (R). திரு. கே. முத்துசாமி, தஞ்சாவூர், போன்: 1224 (R). திரு. என். கே. இங்கர்சால், சேலம், போன்: 51520 (R). திரு. எம். ராமலிங்கம், திருச்சிராப்பள்ளி, போன்: 28280 (O). திரு. பி. நாராயணன், வேலூர், போன்: 21575 (O).

Sista's - UTI.328.85 TM A

வாரம் ஒரு கடிதம்

கவிஞர் வைரமுத்து

# உணவையே மருந்தாக்கிக் கொள், இளைஞனே!

ஒளி படைத்த கண்ணனே!

உறுதி கொண்ட நெஞ்சனே!

உணவு கொள்ளுதல் என்பது ஒரு கலையென்றும் அது ஒரு வாழ்க்கை முறை என்றும் நீ அறிந்து வைத்திருக்கிறாயா?

"உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே!" என்ற ஞான வாசகம் நமக்குச் சொல்வதென்ன?

உடம்புதான் உயிர்; உயிர்தான் உடம்பு.

நோயில் விழுந்து, பாயில் படுக்கும்போதுதான் நம்மில் பலருக்கு உடலோம்ப வேண்டும் என்ற உணர்ச்சியே வருகிறது.

உடலோம்புதல் என்ற கலையைக் கல்வி நடைமுறையில் நமக்குக் கற்றுத் தரவில்லை.

பல்துலக்கும் முறையையே விளம்பரப் படத்தில் ஒரு டாக்டர் வந்துதான் நமக்குச் சொல்லித் தர வேண்டியிருக்கிறது.

உடம்பை ஒருகோயில்என்றுசொன்னவர்கள் எதற்குச்சொன்னார்கள் என்றுஎண்ணிப் பார்க்கிறேன்.

கோயில் வணங்குதற்குரியது என்ற கருத்து இருப்பதைப் போலவே உடம்பும் வணங்கப்பட வேண்டும்; உடம்பும் வணங்க வேண்டும் என்ற கருத்தில்தான் என்று அர்த்தப்படுத்திக் கொண்டால் நமக்கு அதில் நஷ்டமில்லை.

உடல் உழைப்பு குறைவாக இருக்கிற ஒரு தொழிலைச் செய்து கொண்டிருக்கிற நான், உணவு என்னைச் சாப்பிட்டுவிடக் கூடாது என்பதில் உறுதியாய் இருக்கிறேன்.

ஸ்பார்டைஸ் என்ற அறிஞன், "சிங்கத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு போதும் — மனிதனுக்கும் அதுவே போதும்" என்றான்.

ஆனால், இந்த வாசகத்தை நான் வயதான சிங்கத்திற்கு என்று திருத்தி வாசித்துக் கொள்கிறேன்.

ஆனால், நம் சமகால இளைஞர்களுக்கு உணவை விடத் தேநீர்தான் தேவபானமாக இருக்கிறது.

மருத்துவமனையில் மயங்கிக் கிடக்கும் இளைஞனுக்கு ரத்தத்தைவிட ஒரு பாட்டில் தேநீர் ஏற்றினால் உற்சாகம் வந்துவிடும் போலிருக்கிறது.

அடிக்கடி பருகும் இந்தப் பானங்கள் வயிற்றுக்குள் வாயுவை வளர்க்கின்றன.

செரிமானத்தைத் தாமதப்படுத்துகின்றன.

"உண்பது வாழ்வதற்காக; வாழ்வது உண்பதற்காக அல்ல" என்ற உண்மையை வியாதிகள் வந்துதான் நமக்கு விளக்க வேண்டும் போலிருக்கிறது.

நமது கல்வி பெரும்பாலும் மூளையைச் சார்ந்தே இருப்பதனால், உடலோம்புதல் என்பது அவனவனுக்கு அந்தரங்க விஷயமாகவே ஆகிவிடுகிறது.

நமது உணவு முறை என்ன? ஒழுக்க முறை என்ன? என்பது பற்றிய வரைமுறை இங்கு இல்லை.

பசிக்காகச் சாப்பிடுவது என்பதைவிட ருசிக்காகவே சாப்பிடுவது என்ற ஒரு் கூட்டத்தை நாம் உற்பத்தி செய்துவிட்டோமா?

ருசிக்காகச் சாப்பிடுவது என்பது இளமையில் ஒரு குற்றமல்ல.

இங்கு பலபேர் வயிறு இடும் வேண்டுகோளை நிராகரித்துவிட்டு, கடிகாரத்தின் கட்டளைக்காகவே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் ருசிக்கு நானும் அடிமை என்ற போதிலும் கால் வயிறு காலியாய் இருக்கும்போதே கை கழுவி விடுகிறேன்.

நோய் நாட்களையெல்லாம் ஒரு மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே இறந்து விட்ட நாட்களாகத்தான் நான் கருதுகிறேன்.

இனியவனே! இளைஞனே!

உணவுக்குப் பிறகு மருந்து தேடுவதைவிட உணவையே மருந்தாக்கிக் கொள்வது உயர்ந்ததல்லவா?





# உலகம் வியக்கும் பாலகன்

ஜூலை மாதத் தொடக்கத்தில் "**Boris Becker** யார்?" என்று கேட்டால் அநேகமாக ஒருவருக்கும் தெரிந்திருக்காது. ஆனால் ஏழு தினங்கள் சென்று கேட்டாலோ, போரிஸ் பெக்கரைத் தெரியாதவர் அநேகமாகக் கிடையாது! அப்படி ஒரே நாளில் உலகப்புகழ்பெற்றார் இந்த இளைஞர்—விம்பிள்டன் சாம்பியன் ஆனதன் மூலம்.

இளைஞர் ஆண்டு என்பதால் விம்பிள்டனில் சாதனைகள் பல புரிந்து கொட்டை போட்டவர்களையெல்லாம் வென்றுஓர் இளைஞர் அந்தக் கோப்பையைக் கொத்திக் கொண்டு போக வேண்டும் என்று விதித்திருந்தது போலும்! ஜெர்மானியர் ஒருவர் விம்பிள்டன் வெற்றி பெற்றதே இல்லை என்ற குறையையும் நிவர்த்தி செய்துவிட்டார் மேற்கு ஜெர்மானிய இளைஞர் பெக்கர்.

ஏழு அவருக்கு ராசியான எண். விம்பிள்டன் இறுதி ஆட்டத்தின் போது அவருக்கு வயது பதினேழு வருஷம், ஏழு மாதம், ஏழு நாள். அன்று தேதியும் ஜூலை 7.

இன்னொரு விசேஷம்: ஜூனியர் விம்பிள்டன் பட்டத்தைப் பெற்ற, மெக்ஸிகோவைச் சேர்ந்த லியனார்டோ லவாலேயை விட இவர் ஒரு வயது இளையவர்!

இறுதி ஆட்டத்துக்கு முன்னதாக விம்பிள்டனில் ஹென்ரி லகான்தேயைச் சந்தித்தார் பெக்கர். பெக்கரிடம் தோற்றுப் போன லகான்தே, "இந்த வருஷம் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு நீதான் விம்பிள்டன் சாம்பியன்" என்று பெக்கரை மனதாரப் பாராட்டினார். அவர் வாக்கு இந்த ஆண்டே பலித்து விட்டது!

. பெக்கரை டீ. வி. யில் பார்த்தவர்கள் அவர் அடிக்கடி கீழே விழுந்து புரண்டு சட்டையையெல்லாம் அழுக்காக்கிக் கொண்டதைக் கவனித்திருக்கலாம். விழுந்து காயம் பட்டாலும் பரவாயில்லை, ஆனால் முயற்சியில் கணக்கம் கூடாது என்ற கொள்கை உடையவர் பெக்கர். சென்ற ஆண்டு விம்பிள்டனில் பந்தைத் தட்ட ஓர் அசுர முயற்சி செய்து விழுந்ததில் கால் மூட்டு புரண்டு விட்டது! 'சரி, பெக்கரின் டென்னிஸ் வாழ்க்கை இதோடு முடிந்தது' என்று அப்போதே முடிவுக்கு வந்து விட்டனர் பலர். ஆனால் கூடவேயிருந்த மஸாஜ் நிபுணர் பாண்டேஜ் கட்ட, உடனேயே எழுந்து ஆடிக் காட்டினார் பெக்கர். அத்தனை வைராக்கியம்.

இவ்வாண்டு 'வெற்றிக்கு வித்திடக் கூடியவர்' என்ற அளவுக்குக் கூட பெக்கரை யாருமே கருதவில்லை! இவரது பயிற்சியாளர் குந்தர் பாஷ் கூட, "விம்பிள்டன் வெற்றி பிறகு வரட்டும்; இப்போதைக்கு அனுபவமாவது பெறலாம் இல்லையா?" என்று சொல்லிக் கொண்டுதான் பெக்கரை அழைத்து வந்தார். பெக்கர் இறுதி ஆட்டம் வரை வந்ததும் கோப்பையை வென்றதும் இவரது பயிற்சியாளருக்கே பெருவியப்பு!

"மற்றொரு மெக்கன்ரோ எப்போதுதான் தோன்றுவாரோ?" என்று கேட்டு வந்தவர்களுக்கு, "இதோ உதித்து விட்டார்" என்று விம்பிள்டன் இறுதி ஆட்டம் இவ்வாண்டு பதில் கூறியுள்ளது. ஆன போதிலும் அந்த விம்பிள்டன் வெற்றி வீரர் என்ன சொல்கிறார் தெரியுமா?


"மெக்கன்ரோ மெக்கன்ரோதான்!"

—குண்டுமணி.

புகைப்படம் நன்றி:
இந்தியன் எக்ஸ்பிரஸ்.

**Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)**

**Assistant Editor: P. S. Mani** **Editor: K. Rajendran**




ஈறுகளை பலப்படுத்துவதற்கான விசேட
அஸ்ட்ரிஞ்ஜெண்ட் அடங்கியிருப்பது ஃபோர்ஹென்ஸ் ஒன்றில்தான்.
உங்கள் ஈறுகள் உறுதியோடிருக்கும் போது உங்கள்
பற்கள் நீடித்த ஆயுளைப் பெறுகின்றன.


சிறந்த அமெரிக்கப் பல் டாக்டர் ஆர். ஜே.
ஃபோர்ஹென், தன்னுடைய டூத் பேஸ்ட்டில் விசேட
அஸ்ட்ரிஞ்ஜெண்ட் ஒன்றைச் சேர்த்தார்! அது.
ஈறுகளில் நேரடியாக செயல்பட்டு உண்மையிலேயே
அவற்றை பலப்படுத்துகிறது. அது, ஈறுகளைப்
உறுதிப்படுத்துவதால் பற்கள் சிறந்த
பிடிமானத்தைப் பெறுகின்றன. ஆகவே பற்களுக்கு
உறுதியான அடித்தளமும் நீடித்த ஆயுளும்
கிடைக்கின்றன.




**ஃபோர்ஹென்ஸ் – பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்**

339F 203 TAM

REGISTERED. No. 4392
Registered as a Newspaper in Sri Lanka




daCunha/TT/180/TM